கபாலகுண்டலா

Y.M.C. ASSOCIATION PAGANERI.
பாகனேரி

PRESENTED BY
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

தமிழ் நாட்டுச் சிறு கதைகள்

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. ராஜாஜி குட்டிக் கதைகள்
3. கன்யாகுமாரி
4. சந்தனக் காவடி
5. சக்ரவாகம்
6. கனகாம்பரம்
7. தோட்டியை மணந்த அரச குமாரி

பங்கிம் சந்த்ரர் நூல் - 11

கபாலகுண்டலா

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர் இயற்றியது

4160

த. நா. குமாரசுவாமி, பி. ஏ.,

வங்காளி மூலத்திலிருந்து மொழிபெயர்த்தது

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

காபிரைட்] [ரூ. 1—8—0

கதைக் கோவை

40 பிரபல எழுத்தாளர் எழுதிய
— 40 தமிழ்ச் சிறு கதைகள் —

கிளேஸ்	...	ரூ. 3—0—0
ஆண்டிக்	...	ரூ. 3—8—0

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

முன்னுரை 4100

'ரொமான்ஸ்' (Romance) என்ற நவீன வகையைச் சார்ந்தது கபாலகுண்டலா. இதன்கண் வரும் அபூர்வமான சொற்சித்திரங்கள் பங்கிம் சந்த்ரர் கவி உள்ளம் படைத்தவ ரென்பதை நிரூபிக்கும். அவருக்கு அழியாப் புகழைத் தருவதற்கு இந்நவீனம் ஒன்றே போதுமான தெனலாம். சீர்திருத்திய பின்பே அவர் இதை வெளியிட்டார். அதனல் பின்வந்த பதிப்புக்களில் அவ்வளவாக மாறுதல்கள் காணப் படவில்லை. இதன் நாலாவது பாகத்தில் 'இடையுரை' என்ற பகுதி முதற்பதிப்பு ஒன்றிலேதான் வருகிறது. வாசகர்களுக்குப் புதிய விருந்தாக இருக்குமென்ற எண்ணத் தால் அந்த அம்சத்தைச் சேர்த்திருக்கிறேன். மூலத்தில், ஒவ்வோர் அத்தியாயத்திற்கும், அவ்வத்தியாயத்தின் கருத் தாக ஆங்கிலக் காவ்ய நாடகங்களிலிருந்தும், ஸம்ஸ்க்ருத வங்கக் கவி வாக்குகளிலிருந்தும் கொளுக்களைப் பங்கிம் அமைத்துள்ளார். அவற்றின் அர்த்தபுஷ்டி கூடியவரை குறையாதபடி உள்ள தமிழ்ப் புலவர்களின் பொன் மொழிகளை அவ்விடங்களில் உபயோகித்திருக்கிறேன்.

த. நா. குமாரஸ்வாமி.

நன்றி பாராட்டு

இலக்கியம், கலைபோன்ற விஷயங்களில் எனக்கு எப்போதும் உதவி செய்ய முன்வரும் அன்பர் ஸ்ரீமான் கி. வா. ஜகந்நாத ஐயரவர்கள் இந்நவீனத்தில் வரும் பாக்கள் இரண்டையும் அமைத்துக் கொடுத்தார். அந்தப் பேருபகாரத்திற்கு எனது நன்றி அவருக்கு உரித்தாகும். பிரபல சித்திரகாரர் ஸ்ரீ ஏ. வி. ராகவன் இந்தக் கதைக்கென வரைந்துள்ள படங்கள் யாவும் அவரது கலைத் திறமையை வெளிப்படுத்துவன.

திருவலிதாயம்
விஷு வருஷம்
சித்திரை மாதம்

இங்ஙனம்
தண்டலம் - நா. குமாரஸ்வாமி
மொழிபெயர்த்தோன்.

பொருளடக்கம்

முதல் பாகம்

பக்கம்

1. ஸாகர ஸங்கமம் ... 1
2. நதிக் கரையில் ... 9
3. தன்னந் தனியே ... 15
4. குன்றின் உச்சியில் ... 20
5. கடற்கரையில் ... 26
6. காபாலிகனுடன் ... 32
7. தேடுதல் ... 42
8. புகலிடம் ... 44
9. சந்நிதியில் ... 57

இரண்டாம் பாகம்

1. போகும் வழியில் ... 65
2. சத்திரத்தில் ... 71
3. அழகியைக் கண்ணுற்ற பின் ... 77
4. சிவிகையில் ஊர்ந்தபோது ... 83
5. சொந்த வீட்டில் ... 86
6. புத்தி புகட்டல் ... 91

மூன்றாம் பாகம்

		பக்கம்
1. முன் நிகழ்ந்தவை	...	103
2. வேறு வழியில்	...	111
3. இகலாள் வீட்டில்	...	116
4. அரசர் மாளிகையில்	...	125
5. தன் அகத்தில்	...	130
6. சேவடியில்	...	136
7. ஊர்ப்புறத்தில்	...	143

நான்காம் பாகம்

இடையுரை	...	149
1. பள்ளியறையில்	...	153
2. கானகத்தே	...	159
3. கனவில்	...	167
4. குறியிடத்தில்	...	171
5. இல்வாயிலில்	...	175
6. மீண்டும் காணல்	...	181
7. காமக் கிழத்தியும் - காதல் மனையாளும்	...	185
8. வீட்டை நோக்கி	...	195
9. மயானம்	...	201
அனுபந்தம் 1	...	207
,, 2	...	209

முதல் பாகம்



பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர்

கபாலகுண்டலா

1

ஸாகர ஸங்கமம்

"செல்யாற்றுத் தீம்புனலிற் சென்மரம்......" — **பரிபாடல்**

இருநூற்றைம்பது வருஷங்களுக்குமுன் ஒரு மார்கழி மாதம்; பின்னிரவு. யாத்திரிகர்களின் படகு ஒன்று கங்கா ஸாகரத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தது. போர்த்துக்கீஸ் கடல்கொள்ளைக்காரர்களின் உபத்திரவம் அக்காலத்தில் அதிகம். அவர்களுக்குப் பயந்து பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் கலங்கள் ஒன்றுக்கொன்று துணையாகச் சேர்ந்தே செல்வது வழக்கம். ஆனால் இந்தப் படகுமட்டும் துணையின்றித் தனியாகச் சென்றுகொண்டிருந்தது. அன்று பின்னிரவில் எழுந்த கனத்த மூடுபனியின் திரையில் திக்குத் திகந்தம் யாவும்

மறைந்துவிட்டன. இதனால் படகோட்டிகளுக்குச் சரியான திசை எதுவென்று புரிபடவில்லை. மற்றப் படகுகளை விட்டு ஒதுங்கி வந்துவிட்டனர். எந்த மார்க்கமாகச் செல்கிறோமென்றுகூடத் தெரியவில்லை அவர்களுக்கு. யாத்திரிகர்கள் நிச்சிந்தையாகத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். ஓர் இளைஞனும், ஒரு கிழவருமே நித்திரையின்றி விழித்திருந்தனர். இருவரும் ஸம்பாஷித்துக் கொண்டிருந்தனர். நடுநடுவே பேச்சை நிறுத்திவிட்டுக் கிழவர் படகுக்காரர்களை விளித்து, "இன்றைக்கு எவ்வளவு தூரம் போகும் படகு?" என்பது போன்ற கேள்விகளைக் கேட்பார். நாவிகர்களும் தயங்கிய வண்ணம், "எங்களால் எப்படிச் சொல்லமுடியும்? சாமீ" என்பார்கள்.

கிழவர் முன்கோபி. சரியான பதில் அவர்களிடமிருந்து வராமற் போனால் படகோட்டியை வாயில் வந்தபடி சபிப்பார். அச்சமயம் இளைஞன், "ஈசன் செயலினால்தான் எல்லாம் நடக்கிறது. நம்மைப் போன்ற அறிவாளிகளுக்கே இன்னதென்று தெரியாதிருக்கும் போது, இந்தப் பாமரர்களுக்கு எங்ஙனம் தெரியப் போகிறது? நீர் எதற்காக இப்படித் திகிலடைகிறீர்?" என்று வினயமாகச் சொல்லுவான்.

கிழவர் வெடுவெடுப்புடன், "எப்படி என்றால் சும்மா இருக்க முடியும்? என் இருநூறு காணி நிலங்களில் விளைந்த பயிரை அறுத்துக்கொண்டு போய்விட்டார்களே, ஐயோ! அந்தக் கொள்ளைக்காரப் பாவிகள்! இந்த வருஷம் எதை வைத்துக்கொண்டு தின்பது?

என் மக்களுக்கு யார் சாப்பாடு போடுவார்கள்?" என்றெல்லாம் அரற்றுவார்.

போர்த்துக்கீஸியர் தானியங்களைக் கொள்ளையடித்த செய்தி கங்கா ஸாகரத்திலிருந்து திரும்பி வரும்போது சில யாத்திரிகர்கள் சொல்லத்தான் கிழவருக்குத் தெரிய வந்தது.

"நான் அப்போதே சொன்னேன், ஊரில் நிலங்களைப் பார்த்துக்கொள்ளச் சரியான ஆட்கள் இல்லையென்று. நீங்கள் வந்தே இருக்கக்கூடாது" என்றான் யுவகன்.

முன்போல் உக்கிரமாகவே அந்தக் கிழவர், "ஏன் வரக்கூடாது? மூன்றுதரம் கோடித்து இந்தத் தடவை தான் யாத்திரை குதிர்ந்தது. பின் என்றுதான் பரகதிக்கு நான் புண்ணியம் தேடிக்கொள்வது? அப்பனே!" என்றார்.

இளைஞன்: பெரியவர் நீர்; சாஸ்திரங்களைக் கண்டறிந்தவர். இந்தப் புண்ணியத்தை வீட்டிலிருந்தபடியே சம்பாதித்துக்கொள்ள வழியே இல்லையா, ஸ்வாமீ?

கிழவர்: ஆனால் நீ மட்டும் எதற்காக வந்தாய்? அப்பா; நான் கேட்கிறேன்.

"நான் முன்பே சொன்னேனே, சமுத்திரம் பார்க்க வேண்டுமென்று எனக்குப் பேராவல்." உடனே இனிமை பயக்கும் குரலில், "ஆகா! நான் கண்ட அந்த அற்புதக் காட்சியை ஜன்ம ஜன்மாந்தரம் என்னால் மறக்க முடியாது!" என்றான் இளைஞன்.

இளைஞன் தன்மயமாகிச் சொல்லும் இந்தக் கடல் வர்ணனை கிழவருக்கு ஏற்கவில்லை. நாவிகர்கள் பேசிக் கொள்வதைக் கவனிப்பதில் அவரது ஊக்கம் சென்றது.

ஒரு படகோட்டி மற்றவனுடன், "அடா தம்பீ! கடைசியில் இக்கதிக்கா வந்தோம்? கடலில் வந்து மாட்டிக்கொண்டதடா நம் படகு. நாம் இருக்கிறது எந்தவிடம் தெரியவில்லையே" என்று கூறும்போது அவர்கள் எதைப்பற்றியோ அஞ்சுவதாகக் கிழவருக்குத் தோற்றியது. படகுதான் மூழ்கிற நிலைமைக்கு வந்து விட்டதோவென்ற ஐயம் மூண்டது அவருக்கு. திகிலுற்றவராய்க் கிழவர் படகோட்டியை நோக்கி, "அப்பா படகுக்காரரா! என்னப்பா ஆபத்து, படகிற்கு?" என்றார். ஆனால் ஒரு நாவிகனாவது மறுமொழி தரவே இல்லை. இதனால் கிழவருக்குப் பின்னும் கலவரம் அதிகரித்தது. இளைஞன் மட்டும் இவர்களது பதிலை எதிர்பார்க்காமல், படகின் அறையைவிட்டு வெளியே வந்து பார்த்தான்.

பொழுது புலரும் சமயம். அடர்ந்த பனிப்படலம் நாற்றிசையும் படர்ந்திருந்ததால் எது ஆகாயம், எது நதி, எது கரை என்று புரியாதபடி இருந்தது. படகோட்டிகள் திசைதவறி வந்துவிட்டார்களென்று ஊகித்துக் கொண்டான். 'எந்தப் பக்கம் கரை? கடல் எத்திசை?' என்று கண்டுபிடிக்க முடியாமல் படகோட்டிகள் திண்டாடுவதாகத் தெரிந்தது. 'கரையில்லாத கடலில் வந்து விட்டோமோ? இத்தனை ஆன்மாக்களும் கடலுக்கு இரையாகுமோ?' என்ற சங்கடத்தினால் படகோட்டிகள் ஆவியே ஒடுங்கியவர்கள்போல் கிடந்தனர்.

படகிலுள்ள மற்றப் பேர்களுக்கு இந்த ஆபத்தான நிலையைப்பற்றி ஒன்றுமே தெரியாது. வீசி அடிக்கும் பனியின் வாடைக்குப் பயந்து படகின் அறை மறைவினுள் இருந்தபடியால் வெளியே நிகழ்வது அவர்களுக்கு எப்படித் தெரியும்? கிழவரை அணுகி, யுவகன் படகிற்கு ஏற்பட்ட ஆபத்தான நிலைமையைச் சொன்னான். ஸமாசாரம் மளமளவென்று மற்ற யாத்திரிகர்களுக்கும் எட்டிவிட்டது. படகில் ஒரே கலவரம். பிரயாணிகளில் சிலர் பெண்கள். திடுக்கிடும் இந்தச் செய்தியைக் கேட்ட மாத்திரம் அவர்கள் கோவென்று அலறத் தொடங்கினர். கிழவர் தொண்டை கிழியப் படகோட்டிகளைப் பார்த்து, "கரைக்கு ஒதுக்கு! படகைக் கரைப்பக்கமாக ஓட்டு!" என்று கூச்சலிட்டார்.

இளைஞன் கிழவருடைய அசட்டுத்தனத்தைப் பார்த்துச் சிரித்தவனாய், "கரைதெரிந்தால் இவ்வளவு கஷ்டமென்ன?" என்றான். இந்த வார்த்தைகளைச் செவியுற்றதும் பிரயாணிகளுக்கு அஸ்தியில் ஜுரம் ஏற்பட்டது. யுவகன் எல்லோருக்கும் தைரியம் சொல்லிவிட்டுப் படகோட்டியிடம் வந்து, "படகோட்டீ! பயந்து சாவதற்கு இன்னும் ஒன்றும் ஏற்படவில்லை. இதோ வெளிச்சமாகிக்கொண்டே வருகிறது. இன்னும் சற்று நாழிகைக்கெல்லாம் கரகரவென்று சூரியன் தெரிவான். பனியும் நீங்கிப்போகும். இதற்குள் படகு கடலில் சிக்கிக்கொள்ளாது. பாய்மரச் சீலையைச் சுருட்டிவிடுங்கள். நீரோட்டமும் பலமாக இல்லை; அது நம் நல்ல காலமே. படகை அதன் வழியே செல்ல விட்டுவிடுங்கள். வெயில் பிரகாசமாக வீசும்போது மேற்

கொண்டு செய்வதைப்பற்றி யோசனை பண்ணலாம். கலக்கமடையாதீர்கள்" என்று அவர்களுக்கு உத்ஸாஹமூட்டினன்.

இந்த யோசனையின்படியே படகோட்டிகளும் நடக்க முற்பட்டனர். வெகுநேரம் யாதொரு வேலையுமின்றி அவர்கள் சும்மா இருந்தனர். அடுத்த நிமிஷம் என்ன நேரிடுமோவென்ற திகில் பிரயாணிகளுக்கு. அவர்களுக்கு வாயில் பல்லில் ஈரமே இல்லை. படகும் மெதுவாக ஊர்ந்து சென்றுகொண்டிருந்தது. எந்தத் திக்கை நோக்கி? அதுதான் தெரியவில்லை. மூடுபனியோ இன்னும் கலையவில்லை. கடலின் இரைச்சல் செவிக்குப் படாதுபோனுலும் சாவுமட்டும் நிச்சயமென்று எண்ணிவிட்டார்கள் எல்லோரும். புருஷர்கள் தமக்குள் தம் இஷ்ட தெய்வங்களின் நாமத்தை உச்சரித்துக்கொண்டனர். பெண்பாலார் பல விதமான ஸ்வரங்களில் ஒப்பாரி வைத்து அழுதனர். கங்கா ஸாகரத்தில் தன் மகவைப் பறிகொடுத்த ஒருத்தி மட்டும் அழாமல் இருந்தாள். கடலில் ஏற்படப்போகும் பயங்கரமான, குளிர்ந்த மரணம் இப்பொழுதோ இன்னும் சற்று நேரத்திலோவென்று எதிர்பார்ப்பவர்கள்போல் இருந்தனர் படகிலுள்ள பிரயாணிகள்; 'பனி நீங்குமோ" என்று பார்த்துப் பார்த்துக் கண்கள் ஒளி இழந்தன. பொழுதும் அதிகமாகிவிட்டதை யாவரும் உணர்ந்தனர். திடீரென்று படகோட்டிகள் சந்தோஷக் கூச்சலிட்டுத் தரியாவிலுள்ள ஐந்து *பீர்களின் நாம ஸங்கீர்த்தனம்

---

* முகம்மதிய யோகிகள்.

பாடித் தலைவணங்கினர். யாத்திரிகர்கள், "என்ன... என்ன?" என்று ஒரே சமயத்தில் ஆவலுடன் விசாரித்தனர். அவர்களுக்குச் சற்று நம்பிக்கை உதயமாயிற்று. படகோட்டிகள் அதிக உவப்பினால், "வெயில் வந்து விட்டது! அதோ கரை! கரை!" என்று ஆர்ப்பரித்தனர். பிரயாணிகள் யாவரும் வெளியே வந்து நோக்கினர். ஆம்! படகோட்டிகள் சொல்வது உண்மையே. வெங்கதிரோன் மூடுபனியின் சிறையினின்று திக்குத் திசை யாவற்றையும் விடுவித்தான். படகு செல்லும் இடம் கடல் அல்ல. நதி கடலுட் புகும் ஸங்கமுகத்திற்கு அணித்தான இடம். அருகிலேயே ஒரு பக்கத்துக் கரை தென்பட்டது. எல்லாம் ஐந்நூறு அடி தூரத்திற்குள்ளேயே இருக்கும். ஆனால் அக்கரையோ கண்ணிற்கு எட்டியவரை புலப்படவே இல்லை. அவ்வளவு அகலமாக இருந்தது ஆறு அங்கே. எதிரே வெகுதூரத்தில், சூரிய வெளிச்சத்தில் பளபளக்கும் கடலின் நீண்ட கருமையானது தொடுவானில் கலக்கும் விந்தையும் பயங்கரமும் நிறைந்த காட்சி. படகு இருக்கும் இடத்தில் ஆற்றுநீர் குழம்பிச் செவேலென்று இருந்தது.

'இனிப் பயத்திற்கு யாதோர் ஏதுவுமில்லை. கரை சமீபத்திலேயே இருக்கிறது' என்று பிரயாணிகள் மகிழ்வெய்தினர். சூரியனைப் பார்த்துச் சரியான திசையைத் தெரிந்துகொண்டனர் படகோட்டிகள், தொலைவில் தென்படும் பெரிய மணல்திடர் சமுத்திரத்தின் கரையே. படகு இருக்கும் இடத்திற்குச்

சிறிதுதூரமே அவ்விடமும். நதிஜலம் மந்தகதியுடன் கடலில் புகுகிறது. கடலும் ஆறும் சேருமிடத்தில் பரந்த ஈர மணல்திட்டு. அதன்மேல் எண்ணில் அடங்காக் காடை கவுதாரிபோன்ற புட்கள் பல, “ கீச் கீச் கர்ர்ர்ர்...” என்று கூவி விளையாடிக்கொண்டிருந்தன. இந்த ஆற்றிற்கு இக்காலத்தில், ‘ ரஸூல்பூர் நதி ’ என்ற பெயர் வழங்குகிறது.



2

நதிக்கரையில்

" நன்றி மறப்பது நன்றன்று " — குறள்

பிரயாணிகள் அடைந்த மன அமைதிக்கு ஓர் எல்லை இல்லை. அவர்களுடைய பேச்சும் வம்பளப்பும் சற்று ஓய்ந்தன. " ஆற்றில் ஏற்ற நீர் வர இன்னும் அதிக நேரமாகும். அதற்குள் எதிரேயுள்ள மணல் திட்டில் இறங்கிச் சமையல் செய்து உண்ட பிறகு ஊருக்குத் திரும்பலாம் " என்று படகோட்டிகள் யாத்திரிகர்களுக்கு அறிவித்துப் பெரிய படகைக் கரையோரமாக ஒதுக்கினர். ஜனங்கள் படகை விட்டு இறங்கி ஸ்நாநாதி கிருத்தியங்களைச் செய்துவிட்டுச் சோறு சமைத்துக்கொள்ள ஆயத்தமாயினர்.

உணவு ஆக்குவதைப்பற்றி யோசிக்கும்போது அவர்களுக்கு மற்றொரு விசாரம் ஏற்பட்டது. படகில் விறகு இல்லையே! கரையேறிச் சென்றால்தான் விறகோ சுள்ளியோ கிடைக்கும். அதுவும் காட்டில்தான். வேங்கைப் புலிகளின் நடமாட்டம் அவ்விடத்தில் ஸாதாரணம். காட்டினுட் சென்று விறகு கொண்டுவர யாருக்கும் ஸாஹஸம் இல்லை. முன் சொன்ன கிழவா இளைஞனைப் பார்த்து, " அப்பா, நவகுமாரா! இதற்கு

நீதான் ஒரு வழி செய்யவேண்டும் ; இல்லாவிட்டால் இத்தனை பேரும் ஆகாரமின்றிச் சாகவேண்டியது தான் ” என்றார்.

நவகுமாரன் சற்று யோசனை செய்துவிட்டு, “ சரி போகிறேன்; கோடரியைக் கொடுங்கள். எனக்குத் துணையாக ஒருவனிடம் கத்தியைக் கொடுத்து அனுப்புங்கள் ; போகிறேன் ” என்றான். ஆனால் நவகுமாரனுடன் செல்ல எந்தப் புருஷனுக்கும் துணிவு வரவில்லை. சாப்பாட்டு வேளையோ நெருங்கிவிட்டது. தயங்குவதில் பிரயோஜனமில்லை யென்று உணர்ந்து அந்த உதார ஸ்வபாவமுடைய இளைஞன் அரைக் கச்சத்தை இழுத்துக் கட்டிக்கொண்டு கட்டை வெட்டிவரத் தனியாகவே கையில் கோடரியை எடுத்துச் சென்றான்.

கரைமேல் ஏறியதும் கண்ணிற்கு எட்டியவரை ஒரே காடாக இருந்தது. மனிதர் இருப்பிடமோ, அரவமோ இருப்பதன் அடையாளம் எங்குமே தெரிய வில்லை. அவ்விடத்தில் விருக்ஷங்களே இல்லையெனச் சொல்லலாம். வெறும் முட்செடிகள் நிரம்பிய காடு. விறகு வெட்டுவதற்குத் தகுந்த மரத்தைத் தேடி நவகுமாரன் அங்கே சற்று நேரம் திரிந்தான். அகப் படாது போகவே மரத்தைத் தேடிக்கொண்டு கரையி லிருந்து சேண்தூரம் காட்டினுள் வந்துவிட்டான். கடைசியில் பட்டுப்போனதொரு மரத்தைக் கண்டு வேண்டிய அளவு விறகை வெட்டிக்கொண்டான். ஆனால் அதை யார் சுமப்பது ? நவகுமாரன் சங்கடத் தில் ஆழ்ந்தான். நல்ல ஸ்திதியில் வளர்ந்தவ

ணுதலால் அவன் சரீரகஷ்டத்தையே அறியாதவன். இதையெல்லாம் யோசிக்காமல் விறகு கொண்டுவருவது ஸாமான்யமென்று கருதியிருந்தான். இப்பொழுது கரடு முரடான கட்டைகளைச் சுமப்பதென்றால் அவனுக்குச் சிரமந்தானே ? என்ன செய்வது ? ஒப்புக்கொண்ட பிறகு காரியம் எவ்வளவு கடினமாயிருந்தாலும் அரை குறையாக விட்டுவரக்கூடாது என்று அவனுக்குப் பட்டது. இந்த அற்ப சிரமத்திற்குத் தான் கொண்ட பரோபகார சிந்தையை அவன் விடுபவன் அல்ல. இயல் பாகவே அவன் எடுத்துக்கொண்ட முயற்சியிலிருந்து பிறழ்ந்து செல்வதில்லை. எப்படியோ விறகுக் கட்டைச் சுமந்து கரையை நோக்கி நடக்கலானான். வழியில் பல இடங்களில் பாரத்தை இறக்கிவைத்து இளைப்பாறிக் கொண்டே வந்தான் நவகுமாரன்.

தங்கிவருவதனால் அவன் கரையை அடைய வெகு நாழிகையாகிவிட்டது. இந்தப்புறம், அவன் வருவதற்குத் தாமதமாகவே படகில் வந்த மற்றவர்களுக்குத் திகில் மூண்டது. ஒருவேளை புலி அவனை அறைந்துவிட்டிருக்குமோவென்று எண்ணினார்கள். வரவேண்டிய சமயம் அதிக்கிரமிக்கவே இந்த உறுதியே அவர்கள் கொள்ள நேரிட்டது. கரையில் இறங்கிச் சற்றுத் தொலைவு காட்டினுள்சென்று அவனைத்தேட அங்குள்ள ஆடவன் எவனுக்கும் தைரியம் பிறக்கவில்லை.

பிரயாணிகள் இவ்வாறு யோசனை செய்துகொண்டிருக்கையில் பயங்கர இரைச்சலுடன் ஆற்றில் நீர் பொங்கிவருவது தெரிந்தது. படகும் மெல்ல மிதந்து அசைய ஆரம்பித்தது. ஏற்றநீர் வரும் சமயங்களில்

அதன் அதிர்ச்சியால் மேடான மணற்கரை பல இடங்களில் பெயர்ந்து நதியில் சரிவதுண்டு. படகின்மீது விழுந்தால் அது துகள்துகளாகிவிடவேண்டியதுதான். இந்த விபத்திலிருந்து தப்பப் படகோட்டிகள் படகைக் கரையிலிருந்து நதிநடுவே செலுத்தினர்கள். யாத்திரிகர்கள் தத்தம் சமையலுக்கான பண்டங்களை மணல் திட்டிலேயே போட்டுவிட்டுப் பிலுபிலுவென்று படகில் ஏறிக்கொண்டனர். அவர்கள் எல்லோரும் படகில் அமர்ந்ததுமே சற்றுமுன் அவர்கள் இருந்த மணல் திட்டின்மீது வெள்ளம் புரண்டு ஓடியது. அவர்கள் அவசரத்தில் விட்டுச் சென்ற பண்டங்கள் அந்தப் பெருக்கில் அடித்துக்கொண்டு போகப்பட்டன. ஏற்றநீரின் வேகத்தில் படகைச் சமாளிக்க முடியவில்லை. நாவிகர்களும் சாமர்த்தியசாலிகள் அல்லர். பிரவாகம் படகை ரஸூல்புர் நதியினுள் இழுத்துக்கொண்டே போய்விட்டது. ஒரு பிரயாணிமட்டும், “ஐயோ! நவகுமாரன் வரவில்லையே?” என்று கூவினன். அதற்கு ஒரு படகோட்டி, “ஆகா, இன்னுமா நவகுமாரர் உயிருடன் இருப்பார்? அவரை எப்பொழுதோ புலி விழுங்கிவிட்டிருக்குமே!” என்று சொல்லிப் படகைச் சரியான திசையே திருப்பத் தத்தளித்துக்கொண்டிருந்தான். நீரின் விசையில் படகு ரஸூல்புர் நதியில் பாய்ந்துவிட்டது. பிரவாகத்தின் வலிமைதான் என்னே! கொந்தளிக்கும் அந்த நதியில் படகை நேரான வழிக்குக் கொண்டுவர அரும்பாடுபட்டனர் நாவிகர்கள். அந்தக் குளிர்நாளில் அவர்களுடைய உடல் வேர்த்ததென்றல், படகைச் சமாளிப்பதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட

சிரமத்தைச் சொல்லவும் வேண்டுமோ? படகு உள் நாட்டை நோக்கி அம்புபோல் சென்றது.

பெருக்கின் வேகம் குறைந்தபோது அவர்கள் முன் தங்கிய இடத்திலிருந்து எவ்வளவோ தொலைவு வந்து விட்டனர். 'இனிமேல் நவகுமாரனுக்காகப் படகைத் திருப்புவதா?' என்ற கேள்வி கிளம்பியது யாத்திரிகர்களிடையே. இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமாக ஒன்று உரைக்கவேண்டியது அவசியம். நவகுமாரனுடன் படகில் வந்த பிரயாணிகள் அவனுடைய அக்கம் பக்கத்து ஊரினரே ஒழிய நெருங்கிய உறவினர்கள் அல்லர். திரும்பினுல் முன்நடந்த மாதிரியாகும்.வெள்ளம் அடங்கிவிட்டால் மறுநாள் மாலைவரை ஏற்றம் வருமளவு காத்திருக்கவேண்டும். அதற்குள் உணவின்றி யாவரும் உயிர்துறக்க வேண்டியதுதான். ஏற்கெனவே இரண்டு நாட்களாகப் பட்டினி; அதனுல் எல்லோருக்கும் பாதிப் பிராணன் போனமாதிரி இருந்தது. அதோடு படகுக்காரர்களும் கலத்தைத் திருப்பச் சம்மதிக்கவில்லை. நவகுமாரனைப் புலி அறைந்து கொன்றிருக்குமென்று நிச்சயமாகச் சொல்லலாம். அவனுக்காக வீண் தொல்லை எடுத்துக்கொள்ளுவானேன்?

இவ்வாறு ஒரு முடிவு கட்டிப் பிரயாணிகள் நவகுமாரனைக் கொடிய மிருகங்கள் உலாவும் காட்டில் தனியாக விட்டுவிட்டுத் தாம் வீடு திரும்புவதே உத்தமமென்று இருந்துவிட்டனர்.

நேயர்களே! இதைப் பார்த்து நீங்கள் என்ன சொல்வீர்கள்?—'இனிப் பிறர் பட்டினிகிடந்து இறந்தாலும் ஒருபோதும் விறகு கொண்டுவரக் கூடாது'

என்றுதானே? — அப்படி நீங்கள் இருப்பீர்களானுல் உங்களைப்போன்ற வஞ்சகர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்! இந்தப் பிரயாணிகளைக் காட்டிலும் பாமரர்களாவீர்கள்!

ஒரு சிறந்த பரோபகாரியை திக்குத் தெரியாத காட்டில் தவிக்க விடுவது எவர்களது இயல்போ அவர்கள் என்றைக்குமே பிறருக்கு உதவி புரிபவனை இன்னலுக்கு ஆளாக்குவர். ஆனுல் எத்தனை தரம் காட்டில் நிராதரவாக விடப்பட்டாலும் உண்மையான உபகாரி தன் உயர்ந்த நோக்கத்தை விடாமல், மீண்டும் அவர்களுக்கே பேருபகாரம் செய்ய முனைவான். வாசகர்களே! குறுகிய மனப்பான்மை உங்களுக்கு இருக்கிறதென்று ஒப்புக்கொள்வீர்களா?

3

தன்னந்தனியே

" நெஞ்சாகுலம் பெருகி இரவெல்லாம்
துஞ்சாத தென்கொலோ "— **கிளவித்தெளிவு**

யாத்திரிகர்கள் நவகுமாரனை விட்டுச் சென்ற இடத்திற்குச் சற்றுத் தூரத்தில் தௌலத்பூர், தரியாபூர் என வழங்கப்பெறும் கிராமங்கள் தற்காலம் இருக்கின்றன. ஆனால் கதை நிகழும் காலத்தில் அங்கே மனிதர் நடமாட்டமே இல்லை. வெறும் காடுதான் அங்கே. வங்காளப் பிரதேசத்தில் பூமி பெரும்பான்மை ஸமதடமாக இருப்பதுபோல் இவ்விடம் இல்லை. ரஸூல்புர் நதி ஸங்கமத்திலிருந்து ஸுவர்ணரேகை என்ற இடம்வரை சில யோஜனைதூரம் தொடராக மணற்குன்றுகள் வியாபித்திருந்தன. சிற்சில இடங்களில் இந்த மணல்மேடுகள் மலைகளெனச் சொல்வதற்குத் தகுதி வாய்ந்திருந்தன. நிகழ்காலம் இந்த ஸ்தானத்தை பாலியாடீ (மணற்குன்று) என்கிறார்கள். மத்தியான ஸூர்ய வெளிச்சத்தில் இந்தக் குன்றுகள் அபூர்வமான அழகுடன் விளங்கும். இந்தச் சிறு மலைகளில் யாதொரு விருக்ஷ இனமும் முளைத்திருக்கவில்லை. சில குத்துச் செடிகள் மட்டுமே குன்று முடிகளில் படர்ந்திருந்தன.

இவற்றின் அடிவாரத்திலும் நடுப்புறத்திலும் துல்லிய வெண்மணலே. கள்ளிச்செடியும் சப்பாத்தியுமே கீழ்ப் பாகங்களில் செழித்து வளர்ந்திருந்தன. காட்டுப்பூக் களைப் பொழியும் புதர்களும் இங்கே உண்டு.

மனத்திற்குப் பிடிக்காத இத்தகைய இடத்தில் நவகுமாரனை அவனுடன் வந்தவர்கள் திண்டாடவிட்டுச் சென்றுர்கள். விறகுக் குவியலைச் சுமந்துகொண்டே கரையை அடைந்து அவன் நோக்குகையில் ஆற்றில் படகைக் காணவில்லை.

திடுமென அச்சம் அவன் உள்ளத்தில் பாய்ந்த போதிலும், தன்னை அவ்விதம் தனிமையாக விட்டு விட்டுப் பிரயாணிகள் சென்றிருக்கமாட்டார்களென்றே நவகுமாரன் எண்ணினான். நதியில் ஏற்றம் வந்துவிடவே படகு எங்கேயாவது ஒருபுறமாக ஒதுக்கப்பட்டிருக்கு மென்றும் நினைத்தான். தன்னை அவர்கள் வந்து தேடு வார்கள் என்ற நம்பிக்கையால் அவன் சிலநேரம் கரையி லேயே காத்திருந்தான். ஆனால் படகும் வரவில்லை; ஆளும் வரவில்லை. பசியோ அவன் காதைக் கும்மென்று அடைத்தது. தாகத்தினால் அவனுடைய தொண்டை ஒட்டிக்கொண்டது. அவர்களை எதிர்பார்த்து இவ் விடத்திலேயே காத்திருப்பது உசிதமல்லவென்று அறிந்து நவகுமாரன் கரையோரமாகவே படகைத் தேடித் திரிந்தான். ஆனால் படகின் நாமதேயமே எங்கும் இல்லை. மீண்டும் தன் பழைய இடத்திற்கே வந்தான். அதுவரைக்கும் படகு வராததால் வெள்ளம் படகை அடித்துக்கொண்டு போயிருக்குமோ வென்று அவன் சந்தேகப்பட நேரிட்டது. நீரோட்டம் பிரதிகூலமாக

இருப்பதனுல் படகு வரத் தாமதப்படுகிறதோ வென்றும் அவன் மனம் வினவிற்று. ஆனுல் ஆற்றில் நீர் குறைய ஆரம்பித்துவிட்டதே. இன்னுமா படகு வராது இருக்கும்? வரவேண்டியதானுல் அப்பொழுதே வந்திருக்க வேண்டுமே! நீர்த்தாரை கடலே நோக்கிச் சென்றது. பொழுதும் கொஞ்சங் கொஞ்சமாகச் சாய்ந்துகொண்டே வந்தது. ஞாயிறும் மறைந்துவிட்டது.

நவகுமாரன் கலவரத்திற்குள்ளானுன். மறுபடியும் அவனுக்கு, 'ஒருவேளே படகு வெள்ளத்தைச் சமாளிக்க முடியாமல் நதியில் மூழ்கிவிட்டதோ? இல்லாவிட்டால் இந்தப் பயங்கரமான வனத்தில் கூட்டாளிகள் என்னே இப்படி நிர்க்கதியாய் விட்டுச் சென்றிருப்பார்களா?' என்று தோன்றியது.

இந்த நிலேயில் அவன் மனத்தின்கண் சுழன்ற எண்ணங்களே வர்ணிப்பது அஸாத்தியம், தன்னுடன் வந்தவர்கள் நதியில் மூழ்கி உயிர் துறந்திருப்பார்களென்று நினேத்த அளவு அவனுக்குச் சொல்லொணுத் துயர் மூண்டது. மறுகணமே தன் நிலே கவனத்திற்கு வந்ததும் துயரம் மாறி அச்சமே உண்டாயிற்று அவனுக்கு. நிராதரவாக அவர்கள் வேணுமென்றே தன்னே இந்தச் சங்கடத்தில் சிக்கவிட்டிருப்பார்களோ என்ற ஐயம் வரும்போதெல்லாம் அவனுக்கு வந்த ஆக்ரோஷம் பய உணர்ச்சியையும் மீறிச் சென்றது. அருகில் ஓர் ஊருமில்லே. புகலிடத்தைக் காணவில்லே. மனிதர் நடமாட்டமோ சூன்யம். வயிற்றைப் பசி கிள்ளிற்று. நவகுமாரன் ஆற்றில் இறங்கி நீரையாவது இரு கை அள்ளிக் குடிக்கலாமென்று போகையில் அது மிகவும் உவராக

இருந்தது. இவ்விதம் பல இன்னல்களுக்கு ஆளானான் நவகுமாரன். போதாக் குறைக்குக் குளிர்காலம். இரவும் கறேலெனப் படர்ந்துகொண்டு வந்தது. குளிரிலிருந்து தப்புவதற்கு ஒரு மறைவிடமும் தென்படவில்லை. எல்லாம் திறந்த வெளி. துரதிர்ஷ்டம் — மேல் உத்தரீயத்தைக் கொண்டுவர மறந்துவிட்டான். சிலு சிலுவென்று ஆற்றிலிருந்து குளிர்ந்த காற்று வீசிற்று. 'பனி பெய்யும் இரா வேளையில் ஒரு துணையுமின்றி, உடலை மறைத்துக்கொள்ளப் போர்வையும் இல்லாமல் இருக்க வேண்டுமே! இரவில் கொடிய விலங்குகள் உலாவுமே! அவற்றிற்கு இரையாவோமோ? இன்றைக்கு இராது போனாலும் நாளைக்காவது அவை வந்தே தீரும். எப்படியானாலும் உயிர் போய்விடப் போகிறது.'

மனத்தை வாட்டும் இந்தச் சஞ்சலங்களினால் நவகுமாரன் அதிக நேரம் அவ்விடத்திலேயே நிற்கவில்லை. கரையோரத்திலிருந்து மேடான நிலத்திற்கு வந்தான். இங்குமங்கும் உலாவத் தொடங்கினான். இருள் படையாக எங்கும் கப்பிக்கொண்டது. பனி தோய்ந்த வானில் வைரமணிகள்போல் தாரகைத் திரள்கள் ஜ்வலித்தன, நவகுமாரனுடைய ஊரிலுள்ள ஆகாயத்தில் எவ்விதம் தோன்றுமோ அந்த விதமாக. ஒரே கறுக்கல். வான், திசைகள் எட்டு, தொலைவில் தெரியும் நீலக்கடல் எங்கும் அமைதியே அரசு புரிந்தது. இடை இடையே மாகடலின் பேரொலிமட்டும் சற்றைக் கொருதரம் கேட்கும். எங்கோ காட்டு மிருகம் உறுமும் சப்தம். அவ்விரவு முழுவதும் நவகுமாரன் மணல்மேட்டைச் சுற்றித் திரிந்தவண்ணம் இருந்தான்.

ஓரே இடத்தில் நின்றால் கொடிய பிராணி ஏதாவது வந்து தாக்குமோவென்று முன் எச்சரிக்கையுடன் காடு அடர்த்தியிராத உயரமான இடத்திலேயே விழித்திருந்தான்.

அலைந்து அலைந்து அவன் பாடு ஓய்ந்துவிட்டது. அன்று முழுமையும் பட்டினி கிடந்ததால் அவனுடைய கமனீயமான மேனி துவளலாயிற்று. முதுகு நிமிர்ந்து நிற்க முடியாமல் மணல்மீது சாய்ந்தான். பல கிலிகள் மனத்தில் தோன்றிப் பயமுறுத்த மெல்லக் கண்ணயர்ந்தான். இத்தகைய ஓர் ஏற்பாட்டை இயற்கையன்னை அமைக்காவிட்டால் துன்பத்தின் பாரத்தை மனிதர்களால் சகிக்கவே முடியாது.

4

குன்றின் உச்சியில்

"கட்டிவிட்ட சடையர் கபாலியர்" — தேவாரம்

நவகுமாரன் சட்டென்று துயில் கலைந்து விழித்த போது நல்ல நிசி. இன்னும் புலிவந்து அவனை அறைய வில்லை. அவனுக்கே வியப்பாக இருந்தது. நாற் பக்கமும் கூர்ந்து கவனித்தான், கொடிய மிருகம் ஏதாவது வருகிறதோவென்று. எதிர்ப்புறமாக வெகு தூரத்தில் தென்படும் வெளிச்சத்தை அவன் தற்செய லாகக் காண நேர்ந்தது. பிரமையாக இருக்குமோ வென்று அவன் ஒளிவரும் திக்கையே கண்கொட்டாமல் கவனித்தான். வெளிச்சம் வரவரச் சுடர்விட்டுப் பெரிதாகிக்கொண்டே வந்தது. அது நெகிழிவிடும் தீக்கொழுந்தென அவனுக்குத் தோன்றிற்று. அதே சமயம் அவனுடைய உள்ளத்திலும், 'நாம் பிழைப் போம்' என்ற நம்பிக்கையின் கொழுந்து விட்டது. மனிதன் இல்லாமல் இவ்வெரிச்சுடர் எங்ஙனம் உண்டாகும்? காட்டுத்தீ தோன்றும் சமயமோ இது வன்று. தீ மூள்வதற்கு இது நெருக்கமான காடுமல்ல. புத்துணர்வு கொண்டு நவகுமாரன் வெளிச்சம் வரும் இடத்தை நோக்கிப் பாய்ந்தான். 'இந்த ஒளி ஏதாவது

மாயச் செயலாக இருக்குமோ?' என்ற சந்தேகம் எழுந்த போதிலும், 'இனி அஞ்சினால் உயிர்பிழைக்க வழியில்லை' என்ற நீங்கா உறுதியுடன் எரிச்சுடர் தோன்றும் திசையே சென்றான். சிறிய முட்செடிகளும் மணல் மேடுகளும் அவனுடைய வழியில் குறுக்கே நின்றன. ஆனால் நவகுமாரன் முள்ளென்றும் கல்லென்றும் பாராமல் சிறு குன்றுகளைக் கடந்து செல்லலானான். வெளிச்சமும் அணித்தாகத் தோன்றியது. ஓர் உயரமான மணற்குன்றின்மீது தீ எரிவது தெளி வாகத் தெரிந்தது. தீயின் செந்நிற வெளிச்சத்தில் ஒரு மனிதனின் உருவம் உட்கார்ந்திருப்பதும் புலனா யிற்று. நவகுமாரன் திடத்தை விடாமல், சோர்வு கொள்ளாமல் குன்றின் முடியை அடைந்தான். முதலில் சற்று நடுக்கம் ஏற்பட்டது அவனுக்கு. ஆனால் விடா முயற்சியினால் அவனுடைய காரியம் கைகூடிற்று. அங்குள்ள மனிதனின் தோற்றம் அவனுடைய உடலைச் சிலிர்க்கச் செய்தது. 'நிற்போமா, ஓடிவிடுவோமா?' என்று ஒரு முடிவிற்கும் வரமுடியாமல் திகைத்து நின்றான் நவகுமாரன்.

குன்றின் முடியில், தீயின் அருகில், பயங்கர ஆக்ருதியுடைய ஒருவன் தியானத்தில் ஆழ்ந்து உட்கார்ந் திருந்தான். கலவரத்தில் நவகுமாரன் அவனை நன்றாகக் கவனிக்கவில்லை. அந்த அதிசய மனிதனுக்கு வயது ஐம்பதிற்குமேல் இருக்கும். அரையில் அவன் உடுத் திருந்தது இன்னதென்று தெளிவாகப் புலப்படவில்லை. புலியின் அதள் போல் இருந்தது. கண்டத்தில்

ருத்திராக்ஷ மாலை. தலையில் சடைக்கற்றை; தாடி மீசையுடன் கூடிய பெரிய முகமண்டலம் அவனுக்கு. எதிரே பெரிய விறகுக் கட்டையொன்று தீப் பற்றித் 'திக் திக்' என்று எரிந்துகொண்டிருந்தது. அந்த எரிவிடும் ஜ்வாலையே நவகுமாரனை இங்கே இழுத்து வந்தது. பிணம் அழுகும் துர்க்கந்தத்தின் வாடை, அருகில் எங்கிருந்தோ சற்றைக்கொருதரம் வீசுவதை நவகுமாரன் உணர்ந்தான். அவ்வதிசய மானிடன் வீற்றிருக்கும் இடத்தை நன்ருகக் கவனித்தபோது அதன் காரணம் விளங்கிற்று. அந்த விரிசடைக் கோலத்தான் நாறும் ஒரு நரதேகத்தை ஆஸனமாக அமைத்து நிஷ்டையில் ஈடுபட்டிருந்தான். மற்ெருரு காட்சி நவகுமாரனைப் பின்னும் மருட்சிக்கு உள்ளாக்கியது. மண்டையோட்டில் ரத்த வர்ணத்துடன் ஒருவிதத் திரவம் வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கோர தவஸியைச் சுற்றிலும் எலும்புத் துண்டுகள் சிதறிக்கிடந்தன. அவன் பூண்டிருந்த ருத்திராக்ஷ மாலையில் இடை இடையே சிறு சிறு எலும்புகளும் கோக்கப்பட்டு விளங்கின. இவற்றையெல்லாம் கண்டதும், மந்திரத்தினுல் கட்டுண்டவன்போல் நவகுமாரன் திடுக்குற்று நின்ருன். அந்த விகார ஆத்மாவை அணுகுவதா, அப்படியே திரும்பிவிடுவதா என்றுகூட யோசிக்க முடியவில்லை நவகுமாரனுல். அவனுடைய கால்களும் கைகளும் பலவீனத்தால் நடுக்குற்றன. காபாலிகர்கள் என்ற கோர தாந்திரிகர்களைப்பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிருன்.

எதிரே இருக்கும் அந்தப் பயங்கர உருவமுள்ள மானிடன் ஒரு காபாலிகனே என்று நிச்சயம் கொண்டான்.

நவகுமாரன் வரும்போது அந்தக் காபாலிகன் கோர நிஷ்டையில் ஆழ்ந்திருந்தான். நவகுமாரன் அவன் எதிரே சென்று பார்த்தபோதும் காபாலிகனுடைய உடல் அசையக்கூட இல்லை. நீண்ட நேரம் கழிந்த பிறகே அவனுடைய மோனநிலை கலைந்தது.

“கஸ்த்வம்? (நீ யார்?)” என்று வடமொழியில் நவகுமாரனைப் பார்த்துக் கேட்டான் அவன்.

நவகுமாரன் “பிராம்மணன் நான்” என்றான்.

காபாலிகன், “திஷ்ட (நில்)” என்று கூறி மீண்டும் தியானத்தில் கலந்துவிட்டான். நவகுமாரன் காபாலிகனைப் பார்த்தபடியே அதே இடத்தில் நின்றான். பல நாழிகை இவ்விதமே சென்றது. கடைசியில் தன் மந்திர சாதனைகளை முடித்துக்கொண்டு காபாலிகன் சவாதனத்திலிருந்து எழுந்து நவகுமாரனை நோக்கித் தேவபாஷையில், “மாமநுஸர (என்னுடன் வா)” என்றான்.

வேறொரு சமயமாயிருந்தால் இப்படிச் சொன்ன மாத்திரம் நவகுமாரன் முன்பின் தெரியாத ஒருவனைப் பின்தொடர்ந்திருக்கவே மாட்டான். பசியின் கொடுமை அவனை இக்கதிக்கு ஆளாக்கியது. “வருவது வரட்டும், வேறுவழியில்லை. எல்லாம் ஈசன் செயல்படியே நடக்கும்” என்ற நெஞ்சுரத்துடன் காபாலிகனை நோக்கி, “அப்படியே, ஸ்வாமி. பசிதாகத்தால் எனக்குக் கண் இருட்டிக்கொண்டு வருகிறது. எங்கே ஆகாரம் கிடைக்கும்? தயை செய்து சொல்லும்” என்றான்.

"நீ பைரவியினால் என்னிடம் அனுப்பப்பட்டிருக்கிறாய். என்னுடன் வா, உனக்கு வேண்டியதைத் தருகிறேன்" என்றான் அக்காபாலிகன்.

நவகுமாரன் காபாலிகனைப் பின்தொடர்ந்தான். இருவரும் வெகு தூரம் நடந்து சென்றனர். வழியில் அவர்கள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பர்ணசாலையொன்றினுள் காபாலிகன் முதலில் நுழைந்த பின்பே நவகுமாரன் அதனுள் வர அனுமதிக்கப்பட்டான். நவகுமாரனுக்குத் தெரியாதபடியே ஏதோ ஓர் உபாயத்தைக்கொண்டு காபாலிகன் சட்டென்று விறகுக்கட்டையில் தீக் கொளுத்தினான். அந்தச் சிவந்த ஒளியில் குடிசையின் உட்புறம் பளிச்சென்று தெரிந்தது. மஞ்சம் புல்லினால் வேயப்பட்டிருந்தது குடிசையின் கூரை. ஒரு மூலையில் புலித்தோல் இரண்டு கிடந்தன. ஒரு கலசத்தில் நீர். மற்றொரு பக்கம் கனிகளும் கிழங்குகளும் கிடந்தன.

காபாலிகன் கட்டையில் பற்றிய தீயைத் தூண்டிய வண்ணம், "கனியும் கிழங்கும் இருக்கின்றன. தின்று இளைப்பாறு. தொன்னையில் நீரை வார்த்து அருந்து. படுப்பதற்குப் புலித்தோல் உதவும். ஸ்வஸ்தமாகத் தூங்கலாம். இங்கே பயத்திற்கு யாதோர் ஏதுவுமில்லை. கொடிய மிருகம் எதுவும் இந்த எல்லையில் வராது. ஸாயங்காலம் நாம் மீண்டும் பார்த்துக்கொள்வோம். நான் வரும்வரை இவ்விடத்தை விட்டு நீ போகக் கூடாது" என்றான்.

இதைக் கூறியவுடன் காபாலிகன் குடிலைவிட்டு அகன்றான். அங்குள்ள கந்த மூலங்களைப் புசித்து

விட்டு, சற்று உவராக இருக்கும் கலசத்திலுள்ள ஜலத்தை இலைப்பாத்திரத்தில் ஊற்றித் தாகவிடாய் தீர்த்துக்கொண்ட பிறகே நவகுமாரனுக்குப் பரம திருப்தி உண்டாயிற்று. புலித்தோலைப் பிரித்துப் போட்டுப் படுத்துக்கொண்டான். அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும்; அடித்துப்போட்ட மாதிரி உறங்கினான். முந்திய தினம் அவன் பட்ட அலைச்சலுக்கு அந்த அயர்வு அவனுக்கு வேண்டியிருந்தது.



5

கடற்கரையில்

'மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது' — **திருக்கோவையார்**

காலையில் கண்விழித்து எழுந்ததும் நவகுமாரன் தன் ஊருக்குச் செல்ல வழிதேடினுன். அந்தக் காபாலிகனுல் யாதொரு நன்மையும் ஏற்படாதென்று அவனுக்குத் தோற்றியது. ஆனுல் அந்தக் காபாலிகனுடைய உதவி இராவிட்டால் திக்குத் தெரியாத இவ்விடத்திலிருந்து அவன் வெளியேறுவது எப்படி? தன் ஊருக்குப் போகும் வழியை அவன் அறியான். காபாலிகனுக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும். கேட்டால் சொல்லுவானே என்னவோ? இதுவரை அவனது நடத்தையில் சந்தேகத்திற்கு இடம் எதுவும் உண்டாக வில்லை. எதற்காக இப்படிப் பயந்து சாகவேண்டும்? காபாலிகனே இந்த இடத்தைவிட்டு நகரக்கூடாதென்று முன்பே சொல்லிவிட்டுப் போயிருக்கிறுன். அதற்கு முரணுக நடந்தால் அவனுடைய சினத்திற்கு ஆளாக வேண்டியதுதான். காபாலிகர் மந்திர சக்தியினுல் அமானுஷிகமான காரியங்களை நிகழ்த்தக் கூடியவர்கள். இதை நன்குணர்வான் நவகுமாரன். இந்தப் பயப்

பிராந்தியே அவனை அந்தக் குடிலிலே கட்டுண்டவன் போல் இருக்கச் செய்தது. காபாலிகனுக்குத் தெரியாமல் எதையும் செய்யக்கூடாதென்ற எண்ணம் அவனுக்கு.

அந்தி வேளையும் நெருங்கியது. காபாலிகன் தான் கூறியபடி இன்னும் குடிலுக்குத் திரும்பவில்லை. அன்று முழுவதும் நல்ல உணவின்றிக் கிடந்தான் நவகுமாரன். குடிசையில் இருந்த கனியும் கிழங்குகளும் அவனுடைய பசியை ஆற்றப் போதவில்லை. அவற்றை முந்திய இரவே சாப்பிட்டுவிட்டான். ஆஹாரம் தேடிக்கொள்ள வேண்டுமானால் குடிசையைவிட்டு வெளியே வரத்தான் வேண்டும். மிகப் பசியால் அவனுக்குப் பிராணன் ஓடுங்கிவிடும்போல் இருந்தது. சிறிது நேரம் யோசித்து விட்டு, 'காபாலிகனுக்குப் பயந்தால் முடியாது' என்று எண்ணி வயிற்றுக்கு உணவு தேடப் புறப்பட்டான்.

அருகிலிருக்கும் மணற்குன்றுகளைச்சுற்றி ஆராய்ந்து பார்த்தான். மணற்பாங்கில் வளரும் இரண்டொரு மரங்களில்தான் பழம் காய்த்திருந்தது. அவற்றுள் ஒன்றன் கனியைப் பறித்துத் தின்று ருசிபார்த்தான். வாதுமைப் பழத்தின் சுவையை ஒத்திருந்தது. கனிகளில் சிலவற்றைப் புசித்துப் பசி தீர்த்துக்கொண்டான். குன்றுகளின் சுற்றளவு மிகவும் சிறிதேயாகையால் நவகுமாரன் சொற்ப காலத்திற்குள் அவற்றைக் கடந்துவிட்டான். காட்டின் வழியே சென்று பழக்கமில்லாதவர்களுக்கு வழி தவறிவிடுவதுபோல் நவகுமாரனுக்கும் திசை மயக்கம் ஏற்பட்டது. வந்த வழியே திரும்பிக் குடிசைக்குச் செல்லும் பாதையை அவனால் கண்டுபிடிக்க முடிய

வில்லை. சமீபத்தில் எங்கோ பள்ளமான இடத்திலிருந்து ஜலம் கொந்தளிக்கும் ஓசை கேட்டது. அது கடலின் முழக்கமென்று தெரிந்துகொண்டான் நவகுமாரன். ஒரு குன்றின் திருப்பத்திலிருந்து வரும்போது எதிரே பெரிய நீர்ப்பரப்புத் தென்பட்டது. கரையற்ற நீல வாரிதியைக் கண்டதும் நவகுமாரனுடைய உள்ளம் களிபொங்கிக் குதித்தது. வெண்ணுரைப் பிடரிகளை விசிறி அலைப்பரிகள் வரிசை வரிசையாகக் கரையை நோக்கித் தாவிவந்தன. சிற்சில சமயம் நீண்ட மாலைக ளெனத் திரைக் கூட்டம் சுருண்டுவந்து மணலிற் படியும் கண்கொள்ளாக் காட்சி. மங்கும் சூரியனின் மஞ்சள் கிரணங்கள் உருக்கிய தங்கம்போல் கடல் நீரில் பிரதி பலிக்கும் விந்தை.

ஸமுத்திரத்தின் எழிலைப் பருகியவண்ணம் எவ் வளவு நேரம் நவகுமாரன் வீற்றிருந்தானே அது அவனுக்கே தெரியாது. வானிலும் கடலிலும் இருள் தன் கருஞ்சிறகை மெல்ல விரித்தது. அப்போதுதான் நவகுமாரனுக்குக் குடிலிற்குப் போகவேண்டிய ஞாபகம் உதித்தது. கடலைவிட்டு வர மனம் இல்லாதவனாய் பெருமூச்செறிந்து எழுந்திருந்தான். எதன்பொருட்டு அவன் வெய்துயிர்த்தானே அது நமக்குத் தெரியாது. இன்பமூட்டும் பழைய நினைவுகள் அவன் கண்முன் வந்திருக்கலாம். எப்படிச் சொல்வது? கரையிலிருந்து மேலே ஏறிச்செல்ல யத்தனிக்கையில் ஒரு திவ்ய வடிவம் தனக்கு வெகு சமீபத்தில் நிற்பதை அவன் கண் ணுற்றான். கம்பீரகோஷம் நிரம்பிய ஸமுத்திர தீரத்தில்,

அந்தி மங்கும் வேளையில் அழகின் உருவெடுத்த ஒரு பாவை நின்றிருந்தாள் !

தொடையளவு புரளும் கருநாகம் போன்ற சுழற் கூந்தல். அவளது பிறை நுதலில் படிந்த கூந்தல் அலை மதியை மறைக்கும் இருண்ட மேகச்சுருளை ஒத்திருந்தது. கடல்மீது ஒளிரும் குளிர் நிலவின் கதிரை அது மேலும் நினைப்பூட்டியது. அறல்போன்ற கூந்தலின் மறைவி லிருந்து அவளுடைய தோளின் ஓர் அம்சமும், வனப் புடைய அவள் கைகளும் சிறிதே தென்பட்டன. மெல்லிய லாளின் உடலழகைக் குறைக்க யாதோர் அணிகலமும் இல்லை. இயல்பாகவே கவின்வாய்ந்த அவளுக்கு அவை எதற்கு? ஒருவிதக் கவர்ச்சி அவளது தோற்றத்தில் நிலவியது. சந்திரிகையின் நிறத்தைப் பழித்தது அவ் வழகியின் மேனி. இத்தகைய அபூர்வ ஸ்ருஷ்டியைத் திரைபடும் கடற்கரையிலே அந்திப்பொழுதில் தற்செய லாகக் கண்ட எவன்தான் மெய்ம்மறந்து போகான்?

மனிதரே இராத இடத்தில் திடீரென ஒரு தேவ கன்னிகை தோன்றினால் யார்தாம் மரமென நிற்க மாட்டார்? நவகுமாரனும் வாய்பிளந்தபடியே அவ் வரம்பையை இமைகொட்டாமல் நோக்கினான். பேசும் சக்தியை அவன் வாய் இழந்துவிட்டது. அந்த லாவண்ய வதியின் இரு நீண்ட கயற்கண்கள் நவகுமாரனை உற்று நோக்கின. இவ்விருவருடைய கண்ணோக்கில் தென்பட்ட வித்தியாசம் யாதெனில், நவகுமாரனுடைய நோக் கானது திடீரென ஓர் அதிசயத்தைக் காண்பதுபோல் நிலைத்து நின்றும் மனத்திலுள்ள சஞ்சலத்தை வெளிக் காட்டியது. அந்தக் கடற்கன்னிகையின் விழியிலோ

யாதொரு சலனமும் இல்லை. அதில் இரக்கமும் வருத்தமும் கலந்ததோர் உணர்வு பிரகாசித்தது.

வெகுநேரம்வரை இருவரும் ஒருவரை யொருவர் நோக்கியபடியே நின்றிருந்தனர். முடிவில் அந்த இளமைக் காரிகையே பேச முற்பட்டாள்.

"வழிப்போக்கனே! நீ யாரோ? வழி தவறியா இங்கே வந்தாய்?" என்றாள் மழலைக்குரலில். அந்தக் குரலின் இனிமை நவகுமாரனுடைய உள்ளத்தைத் துடிக்கச் செய்தது.மனிதனுக்கு எதிர்பாராத விதமாக இத்தகைய இன்பங்களை நுகரும் பாக்கியம் கிட்டுகிறது! நவகுமாரனுக்கு உலகமே இன்னிசை நிரம்பியதாகத் தோற்றியது அச்சமயம். அவளது வசன மாதுர்யம் பல இன்பக் கனவுகள் காண அவனைத் தூண்டியது. 'வழிப்போக்கனே! நீ வழிதப்பி அலைகிறாயா?' — இந்த மொழி அவன் செவிகளில் அமுதெனப் பாய்ந்து அவனுடைய உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்தது. கடற்காற்று அந்த மொழியின் நாதத்தை அடிக்கடி ஏந்தி வருவதுபோல் இருந்தது. 'கடல் இனிது, நக்ஷத்திரங்கள் ஒளிரும் வான் இனிது, அருகிலிருக்கும் அந்தப் புவனமோகினியும் இனியவளே' என்றெல்லாம் அவனுடைய அழகின் இனிய சந்தத்தில் நவகுமாரனுடைய உணர்ச்சி யனைத்தும் மண்டியிருந்தன.

மறுமொழி நவகுமாரனிடமிருந்து வராதுபோகவே, "என்னுடன் வா" என்று இயம்பி அப்பாவை கொடி படர்வதுபோல் மெல்லக் கரையேறினாள். அவள்

செல்லும்போது காலடியின் சப்தமே கேட்கவில்லே. பஞ்சினும் மெல்லியதோ அவளுடைய மஞ்சு சீரடிகள்? வானிடைத் தண்காற்றில் உலவும் துல்லிய மேகமெனச் சந்தடியில்லாமலே அவள் நடந்தாள். நவகுமாரன் திக்பிரமித்து அவளேப் பின்தொடர்ந்தான். சிறிது தொலேவு சென்றதும் காடடர்ந்த ஒரு முடுக்கில் யுவதி காணுமற் போனுள். நவகுமாரன் இதைக் கவனிக்க வில்லே. அவன் தன் மயக்கம் கலேந்து பார்க்கையில் காபாலிகனுடைய குடில் எதிரே இருந்தது.



6

காபாலிகனுடன்

" கொலைச் சிறை விடுக
தனைச் சிறை போக்குக " — பெருங்கதை

நவகுமாரன் குடிலை அடைந்ததும் ஒன்றும் தோன்ருதவனுய்த் தலைமீது கையை வைத்துச் சற்று முன் நிகழ்ந்தவற்றைச் சிந்திக்கலானுன். வெகு நாழிகை வரை அவன் எழுந்திருக்கவே இல்லை.

'தேவதையோ! இவள் பூலோக ஸௌந்தரியோ! அல்லது அந்தக் காபாலிகன் இயற்றும் மாயையோ?' என்றெல்லாம் நவகுமாரனுடைய மனத்தின்கண் ஐயம் உலாவிற்று.

ஸாதாரணமான காட்சிகளோடு பழகின ஒருவன் எதிர்பாராத இடத்தில் அதிசயமானதொன்றைக் காணும்போது பொறிகலங்கிச் செயலற்றுவிடுகிருன். அவன் கொண்ட நம்பிக்கைகளும், கொள்கைகளும் தடுமாறிவிடுகின்றன. அதைப்போலவே நவகுமாரனுடைய நிலையும் இருந்தது. குடிலின் கதவை மூடிக் கொண்டதும் அவன் மனம் வேற்றுலகில் ஸஞ்சரிக்கத் தொடங்கியது.

மனம் எங்கோ சுற்றுவதனுல் குடிசையினுள் இருப்பதைக் கவனிக்க நவகுமாரனுக்கு அவகாசம் ஏற்பட

வில்லை. அவன் பர்ணசாலைக்குத் திரும்பி வருவதன் முன்பே அங்கே கொள்ளிக்கட்டை யொன்று எரிந்து கொண்டிருந்தது. இதை முதலில் அவன் கவனிக்கவில்லை. இரவு முதிர்ந்த பிறகே நவகுமாரன் இவ்வுலகின் நினைவைப் பெற்றான். அந்தி வேளையில் செய்ய வேண்டிய கிருத்தியங்களை முடித்துக்கொள்ள எழுந் திருக்கையில், குடிலினுள் முந்தின நாள் கண்டிராத பல திரவியங்கள் அவனுக்குத் தென்பட்டன; எரிகொள்ளி கனிந்துகொண்டிருந்தது. அரிசியும் இன்னும் தளிகைக்கு வேண்டிய பொருள்களும் அங்கே கிடந்தன. நவகுமாரன் இவற்றைக் கண்டதும் திடுக்கிடவில்லை. 'இது காபாலிகனுடைய வேலை; இவ்விடத்தில் அதிசயப்படக்கூடிய விஷயங்கூட ஒன்று உண்டோ?' என்று அவன் நினைத்துக்கொண்டான்.

தேவபாஷையில் ஒரு முதுமொழி உண்டு. 'சஸ்யம் ச கிருஹமாகதம்;' (பயிர் விளைந்து வீட்டுக்கு வந்து விட்டது) 'போஜ்யஞ்ச உதராகதம்.' (வயிற்றுக்குச் சோறும் ஆகிவிட்டது) நவகுமாரனுக்கு இந்த யுக்தி தெரியாதென்று நான் சொல்ல வரவில்லை.

ஸாயங்கால கர்மாதிகளை முடித்துக்கொண்ட பிறகு வயிற்றின் இடும்பையை அகற்ற நவகுமாரன் ஏற்பாடுகள் செய்தான். அருகில் இருந்த மட்பாண்டம் ஒன்றில் சோறு சமைத்து உண்டான்.

மறுநாள் வைகறையில் புலித்தோல் படுக்கையி லிருந்து எழுந்து நேரே கடற்கரையை நோக்கிச் சென்றான். முன் சென்றிருந்த பழக்கத்தால் அவனுக்கு வழி சுலபமாகவே புரிபட்டது. காலைக் கடன்களை அங்கே

முடித்துவிட்டு வெகு நேரம் காத்திருந்தான். யாருக்காக? அவன் நெஞ்சில் நிரம்பியிருந்த அந்த மான் விழியாளைச் சந்திப்பதற்குத்தான். கடலையும் அதன் அழகிய சுற்றுப்புறத்தையும் விட்டுவர அவன் மனம் மறுத்தது. பசி தாகத்தையும் மறந்தான். நீண்ட நேரமாகியும் அவ்விடத்தில் எந்தச் சொர்க்க அரம்பையும் தென்படவில்லை. நாற்புறமும் திரிந்து பார்த்துப்பார்த்து நவகுமாரனுடைய கண்ணொளி மங்கினது. அவன் சிரமம் யாவும் வியர்த்தமாயிற்று. மனிதர் வருவதன் அறிகுறி ஒன்றுமே காணவில்லை. மனம் முறிந்தவனாய்த் திரும்பித் தன் குடிலை அடைந்தான். அப்போது கூங்குல் பெரு வெள்ளம் எத்திசையும் கவிந்து வந்தது. குடிலினுள் காபாலிகன் ஏகாந்தமாக அமர்ந்திருப்பது தெரிந்தது. நவகுமாரன் அவனைக் கண்டதும் வணங்கி நின்றான். அவனை வரவேற்கச் சிரத்தைக்கூட அசைக்காமல் காபாலிகன் மௌனமாயிருந்தான்.

நவகுமாரன் குரலில் அச்சம் தோன்ற, "ஸ்வாமீ, உம்மைப் பார்க்கவேண்டுமென்று நேற்று மாலையிலிருந்து தேடுகிறேன்; நீர் அகப்படவில்லை" என்றான்.

காபாலிகன், "விரதத்தில் ஈடுபட்டிருந்தேன்; அதனால்தான் நான் வரமுடியாமற் போய்விட்டது" என்றான்.

நவகுமாரனுடைய மனம் ஊருக்குப் போக ஏக்கமுற்றது. காபாலிகனுக்குத் தன் எண்ணத்தை வெளியிடத் துணிந்தான் நவகுமாரன். "ஊருக்குப் போக வேண்டும். எனக்கு வழி தெரியவில்லை. வழிக்கு வேண்டிய உணவும் இல்லை. உங்களைக் கேட்டால் இதற்கு

உபாயம் சொல்வீரென்ற நம்பிக்கையுடன்தான் இங்கே இருக்கிறேன்" என்றான்.

காபாலிகன், "ஆனால் என் பின்னாலேயே வா" என்று இயம்பி உதாஸீனமாக எழுந்தான்.

காபாலிகனுடைய இந்தச் செயலை, தன் ஊருக்கு வழிகாட்டுவதற்காகத்தா னென்று எண்ணிவிட்டான் நவகுமாரன். அந்தியின் ஒளியும் மங்கிக்கொண்டே வந்தது. முற்றும் மறைந்து இருட்டாகவில்லை. காபாலிகனைப் பின்பற்றி நவகுமாரன் சென்றான். தன் முதுகில் யாருடைய மெல்லிய விரல்களோ மெது வாகத் தொடுவதை நவகுமாரன் உணர்ந்தான். திரும்பி நோக்குகையில், அன்று கடற்கரையில் அவன் கண்ட அந்தத் தேவியே தோன்றினாள். முன்போலவே அவள் நிலைத்த பார்வையுடன் நவகுமாரனையே உற்று நோக்கினாள். 'இந்தத் தேவகன்னிகை எவ்வாறு இங்கே தோன்றினாள்?' நவகுமாரனுடைய மூளையில் இந்தக் கேள்வியே சுழன்றுகொண்டிருந்தது. அந்த நிலவன்ன சாயலாள் இதழ்மேல் விரலழுத்தி ஏதோ குறிசெய் தாள். "வாயைத் திறக்காதே" எனப் பொருள்படும் சங்கேதமென்று அறிந்தான் நவகுமாரன். அவனுக்கு இந்த எச்சரிக்கையை அவள் செய்யவேண்டியதே இல்லை. ஏனென்றால் நவகுமாரன் பேசக்கூடச் சக்தி யற்று இருந்தான் அந்நேரம். காபாலிகனுடைய செயலைக் கண்டதனாலோ, அல்லது அவ்வபூர்வமான ஸ்திரீயின் ரூபத்தை மீண்டும் பார்க்க நேரிட்டதனாலோ என்னவோ அவன் அப்படி இருந்தான். அவன் கால்கள் மட்டும் பின்தங்கின. காபாலிகன் முன்னேறிக்கியே

சென்றுகொண்டிருந்தான். அவனுடைய செவிக்கு விழாதபடி தாழ்ந்த குரலில், அம்மடந்தை என்னவோ பேசினுள். குழம்பியிருக்கும் நவகுமாரனுக்கு, “ எங்கே போகிருய்? நீ போகாதே, திரும்பி விடேன். இப்பொழுதே இவ்விடத்தைவிட்டு ஓடிவிடு” என்ற சொற்களே கேட்டன.

இதைக் கூறியதுமே அம்மெல்லியல் அரிவை மாயமாக மறைந்தாள். நவகுமாரனுடைய பதிலை அவள் எதிர்பார்க்கவில்லை. சிலகாலம் அவன் ஸ்மரணையற்று ஒரே இடத்தில் கல்லெனச் சமைந்து நின்ருன். அந்தப் பெண் கண்மறைந்த இடம் அவனுக்கு எப்படித் தெரியும்?

‘இதென்ன விந்தை...என் சித்தந்தான் மயக்கம் கொண்டிருக்கிறதோ?’ இவ்வாருன கேள்விகள் அவன் மனத்திடை எழுந்தன. பயஸூசகமான வார்த்தைகளை அவள் எதற்காகச் சொன்னுள்? தன்னை மகத்தான ஆபத்திலிருந்து காப்பதற்கே இவ்விதம் செய்தாளென்று மட்டும் அவனுக்குத் தோற்றியது. அது எந்தவிதமான விபத்தோ? எதற்குப் பயந்து விழிப்புடன் இருக்க வேண்டும்? இந்தத் தாந்திரிகர்கள் கொடியவர்கள்; நரபலியிடும் பாவிகளாயிற்றே. ஓடிவிடலாமா? எதற்காக ஓடவேண்டும்? தப்பிப் பிழைக்கவேண்டுமென்று தலையில் எழுதியிருந்தால் பிழைப்பது திண்ணம். காபாலிகனும் மனிதன்தானே?

இவ்வண்ணம் நவகுமாரனுடைய சித்தக்கடல் அலைத்தது. காபாலிகன் தன் பின்னுல் நவகுமாரன் இராததைக் கண்டு வந்த வழியே திரும்பி, “ஏன் பின் தங்குகிருய்?” என்று நவகுமாரனை நோக்கி வினவினுன்.

காபாலிகன் இடிக்குரலில் இயம்பிய ஆக்ஞையைச் செவியுற்றதும் நவகுமாரனுடைய ஜீவனே ஒடுங்கி விட்டது. நடைப்பிணம்போல் மீண்டும் காபாலிகன் பின்னாலேயே நடந்து சென்றான்.

சிறிது தொலைவு சென்றதும் களிமண் சுவர்களுடைய குடிலொன்று புலனாயிற்று. அதை ஒரு குகையென்று சொன்னாலும் தகும். அதன் பின்புறம், பள்ளத்தில் கடலின் நீண்ட மணற்கரை. அந்த மண் வீட்டின் பக்கமாகவே காபாலிகன் நவகுமாரனை இட்டுச் சென்றான். அக்கணமே அம்புபோல் எங்கிருந்தோ அந்த மாயப்பெண் நவகுமாரனை அணுகி அவன் காதோடு, " இப்பொழுதே ஓடிவிடு; நரபலி இராது. இந்தக் காபாலிகர்கள் செய்யும் பூஜை என்றும் நிறைவேறாது. இது உனக்குத் தெரியாதா ?" என்றாள் மிகவும் பரபரப்புடன்.

நவகுமாரனுடைய நெற்றிக்கட்டு வேர்த்தது. அவனது போதாதவேளை பெண்மணியின் இந்த ரகஸிய மொழி காபாலிகனுக்கு எட்டிவிட்டது. " கபாலகுண்டலே !" என்று அவன் சினந்து சொன்ன த்வனி மேக கர்ஜனைபோல் இருந்தது. ஏற்கனவே மருண்டிருந்த நவகுமாரனுடைய இதயம் இந்த வஜ்ர நாதத்தினால் பின்னும் படபடவென்று அடித்துக் கொண்டது. அவனுக்கு இருந்த கொஞ்ச நஞ்சம் திடமும் குலைந்துவிட்டது. ஆனால் கபாலகுண்டலை மட்டும் பதிலே சொல்லவில்லை. யாதொரு பயக்குறியும் அவள் முகத்தில் தென்படவில்லை.

இரும்புபோன்ற காபாலிகனுடைய கரங்கள் நவகுமாரனுடைய கையை இறுகப் பிடித்துக்கொண்டன.

நரகாதகனுடைய பரிசம் படவே ஆத்திரத்தால் நவகுமாரனுடைய சரீரம் பதைபதைத்து ரத்தம் அவன் உடலுள் குபீரென வேகமாய்ப் பரவியது. சற்றுமுன் இழந்திருந்த பலத்தை உடனே பெற்ருன்.

"என் கையை ஏன் பிடிக்கிறீர்கள்? விடும்" என்று கூறி காபாலிகனுடைய பிடியை உதறித்தள்ளினுன். ஆனுல் காபாலிகனு இலகுவில் தன் பிடியை விடுபவன்? "என்னை எங்கே அழைத்துச் செல்கிறீர்?" என்று நவகுமாரன் கேட்டதற்குக் காபாலிகன் குரூரமான துவனியில், "பூஜை பண்ணும் இடத்திற்கு" என்ருன்.

நவகுமாரன் :—எதற்காக?

காபாலிகன் :—பலி இடுவதற்காக.

நவகுமாரன் தன் பலமெல்லாம் கொண்டு காபாலிகனிடமிருந்து திமிரிக்கொள்ள முயன்றும் அந்த மாந்திரிகனின் வஜ்ரமுஷ்டி அவனுடைய கையைப் பின்னும் அழுத்திப் பற்றிக்கொண்டது.

சாமான்யமானவனு யிருந்தால் நவகுமாரனுடைய பலப் பிரயோகம் காபாலிகனைத் தரையோடு தரையாகக் கவிழும்படி செய்திருக்கும். ஆனுல் அந்தக் காபாலிகன் வயது முதிர்ந்தவனுகத் தென்பட்டாலும் அவனுக்கு எட்டுயானையின் பலம் இருந்தது. நவகுமாரன் தன்னை விடுவித்துக் கொள்ளுகையில் காபாலிகனுடைய பலிஷ்ட தேகம் சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. 'இவனிடமிருந்து மீள்வது இயலாத காரியம். சூழ்ச்சியினுல்தான் காரியத்தை ஸாதிக்கவேண்டும், இன்னும் என்ன நடக்கிறதோ பார்க்கலாம்' என்ற முடிவிற்கு வந்தவனுய்க் காபாலிகனுடன் சென்ருன் நவகுமாரன்.

கடற்கரைக்குச் சமீபத்தில் உயரமான மணல் மேட்டில் பெரிய கொள்ளிக்கட்டை தீப்பற்றித் திக்திக் என்று எரிந்துகொண்டிருந்தது. தாந்திரிக பூஜைக் குரிய ஸாமக்கிரியைகள் நாற்புறமும் இருந்தன. அவற்றின் நடுவே ஒரு மண்டையோட்டில் குருதியின் நிறம்கொண்ட மதுபானம் இருந்தது. ஆனால் அன்று நவகுமாரன் கண்ட சவம் மட்டும் காணவில்லை. தானே அந்த இடத்தில் பிண உருவாக ஆகவேண்டுமென்பதை அவன் ஊகித்துக்கொண்டான். உலர்ந்துபோன காட்டுக் கொடிகள் அவ்விடத்தில் முன் ஜாக்கிரதையாகவே சேகரிக்கப்பட்டிருந்தன. காபாலிகன் அவற்றைக் கொண்டு நவகுமாரனைப் பிணைத்துவிட்டான். நவகுமாரன் தன் பலம் கொண்டவரைக்கும் தப்பித்துக்கொள்ளப் பிரயாசைப்பட்டான். ஆனால் அவனுடைய பலம் எங்கே; காபாலிகனுடைய இரும்பான வலிமை எங்கே! அரக்கனது உரம் கொண்டவனாக விளங்கினான் காபாலிகன். நவகுமாரனுடைய வீண் முயற்சியைக் கண்டு, "அட மூடா! எதற்காக இப்படி முக்கி முரணுகிறாய்? உன் ஜன்மம் இன்று பயனுடையதாகப் போகிறதே. அன்னை பயங்கரி உன்னைப் பலியாக ஏற்றுக்கொள்ளப் போகிறாளே! இதைவிட வேறு புண்ணியம் என்ன நீ செய்யப்போகிறாய்?" என்றான் இரக்கமின்றி.

செவ்வனே கொடிகளினால் கட்டிவிட்டு நவகுமாரனை மணல்தரையில் ஒரு பக்கமாகக் கிடத்தினான். இந்த அநீதிக்கு மௌன ஸாக்ஷிகளாக இருந்தன, வானும் கடலும் வையமும். நரபலிக்குமுன் நிகழ்த்த

வேண்டிய உச்சாடனம் மாரணம் முதலிய சடங்குகளைச் செய்வதில் ஊக்கமாயிருந்தான் காபாலிகன், கொடித் தளைகளினின்று விடுதலைபெற நவகுமாரன் விலுவிலு வென்று உதைத்துக்கொண்டான். ஆனால் அறுகிற கொடியா அது? காபாலிகனுடைய கட்டு லேசில் தளரக் கூடியதா? மரணம் நிச்சயமென்று நவகுமாரன் எண் ணும்போது, தன் பிறந்த ஊர், தன் அன்னையின் முகம், யாவும் அவன் எதிரே சூன்யத்தில் தோன்றின. அப் போது அவன் கண்களிலிருந்து பெருகிய துக்கவெள்ளம் மணலில் ஊறி உலர்ந்துபோயிற்று.

தாந்திரிகக் கிரியைகளை முடித்துக்கொண்டு காபாலி கன் நவகுமாரனைப் பலியிடுவதற்கு வாளை எடுக்க வந்தான். ஆ இதென்ன! வாள் அவன் வைத்திருந்த இடத்தில் இல்லையே? ஆச்சரியம்! காபாலிகன் இச்சிறு விஷயத்திற்காகக் கலவரமடைந்து பின்வாங்கவில்லை. அன்று பகற்பொழுது கத்தியை அவ்விடத்தில் கொண்டு வைத்தது அவனுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. பின் எங்கே போய்விடும் அந்தக் கட்கம்? காபாலிகன் இங்குமங்கும் தேடிப்பார்த்தான். அகப்படவில்லை வாள். முன்சொன்ன மண்வீட்டை அடைந்து, "கபால குண்டலே!" என்று இடிமுழங்குவதுபோல் கூப்பிட் டான். அதனால் அவனுடைய தொண்டை கிழிந்ததே தவிர யாதொரு பதிலும் வரவில்லை. 'இதென்ன! கபாலகுண்டலை எங்கே மறைந்தாள்?'-காபாலிகனுடைய விழிகள் பிதுங்கி,' உருண்டையாகிச் சினம் பொங்கி ரத்த வர்ணமாக மாறின. புருவக்கடை சுருங்கிற்று.

காபாலிகன் நவகுமாரனைச் சிறைப்படுத்தும் காட்சி

அதிரும்படி காலடிவைத்துக் கடற்கரையை நோக்கி வேகமாக நடந்தான்.

இவ்வரிய தருணத்தில் நவகுமாரன் தன்னை விடுவித்துக் கொள்ளப் பாடுபடுவதை ஒரு காருண்யதேவதை பார்த்துக்கொண்டிருந்தது. பக்கத்தில் மணல்மேல் மெதுவாக யாரோ நடந்துவரும் அரவம் கேட்டது. அது காபாலிகனுடைய காலடிச்சப்தமன்றெனக் கண்டு நவகுமாரன் மிகச் சிரமத்துடன் திரும்பி நோக்கினான். அந்த மோஹினியே - கபாலகுண்டலையே! அவள் கரத்தில் பெரிய வாளொன்று பிரகாசித்தது. "உரக்கப் பேசாதே...வந்துவிட்டேன்...இதோ என்னிடம் கத்தி இருக்கிறது...இதை நான் திருடிக்கொண்டு வந்துவிட்டேன்" என்று கூறித் தயையின் வடிவமான அப் பெண்ணரசி அதிவிரைவில் நவகுமாரனை லதாபாசத்திலிருந்து விடுவித்தாள். "ஓடிவிடுவோம் நாம். துரிதமாக என் பின்னாலே வா...உனக்கு வழி காண்பிக்கிறேன்" என்று மொழிந்து நவகுமாரனுக்கு வழிகாட்டிக் கொண்டே மின்வேகமாகச் சென்றாள்.

நவகுமாரன் உவகை தாளாமல் குதித்தெழுந்து தன் பாக்கிய தேவதையைப் பின்தொடர்ந்தான்.



7

தேடுதல்

'பாரொடும் பொருந்தி நின்ற
மராமரம் பணைக ளோடும்
வேரொடும் பறித்து மண்மேல்
வீழ்வதே போல வீழ்ந்தான்' — **கம்ப ராமாயணம்**

இந்தப் பக்கம் காபாலிக்ன் குடிலினுள் ஓர் இடம் விடாமல் அலசி அலசி ஆராய்ந்து பார்த்தான். வாளாயினும் கபாலகுண்டலையாயினும் காணுமற்போகவே சந்தேகமும் கலவரமும் குடிகொண்ட மனத்துடன் கடற்கரைக்கே திரும்பினான். அங்கே வந்து பார்க்கையில் நவகுமாரனையும் காணவில்லை. காபாலிகனுக்கு இது பின்னும் விம்மிதத்தை விளைவித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவனுடைய பார்வை அறுபட்டுக் கிடக்கும் கொடிகள்மீது வீழ்ந்தது. விஷயம் புரிந்துவிட்டது. காபாலிகன் நவகுமாரனைக் கண்டுபிடிக்கத் தாவிச் சென்றான். ஆனால் அவ்வடர்ந்த கானகத்துள் மறைந்து ஓடுபவர்களைத் தேடிப்பிடிப்பது மிகவும் கடினமல்லவா? அதோடு இருட்டிவிட்டதால் எவருடைய உருவமும் கண்ணிற்குத் தென்படாது. ஓடிவிட்டவர்கள் பேச்சுக் குரலாவது கேட்குமோவென்று காபாலிகன் ஊன்றிக்

கவனித்து இங்குமங்கும் சற்று உலாவினான். ஆனால் குரலோசை எப்போதுமே காதில் விழும்படியாகக் கேட்கிறதா? ஆகவே நாற்றிசையும் ஏககாலத்தில் சுற்றிப் பார்க்கவேண்டி உயர்ந்த மணற்குன்றின்மீது ஏறினான் காபாலிகன். அவன் ஒரு பக்கமாக ஏறிக் குன்றின் உச்சியை அடைந்தான். அம்மணற் குன்றின் மறுபக்கம் பல இடங்களில் மழைப்பெருக்கினால் அடிவரை சிதைந்து கிடந்தது. காபாலிகனுக்கு இது தெரியாது. குன்றின் சிகரத்தை அடைந்த மாத்திரம் அவனுடைய உடலின் பளுவினால் குன்றின் மறுபுறத்தின் ஒரு பெரும்பகுதி பெயர்ந்து பெரும் சப்தத்துடன் சரிந்தது. அதன்மேல் நின்றிருந்த காபாலிகனும் மரம் அற்று வீழ்வதுபோல் அதோடு கீழே பள்ளத்தில் வீழ்ந்தான்.



8

புகலிடம்

'இருவரு மவ்வழித் தழீஇயின ரெழுந்துவந்
தொருபெருங் கோயில் புகுந்த பின்னர்' — பெருங்கதை

அந்த அமாவாசைப் பேயிருட்டில் கபால குண்டலையும் நவகுமாரனும் காட்டினுட் புகுந்தனர். நவகுமாரனோ காட்டுப் பாதையை அறியான். தன்னுடன் வரும் அப்பருவ மடந்தை செல்லும் வழியைப் பின்பற்றுவதைத் தவிர வேறு உபாயமில்லை அவனுக்கு. "இதுவும் தலை எழுத்துத்தானே!" என்று தன்னுள் சொல்லிக்கொள்வான்.

மனிதன் விதிக்கு அடிமையே ஒழிய, விதி மனிதனுக்கு அடிமை அல்ல என்பதை அவன் உணரவில்லை போலும்! இந்த உண்மையை அறிந்திருந்தால் இவ்வாறான துன்பங்களுக்கு அவன் ஆளாகி இருக்கவேண்டியதே இல்லை. மாளாத வழியே நடக்க நடக்க இருவருடைய கால்களும் சோர்வினால் தடுமாறின. அந்தப் பேரந்தகாரத்தில் தென்பட்டதெல்லாம் தொலைவில் தெளிவற்று விளங்கும் மணற்குன்றுகளும், மின்மினிக் கூட்டம் பளிச்செனத் திகழும் இரண்டொரு மரங்களுமேயாம்.

கபாலகுண்டலை நவகுமாரனைத் தன்னுடன் காட்டினூடே அழைத்துச் சென்றாள். அப்போது இரவின் இரண்டாவது யாமம். எதிரே அந்தகாரம் சூழ்ந்த வனத்தின் நடுவே ஒரு கோயிலின் விண்ணிவந்த கோபுரம் தென்பட்டது. அதன் அருகில் செங்கற்களால் கட்டப்பெற்ற ஒரு வீடும் இருந்தது. கபாலகுண்டலை வீட்டின் வாயிலை நண்ணிக் கதவைத் தட்டினாள். அடிக்கடி அவள் கதவை இடிக்கவே உள்ளே இருந்த ஆள், "யாரது? கபாலகுண்டலையா?" என்று குரல் கொடுத்தார். "கதவைச் சற்றுத் திறவுங்கள்" என்றாள் கபாலகுண்டலையும்.

வீட்டினுள் இருப்பவர் கதவைத் திறந்தார். அவர் யாரெனின், அங்குள்ள ஆலயத்தில் அமர்ந்திருக்கும் அம்பிகையை வழிபடும் பக்தர்; அவ்வாலயத்தின் தர்மகர்த்தரும் அவரே; வயது ஐம்பதிற்குமேல் இருக்கும். கபாலகுண்டலை அவரது வழுக்குத் தலையைத் தொட்டுத் தன் காதோடு இழுத்துக்கொண்டு இரண்டொரு வார்த்தைகளில் நவகுமாரனுடைய நிலைமையைப்பற்றிச் சொன்னாள். கோயில் அதிகாரி வெகுநேரம் தம் உள்ளங்கையைப் பார்த்தவண்ணம் சிந்திக்கலானார். "இது மிகவும் பயங்கரமான விஷயம்; அந்தக் காபாலிகரின் சித்துக்கு அடங்காதது ஒன்றுமில்லை. ஆனால் அம்பாள் கிருபைகூர்ந்தால் உங்களுக்கு யாதோர் இடையூறும் வராது. உன்னுடன் வந்தவர் எங்கே? அம்மா" என்றார்.

கபாலகுண்டலை, "இப்படி வாருங்கள்" என்று நவகுமாரனை அழைத்தாள். மறைவில் நின்றிருந்த நவகுமாரன் இதைக் கேட்டு வீட்டினுள் பிரவேசித்தான்.

அதிகாரி அவனை நோக்கி, "இன்று இவ்விடத்தில் மறைந் திரும். நாளை அதிகாலையிலேயே மேதினீபுரத்திற்குச் செல்லும் மார்க்கத்தை உமக்குக் காண்பிக்கிறேன்" என்றார். நவகுமாரன் பட்ட பட்டினியாகத் தண்ணீர் கூட உட்கொள்ளாமல் கிடப்பதை அதிகாரி தெரிந்து கொண்டார். உடனே அதற்கு வேண்டிய உபகரணங் களைச் செய்தும் நவகுமாரன் உணவைவிட இளைப்பாறத் தனக்கு வசதி வேண்டுமென்பதைத் தெரிவித்தான். அதிகாரி தம்முடைய சமையலறையிலேயே நவகுமார னுக்குப் படுக்கையைப் போட்டார். நவகுமாரன் படுத்துக்கொண்டதும் கபாலகுண்டலை தன்னிடமான கடற்கரைக்குத் திரும்பிச்செல்ல முற்பட்டாள். அச் சமயம் அக்கோயில் அதிகாரி அன்புகனியும் பார்வையு டன் அவளை நோக்கி, "அம்மா போகாதே! சற்று நில். உன்னை ஒன்று வேண்டிக்கொள்கிறேன்" என்றார்.

கபாலகுண்டலா : என்ன?

அதிகாரி : உன்னைப் பார்த்தது முதல் என் அன்னை யாகவே பாவித்து வருகிறேன் உன்னை. இந்த ஜகதீச் வரியின் பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். என் தாயைவிட உன்னை நான் நேசிக்கிறேன். என்னுடைய வேண்டுகோளை அலக்ஷ்யம் செய்யக்கூடாது. என்ன?

கபா : செய்யமாட்டேன்.

அதி : நீ அந்த இடத்திற்கு இனிப் போகாதே.

கபா : ஏன் அப்படி?

அதி : போனால் உன்னைக் காப்பாற்றுவாரே இல்லை.

கபா : அது எனக்குத் தெரிந்துதான் இருக்கிறது.

அதி : பின் ஏன் போகிறாய் ?

கபா : அங்கே செல்லாமல் வேறு எனக்குப் போக்கிடம்?

அதி : இந்த வழிப்போக்கனுடன் தேசாந்தரம் போய்விடு.

கபாலகுண்டலை மௌனமாகி விட்டாள்.

அதிகாரி, "அம்மா என்ன யோசிக்கிறாய் ?" என்றார்.

கபா : முன் ஒருசமயம் உம்முடைய சிஷ்யர் ஒருவர் வந்திருந்தபோது, இளம்பெண் யுவா புருஷர்களுடன் செல்வது உசிதமல்லவென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது அதற்கு நேர்மாறாகச் சொல்லுகிறீர்களே ?

அதி : அப்போது உன் உயிருக்கு ஆபத்து ஒன்றும் நேரிடவில்லை. இப்போது உன் நிலைமை மாறிவிட்டதால் இவ்வண்ணம் நான் சொல்லும்படி ஆயிற்று. வா அம்மா, ஜகன்மாதாவின் விருப்பத்தை அறிந்து கொண்டு வருவோம்.

இவ்வாறு மொழிந்ததும் அதிகாரி விளக்கொன்றைப் பிடித்துக்கொண்டு கோயிலின் கதவைத் திறந்தார். கபாலகுண்டலையும் அவருடனே சென்றாள். ஆலயத்தினுள் மனித வடிவப் பரிமாணமுள்ள காளியின் கருநிறச் சிலையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இருவரும் பக்தி பரவசமாகித் தேவியைத் தொழுது வணங்கினர். அதிகாரி பூஜா பாத்திரத்திலிருந்து புனிதமான நீரை இரண்டு வாய் ஆசமனம் செய்தபிறகு புஷ்பத்தட்டிலிருந்து ஒரு பில்வதளத்தை எடுத்து மந்திரம் ஓதிப் பிரதிமையின் பாதங்களில் வைத்துவிட்டுச் சற்றுநேரம்

அதையே உற்றுக் கவனித்தார். இமைப்பொழுது சென்றதும், அதிகாரி கபாலகுண்டலைக்கு அந்தத் தெய்வக் குறியை விளக்கி, "அம்மா! அதோ பார்; தேவி அர்க்கியத்தை ஏற்றுக்கொண்டாள். நான் வைத்த பில்வதளம் நழுவிவிழவில்லை. என்னுடைய கோரிக்கை இனிதே முடியுமென்று ஜகன்மாதாவின் எண்ணம் போலும். நீ எதற்கும் தயங்காமல் இந்த யாத்திரிகரோடு செல்லலாம். பரிசயமிராதவரை எப்படி நம்புவதென்று நீ சந்தேகப்படலாம். வாஸ்தவம்; நீ அன்னிய மனுஷி யாக அவருடன் சென்றால் உலகத்தவர் தூற்றுவார்கள். இந்தப் பிரயாணி பிராம்மணரென்று சொல்லி யிருக்கிறாய். மார்பில் நூல் புரளுகிறது. இவர் உன்னை விவாகம் செய்துகொண்டால் எல்லா விஷயத்திற்கும் நன்மையாக இருக்கும். அவ்விதம் முடியாதுபோனால் நான் மட்டும் உன்னைத் தனியாக வேற்று மனிதருடன் அனுப்புவேனா?" என்றார்.

"வி-வா-க-மா!" — கபாலகுண்டலை இந்த வார்த்தையை மிகவும் நிதானமாக உச்சரித்தாள். "விவாகம் என்ற பெயரை உங்கள் வாய்மூலமாகத்தான் முதல் முதலில் நான் கேள்விப்படுகிறேன். அது எதைக் குறிக்கிறதென்பது எனக்கு இன்னும் தெரியாது. நான் எந்தவிதமாக நடந்துகொள்ள வேண்டும்?" என்றாள்.

முகத்தில் மெல்லிய முறுவல் தோன்ற அதிகாரி, "விவாகமென்பது பெண்களுக்குக் கற்பு நெறியைக் காட்டும் முக்கிய ஸாதனமாகும். இதன்பொருட்டே ஸ்திரீகள் ஸஹதர்மிணிக ளென்று அழைக்கப்படுகிறார்

கள். இதோ நிற்கும் ஜகன்மாதாவும் சிவனுக்கு வாழ்க்கைப்பட்டவள்தான்" என்றார்.

கபாலகுண்டலையின் அகக்கண்ணிற்கு ஒரு புது உலகம் திறப்பதுபோல் இருந்தது. "அப்படியே செய்யுங்கள். ஆனால் அவரை (காபாலிகன்) விட்டு நீங்குவதற்கு என் மனம் சற்று அசம்மதப்படுகிறது, சிறு வயதிலிருந்து ஊட்டி வளர்த்தவர் அல்லவா அவர்?" என்றாள்.

அதி:—எந்தக் காரணத்தைக்கொண்டு அவ்விதம் உன்னை வளர்த்தார் தெரியுமா? தாந்திரிகர்கள் ஒரு காலும் சித்தியடைய மாட்டார்கள். இதெல்லாம் உனக்குத் தெரியாது. நானும் தாந்திரிக நூல்களைப் படித்தவன்தான். ஜகதம்பாவானவள் மூவுலகிற்கும் தாய் - கற்பிற் சிறந்தவள் - ஸ்திரீகளுக்குள் பிரதானமானவள். அவள் காணுதற்கரியவள். கோர தாந்திரிகர்களின் வழிபாட்டை அவள் வெறுப்பவள். நீ அவரைத் துறந்து செல்வதனால் நன்றிகெட்டவ ளாகமாட்டாய். நல்லகாலம், அவருடைய ஸாதனைகள் முற்றுப்பெறுவதற்குள் நீ உயிருடன் மீண்டாயே! இன்று நீ செய்த காரியம் உன் பிராணனுக்கே தீமை விளைவித்திருக்கிறது. அம்மா! அதனால் நீ ஓடிவிடுவதே நலம். பவானியின் கட்டளையும் இதுவே. நீ தயங்காதே. உன்னை இங்கேயே வைத்துக்கொள்ளக்கூடுமானால் கட்டாயம் வைத்துக் கொண்டு ரக்ஷிப்பேன். ஆனால் அத்தகைய வழி ஒன்றையும் காணவில்லையே; அது உனக்கும் தெரியும்."

"ஆனால் விவாகமே செய்துகொள்கிறேன்" என்றனள் கபாலகுண்டலை.

இருவரும் கோயிலைவிட்டு வெளியேறினர். தம் வீட்டில் ஒரு பத்திரமான இடத்தில் கபாலகுண்டலையை அமர்த்திவிட்டு அதிகாரி நவகுமாரன் படுத்திருக்கும் அறைக்குச் சென்று அவனது தலைப்புறமாக உட்கார்ந்தார். "தூங்குகிறீர்களா என்ன?" என்று நவகுமாரனுடன் பேசுவதற்குக் குறிப்பாக வினவினார். நவகுமாரனுக்கும் நித்திரை வருகிற வழியாய் இல்லை. தன் நிலைமையை நினைந்து ஆகுலமுற்றிருந்தான்.

"அடியேன் தூங்கவில்லை" என்றான்.

"ஸ்வாமி, தங்களுடைய பரிசயத்தைப் பெறவே வந்தேன் நான். தாங்கள் பிராமணர்தானே?" என்று விசாரித்தார் அதிகாரி.

நவ : அடியேன், ஆமாம்.

அதி : எந்த வகுப்பினரோ?

நவ : ராட வகுப்பைச் சேர்ந்தவன்.

அதி : நானும் ராடீயப் பிராம்மணன்தான்; என்னை உத்கலதேசத்தவனென்று எண்ணிக்கொள்ள வேண்டாம். குலாசார்ய வம்சத்தவன். தற்சமயம் அம்பாளின் பாதஸேவையில் ஈடுபட்டிருக்கிறேன். தங்களுடைய நாமம் என்னவோ?

நவ : நவகுமார சர்மா.

அதி : வாஸஸ்தலம்?

நவ : ஸப்தக்ராமம்.

அதி : எந்த ஊர் தங்களுடையது?

நவ : வந்த்யகாடீ.

அதி : ஸம்ஸாரங்கள் எத்தனை?

நவ : ஒரே ஸம்ஸாரந்தான்.

நவகுமாரன் தன்னைப்பற்றிய செய்தியை முழுவதும் வெளிப்படுத்தவில்லை. சரியாகச் சொல்லுமிடத்து அவனுக்கு அந்த ஒரு பெண்டாட்டியும் இல்லை. ராமகோவிந்த கோஷால் என்பவரின் பெண்ணான பத்மாவதியை அவன் மணந்ததென்னவோ உண்மை. விவாகத்திற்குப் பிறகு பத்மாவதி சில தினங்கள் தந்தையின் வீட்டிலேயே இருந்தாள். எப்பொழுதாவது புக்ககம் வந்துபோவாள். அவளுக்குப் பதின்மூன்றாவது பிராயம் நிரம்பும் சமயம், குடும்பத்துடன் அவளுடைய தந்தை புருஷோத்தமனைத் தரிசிக்க ஜகந்நாத க்ஷேத்திரத்திற்குச் சென்றிருந்தார்.

அச்சமயம் அக்பர்ஷா பத்தானியர்களை வங்கதேசத்திலிருந்து துரத்திவிட்டார். அவர்கள் உரிஷ்யா (ஒரிஸ்ஸா)வில் கும்பலாகக் குடியேறினர். அவர்களைப் பூண்டோடு நசுக்க அக்பர் சக்ரவர்த்தி பெரும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டார். ராமகோவிந்த கோஷால் தம் பரிவாரத்துடன் உரிஷ்யாவிலிருந்து திரும்புகையில் மொகலாயருக்கும் பத்தானியர்களுக்கும் இடையே போர் மூண்டது. வரும்வழியில் பத்தானியர் கையில் குடும்பத்துடன் சிக்கிக்கொண்டார். அக்காலத்தில் பத்தானியர் நாகரிகமற்ற கொடிய வினையாளராய் இருந்தனர். நிரபராதிகளான வழிப்போக்கர்களைப் பிடித்துப் பணத்தைப் பறிப்பதற்காகக் கொலைகளையும் புரிந்தனர். ராமகோவிந்தர் சற்று உக்கிர ஸ்வபாவமுடையவர். பத்தானியர்களை இகழ ஆரம்பித்தார். இதன் விளைவாக அவர் தம் கோஷ்டியுடன் சிறைப்பட்டார். முடிவில் தம் உயிரும் மானமும்

4100

தப்புவதற்காகக் குடும்பத்துடன் அவர் இஸ்லாம் தர்மத்தைத் தழுவ வேண்டியதாயிற்று.

ராமகோவிந்த கோஷால் உயிராவது தப்பியதே யென்ற ஆறுதலுடன் வீடுவந்து சேர்ந்தார். ஆனல் அவர் குடும்பத்துடன் வேற்றுமதம் புகுந்தபடியால் சுற்றத்தாரும் ஸமூகமும் அவரை ஒதுக்கிவிட்டனர். அந்தச் சமயம் நவகுமாரனுடைய பிதா ஜீவித்திருந்தார். அவரும் ஜாதிகெட்ட தம் ஸம்பந்தியையும் நாட்டுப் பெண்ணுன பத்மாவதியையும் ஒதுக்கிவிட்டார். அப்புறம் நவகுமாரன் தன் மனைவியைப் பார்க்கவே இல்லை.

சுற்றத்தாராலும், ஸமாஜத்தாலும் துறக்கப்பட்டு ராமகோவிந்த கோஷால் வெகுநாட்கள் தம் சொந்த ஊரில் இருக்கவில்லை. இந்தக் காரணத்தாலும் ராஜ ஸபையில் உயர்ந்த பதவியை இச்சித்தும் அவர் தம் பரிவார ஸஹிதமாக ராஜதானியான ராஜமஹலுக்குச் சென்று வசிக்கலானுர். இஸ்லாம் மதத்தை ஏற்று முஸல்மான் பெயரும் வைத்துக்கொண்டார். அவர்கள் ராஜமஹலுக்குப் போன பின் தன் மாமனுரைப் பற்றியோ, மனைவியைக்குறித்தோ தகவல் தெரியாதவனுய் இருந்தான் நவகுமாரன். வாழ்க்கையில் வெறுப் புற்று அவன் வேறு விவாகம் செய்துகொள்ளவில்லை. இதன் பொருட்டே நவகுமாரனுக்கு 'அந்த ஒரு பெண்டாட்டியும் இல்லை' என்று கூறினேம்.

இந்த விருத்தாந்தமெல்லாம் அதிகாரிக்கு எங்ஙனம் தெரியப்போகிறது ? 'குலீனவம்சத்தில் பிறந்தவனுக்கு இரண்டு ஸம்ஸாரங்கள் இருப்பதனுல் தவறில்லை' என்று நினைத்தவராய் அதிகாரி வெளிப்படையாகவே

நவகுமாரனைப் பார்த்து, "தங்களை ஒன்று கேட்க விரும்பு கிறேன். தங்களுடைய உயிரைக் காப்பாற்றிய இந்தப் பெண்மணி தனக்கே இதனால் விபத்தைத் தேடிக் கொண்டாள். இவள் எவருடைய ஆதரவில் இருந் தாளோ அந்தக் காபாலிகர் மிகவும் கொடூர ஸ்வபாவ முடையவர். அவரிடம் திரும்பிச் சென்றால் தங்களுக்கு எந்த நிலை ஏற்பட்டதோ அதுவே இவளுக்கும் ஏற் படும். இதைத் தவிர்க்க ஏதாவது ஒரு வழி தங்களுக்குத் தோன்றுகிறதா?" என்றார்.

நவகுமாரன் எழுந்து உட்கார்ந்தான். "எனக்கும் அத்தகைய சங்கை உண்டாயிற்று. தங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. இவ்வளவு உதவிசெய்த தாங்களே இதற்கும் வழிசொல்லத் தகுதியுடையவர்கள். இப்பேருத விக்குக் கைம்மாருக என் பிராணனைக்கூடத் தரச் சித்த மாக இருக்கிறேன். நான் மீண்டும் அந்த நரகாதகனிடமே செல்வதனால் இவளுக்குற்ற ஆபத்து விலகுமென்று தோன்றினால் அதற்கும் நான் உடன்படுகிறேன்" என்றான் நவகுமாரன்.

இதைச் செவியுற்றதும் அதிகாரி நகைத்தார். "கபடற்ற மனுஷ்யராக இருக்கிறீரே நீர். என்ன நேரிடும் தெரியுமா? தங்களைப் பலிகொடுத்தும் கபாலகுண்டலை யின்மீது காபாலிகருக்கு உள்ள கோபம் சற்றும் தணியாது. இதற்கு ஒரே உபாயந்தான் இருக்கிறது" என்றார்.

நவ :—அது என்ன சொல்லும்?

அதி :—இவளோடு நீர் ஓடிவிடுவதுதான். ஆனால் அது நடக்கக் கூடியதா? இந்த இடத்திலேயே இரண்

டொரு நாட்கள் தங்கும் பக்ஷத்தில் கட்டாயம் அகப் பட்டுக் கொள்வீர்கள். இந்தத் தேவாலயத்திற்கு அந்த ஆள் அடிக்கடி வந்துபோவது வழக்கம். கபாலகுண் டலே துரதிர்ஷ்டம் பிடித்தவளென்றே எனக்குப் படுகிறது.

நவகுவாரன் ஊக்கத்துடன், "என்னுடன் அவள் ஓடிவிடுவது நடக்காத காரியமென்று ஏன் வருந்து கிறீர்?" என்ருன்.

அதி :—அவள் யாருடைய பெண், எந்தக் குலத்தில் பிறந்தவள்; இவையெல்லாம் தங்களுக்குத் தெரியாதிருக் கும்போது அவளே நீர் கூட்டிக்கொண்டு போவீரா? அப்படி அழைத்துச் சென்ருலும் சொந்தவீட்டில் இடம் அளிப்பீரா? இடம் இராவிட்டால் இந்த அனுதைப் பெண் எங்கே செல்வாள் பாவம்?" என்ருர்.

குலாசாரியரே! உம்முடைய புத்திக்கும் ஒரு பழுதுண்டோ?

நவகுமாரன் க்ஷணநேரம் சிந்தித்துவிட்டு, "எனக்கு உயிர்ப்பிச்சை அளித்தவளுக்கு நான் எதை வேண்டு மானுலும் செய்யத் துணிந்திருக்கிறேன். அவளே என் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தியாக வைத்துக்கொள் வேன்" என்ருன்.

அதி :—சந்தோஷம், ஆனுல் அவள் யாருடைய மனேவியென்று யாராவது விசாரித்தால் அதற்கு என்ன சமாதானம் உரைப்பீர்?

நவகுமாரன் சற்று யோசித்த பிறகு, "அவள் இன்னவள் என்பதை எனக்குத் தெரியப்படுத்தினுல்

அதன்படியே அவளைப்பற்றிக் கேட்பவர்களுக்கு விடை தருகிறேன்" என்றான்.

அதி :—நல்லது. ஆனால் முன்பின் அறியாதவனோடு பருவம் வாய்ந்த ஒரு பெண் செல்லத் துணிவாளா? அப்படிச் சென்றாலும் உலகத்தவர்தாம் என்ன நினைப் பார்கள்? இவளைத் தாயாகவே பாவிக்கும் நானுந்தான், அயல் மனிதன் ஒருவனை, அதிலும் யுவ வயதினனை நம்பித் தூரதேசத்திற்குத் தனியாக எப்படி அனுப்பி வைப்பேன்?

பேஷ் குலாசாரியரே! மீண்டும் ஒருதரம் உமது புத்திக்கூர்மையை மெச்சுகின்றேன்.

நவகுமாரன், "தாங்களும் கூடவே வாருங்கள், என் மீது சந்தேகம் இருந்தால்" என்றான்.

அதி :—கூட நான் வருவதா? ஜகதம்பிகைக்கு யார் பூஜை செய்வார்கள்?

நவகுமாரன் பொறுமையிழந்து, "ஆனால் இதற்கு வேறு என்ன வழி சொல்லுமே?" என்றான்.

"ஒரேவழி இருக்கிறது; அது உம்முடைய உதார குணத்தைப் பொருத்தது" என்றார் அதிகாரி.

நவ :—அதென்னவோ? நான் எதற்கும் உடன் படுகிறேன். அவ்வுபாயத்தைச் சொல்லும்.

அதி :—ஆனால் கேளும். இவள் ஒரு பிராமணப் பெண். இவளுடைய விருத்தாந்தம் எனக்கு நன்கு தெரியும். தூர்த்தரான கிறிஸ்தவக் கொள்ளைக்கூட்டத் தினர் இவளைப் பாலிகைப் பருவத்திலேயே அபகரித்துக் கொண்டு இந்த ஸமுத்திரக்கரையில்தான் நிர்க்கதியாக விட்டுச் சென்றனர். இதைப்பற்றிய விவரம் பின்னால்

இவளிடமிருந்து தெரிந்துகொள்ளுங்கள். காபாலிகர் இவளைக் கண்டெடுத்துத் தம் தந்திர ஸாதனைக்குப் பயன் படுவாளென்ற எண்ணத்துடன் வளர்த்து வந்தார். அவருடைய கோரிக்கை நிறைவேறவேண்டிய சமயமும் நெருங்கிவந்துவிட்டது. இதுவரை இவளை எந்த ஆடவனும் தீண்டவில்லை. மிகவும் தூய்மையான நடத்தை யுடையவள். இவளை நீர் மணந்துகொண்டு ஊருக்கு அழைத்துச் செல்லும்; யாரும் தூற்றுவதற்கு இடம் இராது; சாஸ்திர ரீதியாக நான் உங்கள் இருவருக்கும் விவாகம் செய்துவைக்கிறேன்."

நவகுமாரன் படுக்கையைவிட்டு எழுந்து நின்றான். அதிதுரிதமாகக் காலடிவைத்து இப்படியும் அப்படியுமாக உலாவினான். அதிகாரியின் யோசனைக்கு யாதொரு பதிலும் தரவில்லை. சிலகணம் இவ்வாறு சென்றதும் அதிகாரி பேச்சை எடுத்தார்: "தாங்கள் சற்று மன வமைதியுடன் தூங்குங்கள். நாளைக்கு அதிகாலையில் தங்களை வந்து எழுப்புவேன். தனியாகப் போக இஷ்டப்பட்டாலும், நான் தங்களை மேதினிபூர் ரஸ்தாவரைக்கும் கொண்டுவிட்டு வருகிறேன்."

இவ்வாறு இயம்பியதும் நவகுமாரனிடம் விடை பெற்றுக்கொண்டார். போகும்போது அவர் தமக்குள், "நான் ராட தேசத்துத் தரகனோ கொக்கோ?" என்று சொல்லிக்கொள்ளாமல் இல்லை.

"இந்த ஜம்பமான பேச்சு எவ்வளவு தூரம் பலிக்கிறதோ பார்க்கலாம்" என்கிறார் நூலாசிரியரும்.

9

சந்நிதியில்

" ஒல்லோமென் றேங்கி யுயங்கி இருப்பளோ
கொல்களிறன்னன் பின் செல்லுங்கொல் லென்பேதை "

— ஐந்திணை எழுபது

புருஷ வாசகர்களே, கதைக்குச் சம்பந்தமிராத இரண்டொரு விஷயங்களை நான் நடுவே புகுத்துவதைப் பற்றி உங்களது மன்னிப்பைக் கோருகிறேன். கடற் கரையில் நீங்கள் தற்செயலாகக் கபாலகுண்டலையை காண்கிறீர்களென்று வைத்துக் கொள்வோம், அவ ளிடத்தில் உங்கள் மனத்தைப் பறிகொடுப்பீர்களென்று எப்படிச் சொல்லமுடியும்? காபாலிகனிடம் சென்றால் அவள் கட்டாயம் உயிர் துறப்பாள். இந்த நிலையில் ஒருத்தியைக் காப்பாற்றும் நோக்கத்துடன் நீங்கள் அவளைப் பாணிக்கிரகணம்செய்துகொள்ள உடன்படுவீர் களா இல்லையாவென்பதை சொல்வதும் கடினம். உடன் படமாட்டீர்களென்றே கொள்ளவேண்டும். ஏனெனில் கபாலகுண்டலை சடைவிரி கோலத்துடன் கூடிய ஒரு ஸந்நியாஸினி. ஆனால் நவகுமாரனோ பிறருக்காக விறகு வெட்டிக் கொண்டு வருபவன். பூவுலகில் அவனைப் போன்ற கட்டை வெட்டிகளுக்குத்தான் கபாலகுண்டலை

போன்ற ஸந்நியாஸிநிகளின் உண்மை தெரியும். நன்றி கெட்ட யாத்திரிகர்களுக்கு உதவிபுரிய நவகுமாரன் தலையில் கட்டையைச் சுமந்தான். தன்னை ரக்ஷித்த அந்த ஸந்நியாஸிநியின் இணையில்லாத அழகு அவன் உள்ளத்தைக் கொள்ளைகொள்வதில் அதிசயம் என்ன இருக்கிறது ?

விடியற்காலையில் கோயில் அதிகாரி நவகுமாரனிடம் வந்தார். நவகுமாரன் படுக்கையில் படுக்கவே இல்லை யென்று அறிந்துகொண்டார்.

“இப்போது என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர் கள் ?” என்று வினவினார் அதிகாரி.

“இன்றுதொட்டுக் கபாலகுண்டலை என்னுடைய தர்மபத்தினி யாவாள். அவளுக்காக உற்றார் உறவின ரைத் துறந்துவிட வேண்டுமானாலும் சரி. கன்யாதானம் செய்துகொடுப்பதற்கு இங்கே யார் இருக்கிறார்கள் ?” என்றான்.

கடகசிகாமணியின் முகம் மலர்ச்சியுற்றது. “இத் தனை நாட்கள் கழித்து ஸர்வேசுவரி கிருபை கூர்ந்தாள், என்னுடைய கபாலினிக்கு ஒரு திக்கு ஏற்பட்டது” என்று உள்ளுக்குள் களிபொங்கச் சொல்லிக் கொண் டார். நவகுமாரனைப் பார்த்து வெளிப்படையாக அவர், “கன்யாதானம் செய்துகொடுக்க நான் இருக்கிறேனே” என்று மொழிந்தவுடன் தம் சயன அறைக்குள் மீண் டும் நுழைந்தார். ஓர் அலகுக்கூடையில் பூச்சியரித்த பழைய ஓலைச்சுவடிகள் சில இருந்தன. திதி நக்ஷத்திரம்

யோகம் கரணம் இவற்றின் குறிப்புகள் அதில் கண்டிருந்தன. விவாகத்திற்குச் சுபதினம் என்றென்பதை ஆராய்ந்துகொண்டு வெளியே வந்து, "இன்று விவாகத்திற்கு ஏற்ற நாளாக இராது போனுலும், விவாகம் நிறைவேறுவதற்கு விக்கினங்கள் ஒன்றும் இல்லே. கோதூளிலக்னத்திற்கு யாதொரு தோஷமும் இல்லே ; எந்தச் சுபகாரியத்தையும் நடத்தலாம். அந்த வேளேயிலேயே கன்யாதானம் செய்து விடுகிறேன். நீங்கள்மட்டும் இன்று உபவாஸம் அனுஷ்டிக்கவேண்டும். விவாகத்தின் மற்றச் சடங்குகளே ஊருக்குப் போன பிறகு ஸ்வக்ருஹத்தில் பூர்த்தி செய்து கொள்ளலாம். இன்று ஒரு நாள்மட்டும் உங்கள் இருவரையும் மறைவாக வைத்துக்கொள்ள என்னுல் முடியும். காபாலிகர் திடீரென இங்கே தோன்றும் பக்ஷத்தில், நீங்கள் இங்கிருப்பதே தெரியாமல் செய்துவிடுவேன். விவாகம் முடிந்ததும் நாளேக்கே வைகறையில் மனேவியுடன் நீர் ஊருக்குப் புறப்பட்டுவிடும்" என்ருர்.

நவகுமாரன் இதற்கு இசைந்தான். இந்நிலேயில் கூடிய மட்டும் சாஸ்திர ரீதியாக மணமுறைகள் நடந்தேறின. நன்னுழிகையான அந்திப்பொழுதில் நவகுமாரனும் கபாலகுண்டலேயும் கொழுனனும் மனேவியுமானுர்கள்.

காபாலிகனேப்பற்றி ஒரு சமாசாரமும் தெரியவில்லே. மறுநாள் கிழக்கு வெளுக்கு முன்பே கபாலகுண்டலேயும் நவகுமாரனும் பிரயாணத்திற்குச் சித்தமாயினர், மேதினீபுரத்திற்குச் செல்லும் பாதைவரை

அதிகாரி உடன்வந்து அவர்களை வழியனுப்புவதாகவும் ஏற்பாடு. யாத்திரை தொடங்குவதற்கு முன் கபால குண்டலை ஜகன்மாதாவிடமிருந்து உத்தரவு பெற்றுக் கொள்வதற்காகக் கோயிலுக்குச் சென்ருள். பக்தி நிரம்பிய உள்ளத்துடன் சிலையை வணங்கிப் புஷ்பக் குடலையிலிருந்து பின்னமாகாத வில்வ இலையை எடுத்துத் தேவியின் பாதபத்மங்களில் வைத்துவிட்டு அதையே சற்றுநேரம் நோக்கினுள். பில்வ பத்திரம் நழுவி விழுந்தது.

கபாலகுண்டலை நிரம்ப் பயபக்தி உடையவள். பில்வதளம் பிரதிமையின் காலடியிலிருந்து சரிவதைப் பார்த்ததும் திடுக்குற்ருள். இந்தத் தெய்வக் குறியைப் பற்றி அதிகாரிக்கும் தெரிவித்தாள். அதிகாரியும் மனம் இடிந்துபோய், "இனிமேல் என்ன செய்வது ? கணவனைப் பின்பற்றுவதே உன்போன்ற ஸதிகளின் தர்மம், அம்மா! பதியை இழக்கும்படி நேர்ந்தால் வெந்தழலில் நீயும் அவனுடன் செல்லவேண்டியவளே. எதற்கும் தயங்காமல் செல், தாயே!" என்ருர்.

மூவரும் பிரயாணப்பட்டனர். மேதினீபுரத்தின் அருகில் பாதை பிரியும் இடமும் வந்தது. அதிகாரியும் விடை பெற்றுக்கொண்டார். கபாலகுண்டலை கண்ணீர் விட்டு அழுதாள். உலகத்தில் பிதாவைப்போல் அவளுக் கிருந்த ஓரே ஆப்த நண்பரும் பிரிந்துவிட்டார்.

அதிகாரியும் பிரிவு தாளாமல் விழிநீர் பெருக்கினுர். கண்களைத் துடைத்துக்கொண்டு கபாலகுண்டலையின்

காதோடு, "அம்மா! உனக்குத் தெரியும், ஈசுவரியின் கடாக்ஷத்தால் எனக்கு யாதொரு குறைவுமில்லை என்பது. ஹிஜ்லியைச் சேர்ந்த ஜனங்கள் அளவற்ற கைங்கரியங்கள் அம்பாளுக்குச் செய்கிறார்கள். காசுக்குப் பஞ்சமே இல்லை. உன் மூட்டையில் கொஞ்சம் முடி போட்டு வைத்திருக்கிறேன். ரொம்பதூரம் வழிநடந்தால் நீ அலுத்துப் போவாய். உன் புருஷனிடம் சொல்லிப் பல்லக்கு ஒன்று அமர்த்திக்கொண்டு அதில் ஏறிச்செல். அவ்வளவுதான் என் கையால் ஆனது. போய்ச் சுகமாக உன் கணவனோடு வாழ்ந்திரு" என்றார்.

இதைச் சொல்லும்போதே அவர் தொண்டை அடைத்துக்கொண்டது. விழிகளில் நீர்த்தேக்கம் துளும்பியது. கபாலகுண்டலையும் விக்கி விக்கி அழலானாள்.

முதல் பாகம் முற்றிற்று

இரண்டாம் பாகம்

1

போகும் வழியில்

"...............கொலைபிரியா வன்கண்ண
ராட்டிவிட் டாறலைக்கு மத்தம் பலநீங்கி"

— ஐந்திணை ஐம்பது

'**மனிதனுடைய வாழ்க்கை ஒரு விசித்திர காவியம்**' என்றார் ஜெர்மன் அறிஞர் ஒருவர். கபாலகுண்டலையின் வாழ்க்கைக் காவியத்தின் ஒரு படலம் முற்றுப்பெற்றது. அதற்குமேல் நிகழ்வதை ஆராய்வோம்.

பின்னால் நேரப்போவதை அறிந்து மனிதன் விழிப்புடன் இருப்பானானால், அவனது வாழ்க்கை துயர் நிரம்பியதாகவே முடியும். வருங்காலத்தில் ஏற்படப் போகும் இன்னல்கள் தெளிவாகத் தோற்றும்போது எவனும் இன்பத்தின் வழியை நாடமாட்டான். கவி மில்டனுக்குத் தம் கண் அவிந்துவிடுமென்று தெரிந்திருந்தால் அவர் கல்வியில் ஊக்கம் செலுத்தி இரார். தள்ளாதவயதில் தம் மகன் ஔரங்கஜேப் தம்மைச் சிறையில் தள்ளுவானென்று அறிந்திருந்தால் ஷாஹாஜஹான் மொகலாய ஸிம்ஹாஸனத்திற்கு ஆசைப்பட்டிருக்கமாட்டார். தம் ஒரே பெண் பானுமதி இளமையிலேயே விதவையாகிவிடுவாள் என்று கண்டிருந்தா

ராஞல் கணித நிபுணரான பாஸ்கராசார்யர் விவாக மின்றியே ஆயுளைக் கழித்திருப்பார். நவகுமாரனோ, அவனுடைய புதிய மனைவியோ தங்களுடைய விவாகத் திஞல் பின்ஞல் விளையப்போவதை முன்னதாகவே அறிந்திருந்தார்களாஞல்' மணம் செய்துகொண்டு இல்லறத்தில் நுழைந்திரார்.

நவகுமாரன் மேதினீபுரத்தை அடைந்ததும், அதி காரி வைத்திருந்த பணத்தைக்கொண்டு கபாலகுண் டலையின் பொருட்டு ஒரு பணிப்பெண்ணையும், காவலா ளையும் ஏற்பாடு செய்து அவளைச் சிவிகையில் ஏற்றுவித் தான். தாராளமாகச் செலவுசெய்யப் பணம் இராத குறை யிஞல் நவகுமாரன் கால்நடையாகவே பிரயாணத்தைத் தொடங்கிஞன். முன்ஞளெல்லாம் நடந்ததால் களைத் துப் போயிருந்தான். நடுப்பகலில் அவன் உண்டு சற்றுக் களைப்பாறப் பின்தங்கவே சிவிகையைத் தூக்கும் ஆட் கள் வெகுதூரம் சென்றுவிட்டனர். வரவரப் பொழு தும்போய் அந்திவேளையும் நெருங்கியது. குளிர்காலமான தால் விசும்பிடை லேசாக மேகத்திரை போட்டிருந்தது. மங்குல் மாலையும் இரவாகியது. மாநிலம் இருண்ட தோற் றங் கொண்டது. மெல்ல மெல்லத் தூற்றலாக மழையும் பெய்யத் தொடங்கியது. கபாலகுண்டலை ஏறிச் செல் லும் சிவிகையைப் பிடித்து அவளுடன்செல்ல நவகுமார னுடைய மனம் தாவிற்றே ஒழிய, அவசமடைந்த அவனுடைய கால்கள் ஓட மறுத்தன. அடுத்துவரும் சத்திரத்தில் சிவிகையை ஆட்கள் இறக்கிச் சற்று ஓய்வு எடுத்துக் கொள்வார்களென்று எண்ணிஞன்; ஆஞல் அந்தச் சத்திரம் தென்பட்டால்தானே! பாதை விளங்

காதவாறு அடர்ந்த இருட்டு. நடு இரவும் கடந்து சென்றது. நவகுமாரன் விரைவாக நடக்கலானான். ஏதோ ஒரு கடினமான வஸ்துவின்மீது அவனது கால் இடறிற்று. பட்டவுடன் அது பளக்கென உடையும் ஓசை கேட்டது. நவகுமாரன் நின்றான். மீண்டும் காலடி வைத்தான். ஏதோ முறியும் சப்தம் மீண்டும் கேட்டது. காலடியில் நொறுங்கும் பொருளை எடுத்துப் பார்க்கையில் அது மரத்தினால் ஆன பொருளின் ஒரு துண்டு என்று தெரியவந்தது.

ஆகாயத்தில் மேகம் பரவியிருந்தாலும் எதிரேயுள்ள வஸ்து இன்னதென்று விளங்காதவாறு அந்தகாரம் இல்லையென்றே கூறலாம். அருகிலேயே பெரிதாக ஒரு வஸ்து தென்பட்டது. அதை நெருங்கித் தடவிப் பார்த்தபோது அது முறிந்துபோன ஒரு சிவிகையென்று கண்டுகொண்டான் நவகுமாரன். அக்கணமே அவன் நெஞ்சு நடுக்குற்றது. கபாலகுண்டலைக்குத்தான் ஆபத்து நேரிட்டதோவென்று கலக்கம் கொண்டான், சுக்கலாக உடைந்து கிடக்கும் சிவிகையைச் சுற்றிலும் ஆராய்ந்தபோது அவனுடைய கால்கள் பல பொருள்கள் மீது பட்டன; மனித உடலின்மீது பட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. கீழே குனிந்து தடவிப் பார்த்தான். மனித உடலே. தொடும்போது சரீரம் சில்லிட்டிருந்தது. அருகில் தரை ஈரம் தோய்ந்திருப்பதையும் உணர்ந்தான். நாடியைப் பரிசோதித்தான் நவகுமாரன். அடித்துக் கொள்ளவில்லை. பிராணன் போய்விட்டதென்று கருதினான். ஆனாலும் ஒரு தரம் நிதானமாகப் பரீக்ஷை செய்யும்போது மூச்சு மெல்ல ஓடுவதுபோன்ற

பிரமை கொண்டான். உயிர் வருமென்ற நம்பிக்கை இருந்தாலும் நாடி அடிக்கவே இல்லை. இந்த ஆளுக்கு என்ன ரோகமோ? நாசி நுனியில் கை வைத்துக் கவனித்தான். சுவாஸத்தின் ஓட்டம் புரிபடவில்லை. ஆனால் எங்கிருந்தோ "உம்......ம்" என்று யாரோ வேதனையினால் அரற்றுவது கேட்டது. வேறு யாராவது குறை உயிருடன் இருக்கிறார்களோ வென்ற ஐயத்தினால், "யாராவது இங்கே உயிருடன் இருக்கிறீர்களா?" என்று குரல் கொடுத்தான். மெல்லிய குரல் ஒன்று ஹீன ஸ்வரத்தில், "இருக்கிறேன்" என்றது.

"நீ யார்?" என்று விசாரித்தான் நவகுமாரன். "நீங்கள் யாரோ?" என்று மறுமொழி தந்தது அந்தக் குரல். அது ஒரு ஸ்திரீயின் கண்டத்திலிருந்து வருவதென்று தெளிவாகிவிட்டது நவகுமாரனுக்கு. பரபரப்புடன், "கபாலகுண்டலையா?" என்றான்.

அங்கு விழுந்துகிடக்கும் ஸ்திரீ, "கபாலகுண்டலை என்பவள் யாரென்று எனக்குத் தெரியாது. நான் ஒரு பிரயாணி. இந்த இடத்தில் கள்வர் கையில் சிக்கி அணிகலம் இழந்து கிடக்கிறேன்" என்றாள்.

இந்த வார்த்தையைக் கேட்டு நவகுமாரன் சற்றுத் தெளிவுற்றான்.

"என்ன நேர்ந்தது?" என்றான்.

"கள்ளர் என் பல்லக்கை உடைத்துவிட்டு வாஹகருள் ஒருவனை குத்திக் கொன்றுவிட்டார்கள். மற்றப் பேர் ஓடிவிட்டார்கள். நான் அணிந்திருந்த நகைகள் எல்லாவற்றையும் கழற்றி எடுத்துக்கொண்டு இந்தப் பல்லக்கில் என்னைக் கட்டிவிட்டுப் போயினர்."

போகும் வழியில்

இருட்டில் தடவிக்கொண்டே சிவிகை இருக்கும் இடத்தை அணுகினன் நவகுமாரன். அந்த ஸ்திரீ சொன்ன வண்ணம், சிவிகையில் துணியால் பிணைக்கப் பட்டுக் கிடந்தாள். நவகுமாரன் மடமடவென்று அவளைக் கட்டினின்று விடுவித்து, "உன்னால் எழுந்திருக்க முடியுமா?" என்று அவளை உத்தேசித்து வினவினன். "என்னையும் தடியால் நன்றாக அடித்து விட்டே சென்றார்கள். காலில் மட்டும் அடி பலமாக வீழ்ந்துவிட்டது. மிகவும் வலிக்கிறது. சிறிய சிகித்ஸை செய்தால் எழுந்துவிடுவேன்" என்றாள் அவள்.

நவகுமாரன் அவள் பக்கமாகக் கையை நீட்டினன். அந்த உதவியைக் கொண்டு அவள் மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். "உன்னால் நடக்கமுடியுமா?" என்றான் நவகுமாரன்.

இதற்கு விடையொன்றும் தராமல் அவள், "உங்களுக்குப் பின்னால் யாராவது பிரயாணிகள் வருகிறார்களா தெரியுமா?" என்று கேட்டாள்,

"யாரையும் காணோமே" என்றான் நவகுமாரன்.

மீண்டும் அம்மடந்தை, "சத்திரம் இங்கிருந்து எவ்வளவு தொலைவு இருக்கும்?" என வினவினாள்.

"என்னால் எப்படிச் சொல்ல முடியும்? சமீபத்தில் தான் இருக்கவேண்டும்" என்றான் நவகுமாரன்.

"கும்மிருட்டில் தனியாக இந்த வனாந்திரத்தில் உட்கார்ந்துகொண்டு என்ன செய்வது? உங்களுடன் சத்திரம் வரை மெதுவாக நடந்துவருகிறேன். ஊன்றிக் கொள்ள ஏதாவது அகப்பட்டால் சற்றுச் சிரமமின்றி நடப்பேன்" என்றாள் அந்த ஸ்திரீ.

"ஆபத்திற்கு அக்கரை இல்லை. என்னுடைய தோளைப் பிடித்துக்கொண்டு நீ வரலாம். இந்தமாதிரி ஸந்தர்ப்பங்களில் கூச்சப்படுவது மடத்தனம்" என்றான் நவகுமாரன்.

ஆனால் அந்த மாது கூச்சப்பட்டு மடத்தனமான காரியமொன்றும் செய்யவில்லை. நவகுமாரனுடைய தோளைப் பிடித்துக்கொண்டே நடக்கலானாள்.

சத்திரமும் சமீபத்திலேயே இருந்தது. சத்திரம் அருகில் இருந்தாலும் கள்வர் மீண்டும் பிரயாணிகளைத் தாக்கமாட்டார்களென்ற நிச்சயம் இல்லை. காலம் மிகவும் கெட்டுப்போய் இருந்தது. தாமதிக்காமலே நவகுமாரன் தான் காப்பாற்றிய மடந்தையுடன் அவ்விடத்தை அடைந்தான்.

அதே சத்திரத்தில் கபாலகுண்டலை யாதொரு இடையூறுமின்றி வந்திருப்பதும் நவகுமாரனுக்குத் தெரியவந்தது. தனி விடுதியில் இறங்கி இருந்தாள் கபாலகுண்டலை. நவகுமாரன் தன்னை நம்பிவந்தவளுக்காகத் தனி அறையொன்று ஏற்பாடுசெய்து அவளை அங்கே சேர்ப்பித்தான். சத்திரத்துக்காரன் அந்த அறைக்குள் விளக்கொன்று வைக்க வரும்போது, அதன் ஒளி அவள்மீது படவே தன்னுடன் வந்தவள் அஸாமான்ய அழகியென்பதை நவகுமாரன் கண்டான். ஆற்றின் புது நிறைப்புனலின் சாயலை ஒத்திருந்தது அவளது இளமைக் கவின்.

2

சத்திரத்தில்

" காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
விருந்தே காமம் "
— குறுந்தொகை

நவகுமாரனுடன் வந்தவள் நல்ல ரூபவதியென்று முன்பே குறிப்பிட்டுள்ளோம். வழக்கம்போல் அவளது அழகை வர்ணிக்காமற்போனால் புருஷ வாசகர்கள் என் மீது வருத்தம் கொள்வார்கள். கதையைப் படிக்கும் பெண்மணிகளோ, " அப்படி என்ன சொட்டி வழிகிற அழகு? நாலுபேரைப் போலத்தான் அவளும் இருப்பாள் " என்பார்கள். இதற்காகவே அம்மடந்தையின் ரூபத்தை வர்ணிக்க முற்படுகிறேன். ஆனால் எந்த உவமைகளைக் கொண்டு நான் அவளைச் சித்திரிப்பது? பழைய வழக்கத்தை யொட்டிக் கண்களைக் குவளைக் கும், வாயிதழ்களைக் கோவைக் கனிக்கும், கூந்தலைக் கருமுகிலுக்கும், விரல்களைக் காந்தள் மொட்டுக்கும் ஒப்பிடுவதா? இப்போது வழக்கொழிந்த அந்த உபமானங்கள் வாசகர்களுக்கு அருவருப்பைத் தரு மென்றெண்ணியே அந்த வழிக்கு நான் போகவில்லை.

அந்தக் காரிகை கண்ணைக் கவரும் லக்ஷணம் பொருந்தியவளாக இருக்கும் பக்ஷத்தில், புருஷ வாசகர்

களே! அவள் உங்களுடைய மனையாட்டியைப்போல் கட்டழகி என்றே கூறியிருப்பேன்; கதை வாசிக்கும் பெண்ணரசிகளே! கண்ணாடியில் பிரதிபலிக்கும் உங்களுடைய பிம்பத்தை ஒத்திருப்பாள் அவள் என்று தான் சொல்லியிருப்பேன். அதோடு அவளைச் சொற்களால் அலங்கரிக்கும் வேலையும் எனக்கு இராது போயிருக்கும். துர்ப்பாக்கிய வசத்தினால் அவள் அப்படி மோஹினி அல்ல.

குற்றமில்லாத அழகு உடையவளல்ல வென்பதைக் காட்ட அவள் பெண்களுக்கியல்பான நடுத்தர உயரத்திற்குமேல் வளர்ந்திருந்தாள். இரண்டாவது, அவளுக்கு மோவாய்க்கட்டையோடு அழுந்திய உதடுகள்; மூன்றாவது, அவளது உடலின் நிறம் சிவப்பல்ல.

உயரமாக எடுத்துக் காட்டினாலும், அவளுடைய அவயவங்கள் இளமையும் வனப்பும் பெற்றிருந்தன. கார்காலத்தில் செழிக்கும் தளிர் மரத்தைப்போல் அவள் மேனி நிறைக்கவினுடன் திகழ்ந்தது. நல்ல சிவப்பு நிறம் வாய்ந்த மாதரின் மேனியை வெண்ணிலவோடும், வைகறை வானில் தோன்றும் செம்மையோடும் உவமித்துச் சிறப்பிக்கிறோம். ஆனால் அவளோ கறுப்பு, சுட்டபொன் கொள்ளும் கருமை. நிலாக்கதிரும், பொன் புரையும் வைகறையும் வெளிர் வர்ணம் வாய்ந்த பெண்களுக்கு உவமைகளானால், வஸந்த காலத்தில் தோன்றும் மாவின் தளிர் அவளது தேக காந்தியை ஒக்கும்.

மனத்தை மயக்கக்கூடிய சக்தியில் அவளது மாமைக்கவின் குறைவுபட்டதன்று, கதை வாசிக்கும் நண்பருள் சிலர், "நாரியருக்கு அழகு சிவந்த மேனியே"

என்று கூறலாம்; ஆனால் கருநிறத்தின் அழகைக் கண்டவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும். என்னுடைய கூற்றை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஒருதரம் சுரும்பின் கூட்டம் மொய்க்கும் மாந்தளிரை உற்று நோக்கட்டும். அவளது வாணுதலில் சுருண்டு விழும் குழற்கற்றையின் அழகு ஒருவாறு விளங்கும். செவி மருங்கில் ஓடும் வளைந்த புருவங்கள். கனியெனத் திரண்ட கவுள்கள்; அவற்றினிடையே கொவ்வைச் செவ்வாய், ஆனால் வரிநெடுங் கண்கள் அவளுக்கில்லை. ஒளிரும் விற்புருவங்களின்கீழ் உள்ளத்தைத் தொடும் கண்ணேக்கு. அகத்தை ஊடுருவும் அவ்விழிகள் பல்வேறு உணர்ச்சிகளையும் அடிக்கடி காட்டும். சில சமயம் அன்பு கனியும். இன்பமிகுதியில் மதர்த்து விளங்கும். அந்த நயனங்கள் மாரவேள் இனிய கனவுகளைக் காணும் இடமோவென்று ஐயம் உண்டாகும்.

காமக்களியில் அவை பளபளக்கும். சினம் கொள்ளும்போது வைந்நுதி வேல்போல் ஒளிரும். மேக அலைகளைத் துழாவும் மின்னற்கொடியை நினைப்பூட்டும் சில சமயம். அவளது வதனத்தில் இருவிதப் பொலிவு. ஒன்று புத்தியின் தீக்ஷண்யம். மற்றொன்று மேன்மையை வெளிப்படுத்தும் வசீகரம். ஹம்ஸத்தைப் போல் சற்று வளைந்த கழுத்துடன் நிற்கும்போது அவளை மங்கையருள் அரசியெனச் சற்று உயர்த்திவைத்தே கூறவேண்டி வருகிறது.

வயது அவளுக்குப் பதினேழு. காற்று இராத வேளையில் தன் நிறைவால் ஆற்றின் நீர் அசைவது போல் இளமை இழைக்கும் சஞ்சலத்தின் பல தோற்றங்

கள் அவளிடம் தென்பட்டன. அந்தப் பேரழகியை நவகுமாரன் இமையாக்கண்களுடன் பருகிவிடுவது போல் பார்த்தான்.

அந்த மெல்லியலாள் அவனுடைய கண்கள் கொட்டாததைக் கண்டு, "நீங்கள் அப்படி ஏன் என்னை விழுங்கிவிடுவதுபோல் பார்க்கிறீர்கள்? என்னுடைய ரூபத்தைக் கண்டு சொக்கிப்போய்விட்டீர்களா?" என்றாள். நவகுமாரன் நல்ல ஒழுக்கமுடைய உயர்குலத்தவனானதால் தன் தவற்றை உணர்ந்து தலையைக் குனிந்து கொண்டான்.

நவகுமாரனிடமிருந்து மறுமொழி வராதுபோகவே அவள் சிரித்துக்கொண்டே மீண்டும், "நீங்கள் இது வரை எந்தப் பெண்ணையும் நேரே பார்த்தது கிடையாதா? அழகில் சிறந்தவளென்று என்னை நோக்கினீர் போலும்?" என்றாள்.

இந்த வார்த்தை ஸாதாரணமாக ஏளனக் குறிப்பாகவே படும். ஆனால் சிரித்தவண்ணம் அவள் இதை மொழிந்ததால் விளையாட்டாகச் சொன்னதென்றே கொள்ளவேண்டும். அவள் வட்பளப்பில் பிரியமுள்ளவளென்பது நவகுமாரனுக்குத் தெளிவாயிற்று. அவளுடன் உரையாடுவதனால் தவறொன்றுமில்லையென நவகுமாரன், "நான் பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உன்னைப்போன்ற லாவண்யமுடையவளைக் கண்டதே இல்லை" என்றான்.

இதைக் கேட்டுத் தற்பெருமை கொண்டவளாய் அவள், "ஊம்...ஒருத்தியைக் கூட?" என்றாள்.

நவகுமாரனுடைய உள்ளத்தில் கபாலகுண்டலை யின் மாசிலா உருவம் எழுந்தது. "அப்படி யாரையுமே பார்த்ததில்லை என்று நான் சொல்லவில்லையே" என்றான்.

"நல்லது, அந்த அறையில் இருக்கும் பெண்மணி யாரோ? உங்களுடைய மனைவியா?" என்றாள் அந்த வம்பளப்புக்காரி.

நவ :—அவள் என் மனைவியென்று நீ எப்படி ஊகித்துக்கொண்டாய்?

அவள் :—"வங்காளிகளின் கண்களுக்குத் தம் மனைவியரே எல்லோரையும் விட அதிரூபவதிகளாகத் தோற்றுவார்கள்.

நவ :—ஆமாம். நான் வங்காளிதான். நீயும் வங்காளிகளின் மொழியில் நன்றாகப் பேசுகிறாயே? உன்னுடைய ஊர் எது?

அந்த யுவதி தான் உடுத்தியிருக்கும் ஆடையின் மீது கண் செலுத்தியவளாய், "இந்தத் துர்ப்பாக்கியம் பிடித்தவள் வங்காளி அல்ல. மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த முஸல்மான் குடும்பத்தவள்" என்றாள்.

நவகுமாரன் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அவள் ஆடை அணிந்திருக்கும் ரீதியிலிருந்து மேற்குப் பிரதேசத்தவளென்று தெளிவுற்றான். ஆனால் வங்காளி பாஷையை உச்சரிப்புத் தவறாமல் பேசுகிறாளே?

சிறிதுநேரம் கழித்து அவள் மீண்டும் பேச ஆரம் பித்தாள்: "நீங்கள் சாதுர்யமாக என் வாயைக் கிளறிச் சமாசாரத்தைத் தெரிந்துகொள்கிறீர்களே, நீங்கள் யாரென்பதை எனக்கு அறிமுகப்படுத்தவில்லையே? கொடுத்துவைத்த அந்த அழகியின் புக்ககம் எதுவோ?"

"எங்களுடைய ஊர் ஸப்தக்ராமம்" என்றான் நவகுமாரன்.

அந்த முஸ்லீம் ரமணி வேறு எதுவும் பேசவில்லை. சட்டெனத் தன் முகத்தைத் தாழ்த்திப் பிரகாசமாக எரிய அங்குள்ள விளக்கைத் தூண்டினாள். சில கணம் மௌனமாகவே இருந்தாள். அப்புறம் நிமிர்ந்து நோக்காமலே நவகுமாரனை உத்தேசித்து, "அடியாளின் பெயர் மதி" என்றாள். பிறகு, "ஸ்வாமி, தங்களுடைய பெயர் என்னவோ?" என்று மெதுவாகவே கேட்டாள்.

"நவகுமார சர்மா" என்று பதிலளித்தான் நவகுமாரன். அதே சமயம் விளக்கும் பட்டென அணைந்தது!

3

அழகியைக் கண்ணுற்றபின்

"அணிகலம் பரிந்து நங்கை ——
மணிமருண் முறுவற்செவ்வாய் மாதவசேனைக் கீந்து"
— சூளாமணி

நவகுமாரன் சத்திரக்காரனைக் கூப்பிட்டு வேறு விளக்கு ஏற்றிவைக்கும்படி சொன்னான். விளக்கு வருவதற்குமுன் ஒரு நீண்ட வெய்துயிர்ப்பின் ஓசை அவன் காதில் பட்டது. அறையினுள் விளக்குவந்த சற்று நாழிகைக்கெல்லாம் சேவகன் உடையில் ஒரு முஸல்மான் அங்கே தோன்றினான். மதி பிபி அவனைப் பார்த்ததும், "என்னடா இது? நீங்கள் வருவதற்கு ஏன் இத்தனை நாழிகை? மற்றவர்களெல்லாம் எங்கே?" என்று விசாரித்தாள்.

"அம்மா! பல்லக்கு ஆட்களெல்லாம் குடித்து விட்டுக் கிடந்தார்கள்; அவர்களைக் கிளப்பிக்கொண்டு வரவே பின் தங்கிவிட்டோம். அப்புறம் வழியிலே உடைந்த பல்லக்கைப் பார்த்து நீங்களும் அதில் இராமற் போகவே, எங்களுக்குக் கைகால் ஆடவில்லை பிபி, சிலர் பல்லக்கு விழுந்திருக்கும் இடத்திலேயே இருக்கிறார்கள். கொஞ்சம்பேர் உங்களைத் தேட நாலு பக்கமும்

போயிருக்கிறார்கள். இந்தப் பக்கம் நான் தேடிக் கொண்டு வந்தேன் " என்று தன் கதையைச் சொன்னான் மதியின் வேலையாள்.

" அவர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு வா " என்று கட்டளையிட்டாள் மதி.

அந்த ஆள்காரன் ஸலாம் செய்துவிட்டு அகன்றான். மதி பிபி கன்னத்தில் கையூன்றிச் சிந்தையில் ஆழ்ந்தாள் சில கணம்.

நவகுமாரன் வெளியே செல்லும்பொழுதுதான் மதி கனவினின்று விழித்தவள்போல் எழுந்து பழைய தோரணையிலேயே, " தாங்கள் எங்கே தங்கப்போகிறீர் கள் ?" என்றாள் சற்றுக் கவனம் மறந்தவளாய்.

நவ :—இதற்கு அடுத்தாற்போல் உள்ள விடுதி யில்தான்.

மதி :—(வேறு நினைவாகவே) தாங்கள் இறங்கி யிருக்கும் விடுதிக்கு அருகில் சிவிகையொன்று இருக் கிறதே. தங்களுடன் வந்தவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா ?

" என்னுடைய மனைவி !"

வேடிக்கையாகப் பேச இடம் ஏற்படவே மதிபிபி " ஓ ! தங்களுடைய ஸம்ஸாரம் இணையற்ற அழகியாகத் தான் இருக்கவேண்டும் ?" என்றாள்.

நவ :—பார்த்தால்தானே தெரியும்.

மதி :—பார்க்க அனுமதிப்பீரா ?

நவ :—(யோசித்து) அதனால் என்ன தவறு ?

" அப்படியானால் தயை பண்ணவேண்டும், அந்தத் திவ்ய ரூபிணியைக் காண நான் மிகவும் ஆவலாக இருக்

கிறேன். ஆக்ராவுக்குப் போனதும் பெரிய இடங்களில் அவளது அழகைப்பற்றிப் புகழ்ந்து பேசுவேன். சற்றுப் பொறுத்துத் தங்கள் பின்னலேயே வருகிறேன்" என்முள்.

நவகுமாரன் சென்ற சற்று நாழிகைக்கெல்லாம் வேலையாட்கள் பலபேர் பேழை பெட்டிகளுடன் அங்கே தோன்றினர். ஒரு சிவிகையும் வந்தது. அதனுள் பணிப்பெண் ஒருத்தி இருந்தாள். நவகுமாரனிடம் ஓர் ஆள்வந்து, "மதிபிபி தங்களைக் காண வரலாமா வென்று கேட்டு வரச்சொன்னார்கள்" என்முன்.

நவகுமாரன் மதிபிபி இருக்கும் விடுதியில் மீண்டும் காலெடுத்து வைத்தான். முழுமாறுதலுடன் அவள் உள்ளே காட்சி அளித்தாள். மதிபிபி தன் பழைய உடைகளைக் களைந்துவிட்டுப் பொன்னும் முத்தும் இழைத்த அபூர்வமான அணிகலங்களைப் பூண்டிருந்தாள். சற்று முன் இழையே அணிந்திராத அவளது தேகம் அவ்வலங்காரங்களினுல் பன்மடங்கு சோபித்தது. கூந்தலிலும், முதுகுப்புறம் புரளும் கோதையிலும், நெற்றிக்கட்டிலும், கண்களின் இருமருங்கிலும், செவிகளிலும், கழுத்திலும், மார்பிலும், தோள்களிலும், மற்றுமுள்ள சரீர உறுப்புக்களிலும் பொன்னில் பதித்த வயிரமணிகளும் ரத்தினங்களும் ஜ்வலித்தன. நவகுமாரனுடைய கண்கள் சிதறின. இருள்விசும்பை அழகுபடுத்தும் தாரகாவளியை நிகர்த்து விளங்கின அவளது நளிர் மேனியில் இந்த நகைகள். அதனுல் அவளது ஸௌந்தர்யம் பின்னும் எடுத்துக்காட்டியது. மதிபிபி நவகுமாரனை நோக்கி, "நான் வரத் தயாராக இருக்

கிறேன். தங்கள் பார்யாளை எனக்கு அறிமுகப்படுத்த வேண்டியதுதான் பாக்கி" என்ருள்.

"இதற்காகவா இவ்வளவு அலங்காரமும் ஆடம்பரமும்? என்னுடைய ஸம்ஸாரத்திற்கு நகை நட்டு ஒன்றும் இல்லையே" என்ருன்.

மதி பீபி :—இராமற் போனல் என்ன? அவளுக்குக் காட்டவேண்டியே இவற்றை எல்லாம் அணிந்துகொண்டேனே தவிரப் பணச்செருக்கினுல் அல்ல; பெண்களுக்கு நகையிருந்தால் அதை இதரர்களுக்குக் காட்டாமற் போனல் மண்டை வெடித்து விடுமே. என்னை அழைத்துச் செல்லுங்கள்.

நவகுமாரன் மதிபீபியுடன் தன் விடுதியை நோக்கிச் சென்ருன். சிவிகையில் இருந்த மதியின் வேலைக்காரியும் கூடவே போனுள். அவளுடைய பெயர் பேஷ்மன்.

கபாலகுண்டலை தன் அறையில் ஈரமான மண்தரை மீது தனியாக உட்கார்ந்திருந்தாள். மங்கலாக ஒளிவிடும் அகல் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. கட்டவிழ்ந்த அடர்ந்த கருங்கூந்தல் கபாலகுண்டலையின் பின்புறம் இருண்டு தோற்றியது. கபாலகுண்டலையை நேராகப் பார்த்ததும் மதிபீபியின் இதழ்க் கடையிலும் கண்நுனியிலும் மெல்லிய சிரிப்பு உலவிற்று. நன்ருகப் பார்வையிடும் நோக்கத்துடன் விளக்கைக் கபாலகுண்டலையின் முகத்திற்கு நேராகக் கொண்டுவந்தாள். அப்போது அவளுக்கு உண்டான சிரிப்பு எங்கோ மறைந்துவிட்டது. மதியின் முகம் களையை இழந்தது. கபாலகுண்டலையின் வசீகரமான எழிலைக் காணும்

3

பாகனேரி

லுத்ப் - உன்னிஸாவும் கபாலகுண்டலையும்

அதிசயத்தில் அவளுடைய கண்ணிமைகள் அசைவற்றுக் கிடந்தன. பேச யாருக்குமே தோன்றவில்லை. மதிபிபி மயங்கிக் கிடந்தாள். கபாலகுண்டலை சற்று விம்மிதத் தின் வழிப்பட்டாள்.

என்னவோ தோன்றவே சரசரவென்று மதி தன் உடலிலிருந்து ஆப்ரணங்களை நீக்கத் தலைப்பட்டாள். அணிகலங்களை ஒவ்வொன்ருகக் கபாலகுண்டலைக்குப் பூட்டினுள். இதற்குக் கபாலகுண்டலை ஒன்றும் சொல்ல வில்லை. நவகுமாரன் மட்டும், "இதென்ன காரியம்?" என்ருன். மதி பிபி யாதொரு பதிலும் தரவில்லை.

ஆபரணங்களைக் கபாலகுண்டலைக்கு அணிந்ததும், மதி நவகுமாரனைப் பார்த்து, "நீங்கள் சொன்னது முற்றும் உண்மையே. இந்த மலர் அரசர்களின் பூங்காவிலும் காணுதற்கரியது. ராஜதானியில் இத் தகைய திவ்விய வடிவம் தென்படாதது வருந்தத்தக்க விஷயம். இந்த நகைகள் யாவும் இவ்வழகியின் மேனிக்கே உகந்தவை; இதற்காகவே இவளுக்கு அணிந் தேன். அடிக்கடி இவ்வாறு நீங்கள் இவளை அலங் கரிக்கும்போதெல்லாம் யாரோ, வெளி ஊரினளான என்னை ஒருதரம் நினைத்துக் கொள்ளமாட்டீர்களா?" என்ருள்.

நவகுமாரன் சமத்காரமாக, "இதென்ன! இவை விலையுயர்ந்த பொருள்களா யிருக்கின்றனவே? நான் எப்படி இவற்றைப் பெற்றுக்கொள்வது?" என்ருன்.

"கடவுள் கிருபையால் எனக்கு இன்னும் அளவற்ற ஆபரணங்கள் இருக்கின்றன. இவற்றைக் கொடுத்து

விடுவதனுல் நான் நகை இழந்தவளாகி விடமாட்டேன். இவற்றை இவளுக்கு அணிந்து இவளை என் கண்ணுரக் காணும் இன்பத்தை ஏனே கெடுக்கிறீர்கள் ?" என்ருள் மதி.

இவ்வாறு மொழிந்ததும் அவள் தன் அடிமைப் பெண்ணுடன் வெளியே சென்ருள். தனியாக இருக்கும் போது பேஷ்மன் தன் யஜமானியைக் கேட்டாள், "பிபி ஜான், அந்த ஆள் யார் ?" என்று. அதற்கு அந்த முஸ்லீம் ரமணி, "அவரா ? என் புருஷர்" என்ருள்.

4

சிவிகையில் ஊர்ந்தபோது

"அருங்கல வெறுக்கையி னரியோள் பண்பு"

— அகநானூறு

மதிபிபி அளித்த நகைகளுக்கு வந்த கதியைக் கேளுங்கள். நகைகளை வைக்க, தந்த வேலைப்பாடுடைய ஒரு வெள்ளிப் பேழையை அனுப்பிவைத்தாள். கொள்ளைக் கூட்டத்தினர் அவள் அருகில் இருந்த சில பொருள்களைமட்டுமே கவர்ந்து சென்றனர். எவ்வளவோ விலையுயர்ந்த சாமான்கள் அவர்கள் கையில் சிக்காமல் தப்பின.

நவகுமாரன் இரண்டோர் ஆபரணங்களைக் கபால குண்டலை பூணுவதற்காக வெளியே வைத்துவிட்டுப் பெரும்பாலனவற்றைப் பத்திரமாகத் தந்தப் பேழையில் மூடிவைத்தான். மறுதினம் பொழுது புலர்வதற்குள் மதிபிபி வர்த்தமான நகரை நோக்கிப் பிரயாணமானாள். நவகுமாரனும் தன் மனைவியுடன் ஸப்தக்ராமத்திற்குப் புறப்பட்டான். கபாலகுண்டலையைச் சிவிகையில் ஏற்றிவிட்டு, அவளுடைய வசத்தில் நகைப் பேழையை ஒப்பித்தான். பல்லக்கைச் சுமக்கும் ஆட்கள், வேகமாகச்

சென்றதால் நவகுமாரனைப் பின்னால் விட்டுச் சென்றனர். சிவிகையின் எழினியை விலக்கி வெளி யுலகைப் பார்த்துக்கொண்டே சென்றாள் கபால குண்டலை. நடுவழியில் பிச்சைககாரன் ஒருவன், "அம்மா, பிச்சை" என்று கெஞ்சிக்கொண்டே பல்லக்குடன் வந்தான்.

"என்னிடம் ஒன்றுமில்லை, உனக்குத் தருவதற்கு" என்றாள் கபாலகுண்டலை. கபாலகுண்டலையின் உடலி லிருக்கும் இரண்டொரு நகையைச் சுட்டி அந்தப் பிச்சைக்காரன், "அம்மணீ, அத்தனை நகைகளைப் போட்டுக்கொண்டிருக்கிறீர்களே; ஒன்றுமில்லை யென்று சொல்லுவது தர்மமா?" என்றான். "இந்த நகைகளை உனக்குத் தந்தால் சந்தோஷம் கொள்வாயோ இல் லையோ?" என்றாள் கபாலகுண்டலை.

பிச்சைக்காரனுக்கு இந்தக் கேள்வி ஆச்சர்யத் தையே விளைவித்தது. அவனுக்கோ அளவற்ற ஆசை. "எவ்வளவோ சந்தோஷப்படுவேன். உங்களை வாயாற வாழ்த்துவேன். நான் ஏழை" என்றான்.

கபாலகுண்டலை கபடமற்ற இதயத்துடன் பேழை யுடன் மொத்த நகைகளையும் அந்த எளியவன் கையில் தந்தாள். தான் அணிந்திருந்த ஆபரணங் களையும் கழற்றி அவனுக்கே கொடுத்துவிட்டாள்.

அவளுடைய செய்கையினால் அந்தப் பிச்சைக் காரன் பிரமித்து நின்றான். இந்த ஸமாசாரத்தைக் கபால குண்டலையின் ஆட்கள் எவருமே அறியார். பிச்சைக்

காரனுடைய பிரமை விலகியது; ஒருதரம் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் கவனித்துவிட்டு, நகைகளை எடுத்துக்கொண்டு இரைக்க இரைக்க ஓட்டம் பிடித்தான். இதைப் பார்த்துக் கபாலகுண்டலை, 'இந்தப் பிச்சைக்காரன் எதற்காக இப்படித் தலைதெறிக்க ஓடுகிறான்?' என்று எண்ணிக்கொண்டாள்.



5

சொந்த வீட்டில்

" அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது " — குறள்

நவகுமாரன் கபாலகுண்டலையுடன் தன் ஊரை அடைந்தான். வீட்டில் இருந்தவர்கள் அவனுடைய தாயும் இரண்டு சகோதரிகளுமே. தமக்கை ஒரு கைம்பெண். அவளைப்பற்றி வாசகர்களுக்குத் தெரிய வேண்டியது ஒன்றும் இல்லை. சின்னவள் பெயர் சியாமா ஸௌந்தரி. அவள் ஸௌமங்கலியாக இருந்தும் ஒரு விதவை யென்றே சொல்லவேண்டும். ஏனென்றால் அவள் தன் கணவனுடன் கொஞ்ச நாள்கூட இன்புற்று வாழவே இல்லை. கதையில் இரண்டொரு சந்தர்ப்பங்களில் அவளை நாம் சந்திப்போம்.

குலம் கோத்திரம் விசாரிக்காமல் ஒரு தவ மகளை மணந்து நவகுமாரன் வீட்டிற்கு அழைத்துவந்ததைப் பற்றி ஊரார் குற்றம் கூறினரா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. இந்த விஷயத்தைக் குறித்துக் கிராமத்தில் அவனுக்கு யாதொரு தொந்தரவும் உண்டாகவில்லை. ஊரில் அனைவரும் அவன் உயிருடன் திரும்புவானென்று எண்ணவே இல்லை. உடன் வந்த

பிரயாணிகள், நவகுமாரனைப் புலி அறைந்து தின்று விட்டதாகவே வதந்தியைக் கிளப்பினர். அவனுடைய இந்த மெய்யன்பர்கள் நடந்ததை நடந்தவாறே சொன்னார்கள் என்று வைத்துக்கொண்டால் அவர்களது கற்பனை சக்தியை நாம் இகழ்வதாகும். திரும்பிவந்த யாத்திரிகர்களிடையே பலர் நவகுமாரனைப் புலி கொன்றதைத் தம் கண்ணாலேயே பார்த்ததாகவும் ஸத்யம் செய்தனர். அவனை விழுங்கிய வேங்கையின் அளவைப் பற்றி அவர்களுக்குள் பெரிய வாக்குவாதங்கூட மூண்டதென்றால்—! "அந்த வரிப்புலி எட்டு மார்பளவு இருந்தது" என்று சிலர் கூறினர். மற்றொரு சாரார், "இல்லவே இல்லை. பதினாறு அடிக்குமேல் இருக்குமென்றால் . . !" என்றனர். கதை ஆரம்பத்தில் நமக்குப் பரிசயமான அந்தக் கிழவர் திரித்த கயிறு என்ன தெரியுமோ? "எப்படி இருந்தால் என்ன? நாம் பிழைத்து வந்தோமே அவ்வளவுதான். முதலில் புலி சீறிக்கொண்டு என்மேல் பாயவந்தது. நானுக்கும் ஒருவிதமாக ஓடித் தப்பித்துக் கொண்டேன். பாவம், நவகுமாரன் அவ்வளவு புத்தி சாலியுமல்ல, தைர்யசாலியும் அல்ல. அதனால்தான் அவன் புலியின் வாயில் அகப்பட்டுக் கொண்டான்" என்பதுதான்.

கலப்பற்ற இந்தப் புளுகு நவகுமாரனுடைய அன்னையின் செவிக்கெட்டியது. அன்று வீட்டில் மூண்ட அழுகையின் ஓலம் பல தினங்கள்வரை ஓயவே இல்லை. தன் ஒரே மகன் இறந்துபோன செய்தியைக்

கேட்டு அந்தக் கிழத்தாய்க்குப் பாதி உயிர் போய் விட்டது. முற்றும் அவள் உடல் நலிந்து உளங்குன்றிச் சாவதற்குள், நவகுமாரன் தன் மனைவியுடன் தோன்றினான். "பெண் எந்தப் பக்கத்தவள் ? என்ன ஜாதி?" என்று அவனை விசாரிக்க யாருக்குமே தோன்றவில்லை. அவன் உயிருடன் திரும்பினானே யென்ற பரம சந்தோஷத்தில் எல்லோரும் மூழ்கியிருந்தனர். நவகுமாரனுடைய அன்னை விமரிசையாகவே தன் புத்திர வதுவை அழைத்துக் கொண்டாள். கபாலகுண்டலையை ஆதரவுடன் உறவினர் யாவரும் ஏற்றுக்கொண்டதைப் பார்த்து நவகுமாரன் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

கபாலகுண்டலையைப் பெற்றும், இதற்குள் அவளுடன் நெருங்கிப் பழகினால் ஏதாவது குற்றம் ஏற்படுமோவென்ற பயம் ; ஆகவே அவள்பால் தனக்குள்ள ஆசையை அவன் வெளிக்காட்டவில்லை. கபாலகுண்டலை அவன் உள்ளத்தில் நிரம்பி இருந்தாள். உலகமே அவள் மயமாகத் தோன்றியது நவகுமாரனுக்கு. இந்தத் தயக்கத்தினால்தான் முதலில் அவளைத் தொட்டுத் தாலிகட்ட அவன் சட்டெனத் உடன்படவில்லை. மணமானவுடன் வீடு திரும்பும்வரை அவன் கபாலகுண்டலையுடன் சேர்ந்து காதலின் இனிமையை நுகராததற்கு இதுவே காரணம். அவள்பால் கொழுந்துவிடும் காதற்கனலை அவன் தூண்டாமல் பாதுகாத்ததும் இதனாலேயே. உருண்டு ஓடும் நீர்ப்பெருக்கைத் தடுக்கும் அணை, சட்டென விண்டால் என்ன விசை

உண்டாகுமோ, அத்தகைய வேகத்துடன் துள்ளியது அவனுக்குள்ள பிரேமை.

இக்காதல் உணர்ச்சியைக் கண்டபொழுதும் அவன் விளம்பரமாக்குவதில்லே. ஆனல் காபாலினியைக் காணுந் தோறும் அவனுடைய கண்கள் துளிக்கும். கண்ணய ராமல் அவளேயே நோக்குவான். காரணமின்றி எந்த வியாஜத்தைக் கொண்டாவது அவன் கபாலகுண்ட லேயை நெருங்கும்போதும் இவ்வபூர்வ உணர்ச்சி ஏற்படும். அவள் சுகமாக இருக்க அவன் தேடும் வழி கள் இந்த அனுராகத்தைப் பகிரங்கப்படுத்தும். வேறு மனத்தினனுய் உலாவும்போது அவனுடைய காலடிகள் இதன் பரபரப்பையே காட்டும். நவகுமாரனுடைய ஸ்வபாவமே கபாலகுண்டலேயின் ஸாமீப்யத்தால் முற்றும் மாறிக்கொண்டு வந்தது. அவனுடைய நிலே யற்ற புத்தி அமைதியுற்றது. எரிந்துவிழும் இயல்புடைய அவன் சாந்தமூர்த்தியானுன். எப்போதும் மலர்ச்சி யுடனே விளங்கியது அவன் முகம். உள்ளூற மூண்ட இந்நட்பின் மேன்மையினுல் அவனுக்குப் பிறரிடத்தி லும் பற்றுதல் ஏற்பட்டது. இதுகாறும் எவர் மேலும் வெறுப்புக்கொள்ளும் குணம் இருந்தது; அது இப் போது குறையத் தொடங்கியது. பிரேமையின் மந்திர சக்தியினுல் உலகத்தைத் துன்பம் தொலேந்த இன்ப நாடாகவே கருதினுன். இல்வாழ்க்கையே இனிமை பயப்பதென உணர்ந்தான். இவை யாவும் காதல் இயற் றும் மாயை! காதலின் வன்மைதான் என்னே!

கடுமையை இனிமையாக்குவதும் அதுவே. ஸார மற்ற வாழ்வைப் பொலிவுறச் செய்வதும் அதுவே. தீமையைப் போக்கி நல்வழியைக் காட்டுவதும் அதுவே. காம இருளை விலக்கிக் காதலின் உண்மை ஒளியைத் தருவதும் அதுவே.

நவகுமாரனுடைய அந்தரங்கத்தில் மறைந்துள்ளதை நாம் கண்டறிந்தோம். ஆனால் கபாலகுண்டலையின் மனத்தின் ஆழம் எப்படியோ? வாசகர்களே! வாருங்கள், அதையும் ஊடுருவிப் பார்ப்போம்.

6

புத்தி புகட்டல்

"...............பைந்தொடிப் பாவாய் !
மங்கல மகளிர்க்கு மரபன் றிது" — பெருங்கதை

பூர்விகத்தில் ஸப்தக்ராமம் வளமிகுந்த ஒரு பெரிய பட்டணம். சாவகத்வீபத்திலிருந்து ரோமாபுரி வரை உள்ள எல்லா நாட்டு வணிகர்களும் வியாபார நிமித்தம் ஐச்வர்யம் நிரம்பிய இந்நகரில் கூடுவார்கள். ஆனால் பதினோராம் நூற்றாண்டில் ஸப்தக்ராமத்தின் சிறப்பும் செல்வமும் மட்டுப்படத் தொடங்கின. இந்நகரின் ஒரு மூலையை அலம்பிச் சென்ற பெரிய ஆறு, இப்போது சிற்றோடையாக மாறிவிட்டது. இதனால் பொன்னோடு வரும் பிறநாட்டுக் கலங்கள் இந்தப் பட்டணத்தை அணுகச் சாத்தியமிராது போய்விட்டது. வியாபார மந்தத்தினால் கொஞ்சம் கொஞ்சமாக ஸப்தக்ராமம் பாழடைந்துகொண்டே வந்தது. வாணிபச் செருக்குக் குலைந்தால் நாகரிகமே சீர்குலையுமல்லவா ? ஸப்தக்ராமத்தின் ஓங்கிய பெயரும் மறைந்து போயிற்று. ஐரோப்பியர் இந்தியாவிற்கு வந்தபின் ஹூக்ளி இந்நகருக்குப் போட்டியாகப் பிரக்யாதியை அடைந்து செல்வத்தில் பெருகத் தொடங்கியது.

போர்த்துக்கீஸ் வணிகர் அங்கே வியாபார நிலயங்களை ஸ்தாபித்து ஸப்தக்ராமத்தில் வீற்றிருந்த தனலக்ஷ்மியை அழைத்துக்கொண்டனர். அப்படி இருந்தும் ஸப்த க்ராமத்தின் எழில் முற்றும் அழிந்துவிடவில்லை. கதை நிகழ்ந்த காலத்திலும் ராணுவ ஸ்தலமாகவும், பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர்களின் இருப்பிடமாகவும் விளங்கியது. ஆனால் நகரின் பெரும் பகுதி களையிழந்து, ஜனங்கள் துறந்து சென்றதனால், ஒரு பட்டிக்காடாகவே காட்சி அளித்தது.

ஸப்தக்ராமத்தைச் சேர்ந்த மனிதர் நடமாட்ட மிராத ஒருபுறத்தில் நவகுமாரனுடைய வீடு. இப்போது ஸப்தக்ராமம் சிதிலமாகிவிட்டபடியால் அங்கு மனிதர் வருவதே அபூர்வமாக இருந்தது. பெரிய ரஸ்தாக்கள் இருந்த இடங்கள் சப்பாத்தியும், முட்புதர்களும் வளர் வதற்கு அனுகூலமாக இருந்தன. நவகுமாரனுடைய வீட்டின் பின்னால் ஓர் அடர்ந்த காடு; வீட்டிற்குமுன், குரோச தூரத்திற்கு அப்பால் ஒரு சிறு வாய்க்கால். அந்த வாய்க்கால் எங்கெங்கோ சுற்றி வளைத்துக் கொண்டு நவகுமாரனுடைய வீட்டுப் புறக்கடை வழி யாகவும் சென்றது. செங்கற்களால் கட்டிய வீடு. அதன் தோற்றத்தைக்கொண்டு சாதாரணமான கட்டட மென்று சொல்வதற்கில்லை. இரண்டடுக்கு வீடுதான்; உயரமான மாடியுமல்ல. இந்தக் காலத்தில் அவ்வீட்டின் உயரமுள்ள ஓட்டு வீடுகளை எங்கும் காணலாம். அந்தக் காலத்திற்கு அது உயர்ந்ததுதானே?

அவ்வீட்டின் நிலா மாடத்தில் இளம் வயதினரான பெண்பாலார் இருவர் நின்றவண்ணம் நாற்புறமும்

இலங்கும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். கதிரவன் தாழும் சமயம். அவர்கள் பார்த்த காட்சிகள் கண்களுக்கு ரம்யமாகவே இருந்தன. அணித்தாக ஒருபுறம் செடி அடர்ந்த காடு. அதனுள் பக்ஷிஜாலங்கள் செய்யும் மதுர கல்லோலம். வேறு பக்கம் வனத்தின் கருமையின் இடையே, வெள்ளி இழைபோல் செல்லும் சிறு வாய்க்கால். இளந்தென்றலிலும், இளமடந்தையரிடமும் இன்பத்தைப் பருகும் நாகரிகர்களுடைய உயர்ந்த மாடங்களின் வரிசை தொலைவில் தென்பட்டது. வேறு திசையில் சேண்தூரத்தில் மரக்கலங்களை நெருக்கமாக அணிந்திருக்கும் பாகீரதி நதியின் பரந்த மார்பகத்தில் அந்தியின் இருள் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

மாடியில் நிற்கும் இருமங்கையருள் ஒருத்தி நிலவின் நிறம் கொண்டவள். அவிழ்ந்து புரளும் மாரிஇருங் கூந்தலிடை அவளது வதனம் பாதி மறைந்து விளங்கியது. மற்றொருத்தி, மாயோள்; சிரித்த முகமுடைய பதினாறு வயது மங்கை. சிறிய தேகஅமைப்பு; சின்னஞ் சிறு முகம். முகத்தைச் சுற்றிலும் சுருண்டுவிழும் சிறு குழல். பிரகாசிக்கும் பரந்த சேல்விழிகள். அவளது குட்டி விரல்கள் பக்கத்தில் இருக்கும் வெளிர் மேனியாளின் கூந்தலைக் கோதிக்கொண்டிருந்தன. நேயர்களே! மதிக்கதிரன்னாள் கபாலகுண்டலையென்று நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். மற்றவள்-அந்தக் கருமேனியாள்-அவளுடைய நாத்தியான சியாமா ஸுந்தரி.

சியாமாஸுந்தரி மதனியை ஒரு சமயம், 'பௌ' என்றும் ஒரு சமயம் செல்லமாக, 'மிருணு' என்றும் அழைப்பது வாடிக்கை. கபாலகுண்டலை யென்ற பெயர் காதுக்கு இனிமையாக இல்லையென்றே நவகுமாரனுடைய வீட்டார் கபாலகுண்டலைக்குப் புக்ககத்துப் பெயராக 'மிருண்மயி' என்ற நாமத்தைச் சூட்டினர். இதனால் எல்லோரும் அவளை 'மிருணு' என்றே அழைத்தனர். நாமும் இந்தப் பெயராலேயே அவளை அழைப்போம்.

சியாமாஸுந்தரி சிறு வயதில் தான் கற்ற வேடிக்கையான ஒரு பாட்டை எடுத்தாள் :

மலரரசி தாமரையாள் வதனம்இரா மறைத்தாலும்
புலர்பொழுதில் முத்தமிடப் புகுந்துவண்டு விரைந்திடுமே.
நிலவுகொடி வனந்தழைத்த நீள்மரத்தை யேஅணையும்
பலநதிநீர் தடைப்படினும் பரவையையே முடிவிலுறும்,

அதிசயங்காண் அதிசயங்காண் அருங்குமுத மலர்நங்கை
மதியின்முகம் கண்டதும்நாண் மறையஇதழ் விரிப்பதுபார் !
பதியினுடன் மணமகளப் பள்ளியறை புகுந்துவிட்டால்
புதியவளோ? நாணமுண்டோ? புத்துறவை வெறுப்பாளோ ?

"ஏண்டி, நீ இப்படியே வாழ்நாள் முழுவதும் ஸந்நியாஸினி வேஷத்தோடுதான் இருக்கப்போகிறாயா என்ன ?" என்றாள் சியாமா.

"எதற்காக அப்படிச் சொல்லுகிறாய், அக்கா ? நான் ஒரு தபஸும் பண்ணவில்லையே ?" என்றாள் மிருண்மயி.

கபாலகுண்டலையின் அலைக்கூந்தலைப் பற்றிச் சியாமா, "இந்தக் கூந்தலை எத்தனை நாள்தான் இந்த மாதிரி பின்னிக்கொள்ளாமல் இருக்கப்போகிருயடியம்மா ?" என்ருள்.

சிரித்துவிட்டுச் சியாமாஸுந்தரியின் பிடியிலிருந்து தன் கேசபாரத்தை வாங்கிக்கொண்டாள் மிருண்மயி.

மீண்டும் சியாமாஸுந்தரி உரைத்தாள் : " நல்லது ; என் இஷ்டத்தை ஒருதரமாவது பூர்த்தி செய்யேன் ! குடும்பத்துப் பெண்களைப்போல் ஆடை ஆபரணங்களைப் போட்டுக்கொள். எத்தனை நாள் இம்மாதிரி யோகினியாக இருக்க உத்தேசமடீ ?"

மிருண்மயி :—உங்களகத்துப் பிள்ளையை நான் சந்திப்பதற்கு முன்பே யோகினியாக இருந்தேன்.

சியாமா :—இனிமேல் நன்ருக இராதே?

மி :—ஏன் ?

சி :—ஏனு ? பாரேன் வேண்டுமாளுல். யோகமெல்லாம் மாயமாய் மறையுமடீ. அந்த மாய மாற்றுக்கல் இன்னும் உன்னைத் தீண்டவில்லை.

" அந்த மாற்றுக்கல் எதுவோ ?" என்ருள் மிருண்மயி.

சி :—இதுகூடவா தெரியவில்லை உனக்கு ! அந்த மந்திரக்கல் பட்ட மாத்திரம் செப்புக்கூடச் செம்பொன்ளுகுமே !

மி :—அதளுல் என்ன ?

சி :—பெண்களிடத்திலும் அத்தகைய மாய வஸ்து இருக்கிறதடீ.

மி :—அது என்னவோ ?

சி :—புருஷன்தான். புருஷனுடைய காற்றுப் பட்டாலே தவமகள் வீட்டுக்கு உகுந்தவ ளாகிவிடுவாள். நீ அந்த மாயக்கல்லைத் தொட்டிருக்கிறாய். அது தானாக வேலை செய்யப்போகிறது பாரேன் ?

குழல்வாரி முடிந்திடையிற் சேலையினை உடுத்துக்
கொண்டைமிசை மலர்செருகி நுதல்திலகம் இடுவேன்
நிழல்வார்சந் திரஹாரம் பூட்டிஇரு செவியும்
நிலவுகுழை அணிந்தழகு நிரம்புவது பார்ப்பேன்.
இழையினிய சந்தனமும் திமிர்ந்திதழ்கள் சிவப்ப
இளந்தளிர்வெற் றிலைசுவைக்க ஈவேன்நீ சினந்தே
விழைவதனம் சிவந்தாலும் வெறுத்தாலும் விடேன்பொன்
விக்கிரகம் போற்குழந்தை உன்மடியிற் காண்பேன்.

"இப்போது புரிந்தது. மந்திரக்கல்லில் உராய்ந்து நான் தங்கமாகிவிடுகிறேன். தலைமயிரை வாரிப்பின்னிக் கொள்கிறேன். நல்ல சேலை கட்டிக் கொள்ளுகிறேன். நகை போட்டுக்கொள்ளுகிறேன், காதணி மாட்டிக் கொள்கிறேன். சந்தனம், குங்குமம், வெற்றிலை எல்லாம் உபயோகித்துக் கொள்கிறேன். இதெல்லாம் செய்து கொண்டாலும் இந்த வாழ்வில் என்ன சுகம் இருக் கிறது ?" என்றாள் மிருண்மயி.

சி :—பூ பூக்கிறது. அது எந்தச் சுகத்தைக் கண்டு பூக்கிறது. சொல்லடீ ?

மி :—மனிதர் களிப்பதற்குத்தான். அதற்கு அதனால் என்ன சுகம் ?

சியாமாவின் முகப்பொலிவு வாடியது. காலையில் வீசும் பிள்ளைக்காற்றில் இதழ்விரியும் அல்லி மலர்போல்

சியாமாஸுந்தரியின் கண்கள் விரிந்தன. "பூவுக்கு அதனுல் என்ன சுகமா? அவ்வளவு எனக்குத் தெரியாது. நான் பூவாகிப் பூத்திருந்தால்தானே? ஆனுல் உன்னைப் போல ஒரு மொட்டாக இருந்தால் மலர்ந்து நான் சுகம் பெற்றிருப்பேன்" என்ருள்.

கவனமிருக்கலாம் நேயர்களுக்கு, சியாமா கணவனுடன் வாழ்ந்து இன்பத்தை அறியாதவள் என்பது. இந்தச் சந்தர்ப்பத்தில் நேயர்களுக்கு நான் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. மலர்வதே பூவுக்குள்ள இன்பம்; மணம் மது இவற்றை விநியோகம் செய்வதே அது கொள்ளும் இன்பம்; இவ்வையகத்தில் கொடுத்து வாங்குதலே சுகத்திற்கு மூலகாரணமாகும்.

வேறு எதுவுமில்லை. இந்த வார்த்தை அன்பு காதல் இவற்றிற்கு மட்டுமல்ல; செல்வம், அறிவு, மானம், மஹிமை இவற்றிலும் சுகம் காண வேண்டுமானுல் அது கொடுத்து வாங்குதலினுலேயெ ஏற்படவேண்டும். வனத்தில் அரும்பிய மலரான மிருண்மயிக்கு இதன் உட்கருத்து உறைக்கவில்லை. ஆகவே சியாமா சொன்னதற்கு அவள் பதில் ஏதும் தரவில்லை.

அவள் பேசாமல் இருப்பதைக் கண்டு' சியாமா, "அதுதான் இல்லையடீ, நீ ஆசைப்படுவதுதான் என்ன சொல்லேன்?" என்ருள்.

கணநேரம் யோசனை செய்துவிட்டு, மிருண்மயி, "எனக்குத் தெரியாது. பழைய பிரகாரம் ஸமுத்திரக் கரையிலும் காட்டிலும் திரிவதே எனக்கு அளவற்ற

ஆனந்தத்தைத் தரும்" என்ருள். இதைக் கேட்டுச் சியாமா சிறிதளவு வியப்புற்ருள். எவ்வளவோ முயன் றும் மிருண்மயிக்கு இந்த உபதேசங்கள் ஏருததைக் கண்டு அவள் மனக்கசப்பும், கோபமுங் கொண்டாள். "ஆனுல் திரும்பிப்போவதற்கு வழியில்லையே?" என்ருள்.

"வழிதான் இல்லை."

"என்ன செய்வாய்?"

"அதிகாரி சொல்லுவார், 'ஆட்டி வைக்கிறவன் அவன்; ஆடுகிறவன் நான்' என்று."

இவ்வாறு பெரிய மொழிகளை அளக்கும் கபால குண்டலையைப் பார்த்துச் சியாமாஸுந்தரி வாயை மூடிக்கொண்டு சிரித்தவளாய், "அடியேன்! தாங்கள் எல்லாம் கற்றறிந்தவர்கள்; மேலே என்ன?" என்ருள்.

பெருமூச்செறிந்து மிருண்மயி, "என் தலையில் எழுதியபடிதானே நடக்கும்? அதற்குமேல்?" என்ருள்.

சி:—அதென்ன? உன் தலையில் சுகமாக இருக்க வேண்டுமென்றுதானே எழுதி இருக்கிறது? எதற்காகப் பெருமூச்சு விடவேண்டும்?

"கேள். நான் என் கணவருடன் புறப்படுவதற்கு முன் உலகத்திற்கெல்லாம் அன்னையான பவானியின் பாதங்களில் பில்வ தளத்தை ஸமர்ப்பித்து என் பிற்கால வாழ்க்கை எவ்வாறு இருக்குமென்பதை அறியத் தெய் வக்குறியை எதிர்பார்த்தேன். எந்தக் காரியத்திலும் பிரவேசிப்பதற்குமுன் இப்படிச் செய்வது என் வழக்கம். நன்மையாக முடிவதற்கு அடையாளமாகப் பில்வதளம்

நழுவிவிழாது ; கெடுதியானால் விழுந்துவிடும். எனக்கு முன்பின் தெரியாத ஒருவரோடு புது இடத்திற்குச் செல்வதைக் குறித்து நான் தயங்கினேன். அதற்கு ஏற்றாற்போலவே அன்னை என்னுடைய பில்வதளத்தை அங்கீகரிக்கவில்லை. என் விதி எந்த வழிக்கு என்னை இழுத்துச் செல்லுமோ ?”

இதைக் கூறி முடித்ததும் மிருண்மயி மௌனமாகி விட்டாள் ; சியாமாஸுந்தரிக்கு மயிர்க்கூச்செறிந்தது.

இரண்டாம் பாகம் முற்றிற்று.



மூன்றாம் பாகம்

4100

1

முன் நிகழ்ந்தவை

"மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லன் மேயினுள்"

— கம்பராமாயணம்

நவகுமாரன் கபாலகுண்டலையுடன் தன் ஊருக்குப் புறப்படுவதற்குமுன், மதிபிபி வர்த்தமான நகரை நோக்கிப் பிரயாணப்பட்டாள் என்று கூறினோம். அவள் அந்நகரை அடைவதற்குள் பழைய செய்திகள் சிலவற்றை இங்கு உரைப்பது மிகையாகாது. மதிபிபியின் நடத்தையில் மன்னிக்க முடியாத குற்றங்கள் இருந்த போதிலும் உயர்ந்த தன்மைகளும் அவளிடத்தில் காணப்பட்டன. இத்தகைய கதா பாத்திரத்தின் விரிவான சரிதையை நேயர்கள் பொறுமையுடன் கேட்க வேண்டும்.

அவளுடைய தந்தை முஹம்மதிய தர்மத்தைத் தழுவினபோது அவளுக்கு லுத்ப் - உன்னிஸா என்ற பெயர் வந்தது. மதிபிபி என்பது அவளது உண்மைப் பெயரல்ல; புனைபெயரே. அவளுடைய பிதா டாக்காவில் ராஜாங்கத்துக் காரியஸ்தராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் அங்கே தம் ஊரினர் அடிக்கடி வருவதும்

போவதுமாக இருக்கவே, அவர்கள் முகத்தில் விழிக்க விருப்பம் இராதவராய் வங்காள *ஸுபாதாரின் சிபாரிசின் பேரிலும் தில்லியில் பாதுஷாவுக்கு வேண்டிய ஓமராக்களின்† ஸஹாயத்தினாலும் உத்தியோகத்தை ஆக்ராவுக்கு மாற்றிக்கொண்டு அவ்விடத்திலேயே குடும்பத்தவருடன் வசிக்கலானார்.

மேலான குணங்களுடையவர்கள் அக்பர்ஷாவின் கண்களில் படாமல் இருக்கவே மாட்டார்கள். பாதுஷா எவருடைய குணாதிசயங்களையும் சீக்கிரத்தில் கண்டு கொள்ளும் இயல்பினர். லுத்ப் - உன்னிஸாவின் பிதா மடமடவென்று தர்பாரில் உயர்ந்த பதவிகளைப் பெற்று ஆக்ரா நகரின் கண்யமான ஓமராக்களுள் ஒருவராக விளங்கினார். இதற்குள் லுத்ப் - உன்னிஸா திரண்ட வனப்புடைய பருவ மங்கையானாள். ஆக்ராவுக்கு வந்ததும் பாரஸிக மொழியும் ஸம்ஸ்க்ருத பாஷையும் கற்று, நிருத்திய கீதம், ரசவாதம் போன்ற நற்கலைகளிலும் தேர்ச்சி பெற்றாள். ராஜதானியில் சோபிக்கும் ரூபவதி குணவதிகளுக்கெல்லாம் தலை சிறந்தவளாக இருந்தாள். துர்ப்பாக்கிய வசத்தால், கலைகளைக் கற்ற அளவு அவள் தர்மத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள ஊக்கம் செலுத்தவில்லை. லுத்ப்-உன்னிஸாவின் யௌவனம் பூர்ணதசையை அடையும்போது அவளது மனம் பல வழிகளிலும் பாய்ந்தது. அவள் எந்தத் தடைக்கும் அஞ்சவில்லை; புலன்களைக் கட்டுப்படுத்தச் சிறிதும்

---

* ஸுபாதார் = மாகாணாதிபதி.

† ஓமராக்கள் = பிரபுக்கள்.

4

ஸெலிமும் லூத்ப் - உன்னிஸாவும்

முற்படவில்லை. அவ்வாறு செய்ய அவளுக்கு இஷ்டமும் இல்லை. நன்மையைச் செய்வதைப்போலவே தீயன புரிவதிலும் அவள் சமமாகக் கவனம் செலுத்தினாள். எது ஸத், எது அஸத்தான காரியமென்ற யோசனைக்கே அவள் இடம் கொடுப்பதில்லை. தனக்கு இன்பத்தைத் தரக்கூடியதாக இருந்தால் எதை வேண்டுமானாலும் செய்வாள். பிறருக்குத் தீங்காக முடிவதாயிருந்தாலும் அதைச் செய்யாமல் விடமாட்டாள். இவை யாவும் யௌவனத்தில் எவருக்கும் உண்டாகும் விகாரமென்றால் லுத்ப் - உன்னிஸா அதற்கு விலக்கல்ல. அவளுடைய கணவன் உயிருடன் இருக்கையில் ஓமராக்கள் எவரும் அவளை மணந்துகொள்ளச் சம்மதிக்கவில்லை. மேலும் விவாகத்தில் அவளுக்குப் பற்றுதலாவது நம்பிக்கை யாவது இல்லை. மலரிலிருந்து மலருக்குத் தாவும் தேனீயின் சிறகைப் பிய்த்துவிட்டால் அது சுகித்திருக்குமோ? முதலில் காதோடு காதாக இருந்த அவளது கூடா நட்பு முடிவில் மறைந்து போகாத களங்கத்தையே விளைவித்தது. தம் மகளின் நடவடிக்கைகளைக் கண்டு புண்பட்ட நெஞ்சினராய்த் தந்தை அவளை வீட்டிலிருந்து விலக்கிவிட்டார்.

லுத்ப் - உன்னிஸாவின் அந்தரங்கக் காதலர்களுள் இளவரசனான ஸெலிம் ஒருவன். லுத்ப் - உன்னிஸாவைத் தன் காமக்கிழத்தியாகக் கொண்டால் அது பிரபலமான ஒரு பிரபுவின் குலத்திற்கு அவமானம் இழைத்ததாகும். அதனால் பாரபக்ஷமின்றிச் செங்கோல் செலுத்தும் தன் பிதாவின் வெஞ்சினத்திற்கு ஆளாக வேண்டிவருமென்று பயந்து அவன் அவ்வாறு செய்ய

வில்லை. கொஞ்சநாளைக்கெல்லாம் அவன் விரும்பியது கைகூடும் நிலைக்கு வந்தது. ராஜபுத்திரப் பிரபுவான மான்ஸிம்ஹரின் தங்கை இளவரசன் ஸெலிமின் முக்கிய மனைவியானுள். லுத்ப்-உன்னிஸாவை அவன் உடனே தன் பத்தினிக்குத் துணையாக இருக்கத் தோழிப்பெண் ணுக நியமித்தான். நாலுபேர் அறிய லுத்ப்-உன்னிஸா, பேகத்தின் தோழிப்பெண்ணுக இருந்தாள். மறைவில் அவள் யுவராஜாவின் கடாக்ஷத்தைப் பெற்ற காதலியே.

லுத்ப்-உன்னிஸாவைப்போன்ற புத்திசாலி இளவரச னது இதயத்தைக் கொள்ளைகொள்வதில் யாதொரு விந்தையும் இல்லை. ஸெலிமின் பிரேமைக்குத் தன்னுடன் போட்டி இடுபவர் எவ்ருமே இல்லையென்ற எண்ணம் லுத்ப்-உன்னிஸாவுக்கு. தான் பட்டராணியாக வரச் சமயம் வாய்க்குமென்ற உறுதியுடன் இருந்தாள். இது அவளுக்குள்ள ஒரு நம்பிக்கைமட்டுமல்ல. ராஜதானியில் ஒவ்வொருவரும் இவ்வாறே நிகழக்கூடுமென்று எதிர் பார்த்தனர்.

இந்த மனக்கோட்டையில் லுத்ப்-உன்னிஸா சில காலம் மயங்கிக் கிடந்தாள். திடீரென இந்த ஸ்வப்ன வாழ்விற்குப் பங்கம் விளைந்தது. அக்பர் ஷாவின் பொக்கிஷக் காவலனுன (அக்திமத்-உத்தெளலா) காஜா அயாஷேரின் மகள் மெஹெர்-உன்னிஸா இணையற்ற அழகி. பொக்கிஷ அதிகாரி ஒருநாள் ஸெலிமையும் மற்று முள்ள ராஜப்பிரமுகர்களையும் தன் வீட்டிற்கு அழைத்து விருந்து அளித்தான். அன்று மெஹெர்-உன்னிஸாவை ஸெலிம் சந்திக்க நேரிட்டது. அன்றே அந்த ஜகன் மோஹினியின்பால் தன் மனத்தையும் பறிகொடுத்தான்.

அதற்குமேல் நடந்த சங்கதி யாவும் மொகலாய சரித்திரத்தில் நீங்கள் காணலாம். ஷேர் ஆப்கன் என்ற பராக்கிரமசாலியான ஓர் ஓம்ராவுக்கு மெஹெர் - உன்னிஸாவைக் கொடுக்க முன்பே வாக்குத்தத்தம் செய்திருந்தனர். ஸெலிம் அவள்மீது பைத்தியம் பிடித்தவனாய் அந்தச் சம்பந்தத்தை ரத்து செய்துவிடும்படி தன் பிதாவை அண்டியும் பார்த்தான். அக்பரின் மனவுறுதி ஸெலிமின் முயற்சியை வீணாக்கியது. முயற்சி வியர்த்தமாகியும் அவன் தன் நம்பிக்கையை இழக்கவே இல்லை. காலம் வருமென்று காத்திருந்தான். ஷேர் ஆப்கனுக்கும் மெஹெர்-உன்னிஸாவுக்கும் விவாகமாயிற்று. ஸெலிமின் நெஞ்சிலுள்ளதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிந்தவள் லுத்ப்-உன்னிஸா ஒருத்தியே. ' ஷேர் ஆப்கனுடைய உயிர் நிலைக்காது. ஆயிரம் தடவை அவன் பிழைத்து எழுந்தாலும் விதி அவனை விடாது. அக்பர் கண்களை மூடிக்கொள்ள வேண்டியதுதான் ; அவனுடைய இறுதிக்காலமும் நெருங்கிவிடும்; மெஹெர் உன்னிஸா ஸெலிமுடன் மொகலாய ஸிம்ஹாஸனத்தை அலங்கரிப்பாள் ' என்று அவளுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே லுத்ப்-உன்னிஸா ராஜாமகிஷி ஆகும் ஆசையை விட்டொழித்தாள்.

மொகலாய வேந்தர் திலகமான அக்பரின் அந்திய காலமும் நெருங்கியது. எத்திசையும் புகழொடு பிரகாசித்த அக்கதிரவன் அஸ்தமிக்கும் காலம் வந்து விட்டது. சுயநலத்தைக் கருதி லுத்ப் ஸாஹஸமான ஒரு வேலையைச் செய்ய இந்த அரிய தருணத்தை உபயோகித்துக் கொண்டாள்.

ராஜா மான்ஸிம்ஹரின் தங்கை ஸெலிமின் முதல் மனைவி. கஸ்ரூ அவளுடைய பிள்ளை. அக்பர் மரணுவஸ்தையில் இருப்பதைப்பற்றி ஒருசமயம் கஸ்ரூவுடன் அவள் பேசநேர்ந்தது. பேச்சோடு பேச்சாக லுத்ப்-உன்னிஸா, ஒரு ராஜபுத்திரனின் மகள் விசாலமான மொகல் ஸாம்ராஜ்யத்தின் அதீச்வரியாகப் போவதைக் குறிப்பிட்டுக் கஸ்ரூவுக்குத் தன் வணக்கத்தைத் தெரிவித்தாள். அச்சமயம் அங்கே இருந்த கஸ்ரூவின் தாய், "பாதுஷாவின் பட்டமஹிஷியாக வருவதற்குப் புண்ணியம் செய்திருக்கவேண்டும். ஆனுல் ஒரு பாதுஷாவின் அன்னையாக இருப்பது எல்லாவற்றையும் விடப் பெரும் பாக்கியமல்லவா?" என்ருள். இதைச் செவியுற்றதும் அதற்குமுன் தோன்ருத ஒரு யோசனை பளிச்சென லுத்ப்-உன்னிஸாவுக்கு உதயமாயிற்று. "அந்த மாதிரி நடக்காமலா போகப் போகிறது? தாங்கள் மனம் வைத்தால் எதுதான் முடியாது?" என்ருள் பேகத்தைத் தூக்கிவைத்து. அதற்குப் பேகம், "அது எப்படி?" என்ருள். அந்தச் சாமர்த்தியக்காரி உடனே "கஸ்ரூவை ஸிம்ஹாஸனத்தில் வைத்துவிட்டால்?" என்ருள். பேகம் இந்த யுக்திக்கு யாதொரு பதிலும் தரவில்லை. அதற்கு மேல் அந்தப் பேச்சை எடுக்கவில்லை லுத்ப். ஆனுல் லுத்ப்-உன்னிஸா சொன்னதில் அடங்கியிருக்கும் கருத்தை யாரும் மறக்கவில்லை. கணவனுக்குப் பதிலாக மகனை அரசுக் கட்டிலில் ஏற்றுவிக்கப் பேகமுக்கு இஷ்டமில்லையென்று சொல்லமுடியாது. மெஹெர்-உன்னிஸாவிடம் ஸெலிம் கொண்ட மோகமானது லுத்ப்-உன்னிஸாவை எவ்வளவு

உறுத்தியதோ அவ்வளவு பேகத்தின் நெஞ்சத்தையும் நோவச் செய்தது. மான்ஸிம்ஹரின் தங்கை ஒரு துருக்கச் சிறுக்கியின்கீழா வாழ விரும்புவாள்? லுத்ப்-உன்னிஸாவும் புண்பட்ட இந்த இடத்தையே அடிக்கடி குத்திக்காட்டினாள். முன்போலவே மற்றொரு நாள் இதைப்பற்றி ஒரு பேச்சு நடந்தது. இருவரும் ஒரு காரியத்தை முடிக்க உடன்பட்டனர்.

ஸெலிமைத் தள்ளிவிட்டு, அக்பரின் ஆஸனத்தில் கஸ்ரூவை வைப்பது கடினமான காரியமென்பதற்கு ஏது ஒன்றுமில்லை. இதைக் குறித்துப் பேகத்திடம் பன்முறை, "மொகல் ஸாம்ராஜ்யம் அசைவுறாமல் இருப்பது ராஜபுத்திரர்களின் பலத்தைக் கொண்டல்லவா? ராஜபுத்திர குலத்தின் விளக்கான ராஜா மான்ஸிம்ஹர் கஸ்ரூவின் மாமா. முஸல்மான்களுள் அதிகமான செல்வாக்குடைய கான் அஜிம் பிரதான மந்திரியாக இருப்பதோடு கஸ்ரூவின் மாமனார். இவர்கள் இருவரும் சேர்ந்தால் எந்தக் காரியந்தான் கைகூடாது? யார்தாம் இவர்களைப் பின்பற்ற மாட்டார்கள்? வேறு யாருடைய உதவியினால் இளவரசர் ஸெலிம் ஸிம்ஹாஸனம் ஏறுவார்? இந்தக் காரியத்தில் தமயனாரைச் சிரத்தை எடுத்துக்கொள்ளத் தூண்டுவது தங்களது பொறுப்பாகும். கான் அஜிமையும் மற்றவர்களையும் சரிப்படுத்துவது என்னுடைய பாரம்" என்று தெரிவித்திருக்கிறாள் லுத்ப்.

கான் அஜிமும், தில்லி ஆக்ராவைச் சேர்ந்த ஓம்ராக்களும் லுத்ப்-உன்னிஸாவின் பேச்சை எடுத்துக்கொள்ளக் கூடியவர்களே. கான்அஜிம் தம் மாப்பிள்ளையின்

நலத்தைக் கோரி இந்த வேலையில் இறங்குவது விசித்திர மன்று. அவரும் மற்றப் பிரபுக்களும் இந்தச் சதியில் கலந்துகொண்டனர். கான் அஜிம் லுத்ப்-உன்னிஸா விடம், "நம்முடைய முயற்சிக்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டால்-கவனமிருக்கட்டும்-நம் உயிருக்கே ஆபத்து. அதனால் தலை தப்புவதற்கு நாம் ஒரு வழி தேடிக் கொள்வது அவசியம்" என்றார்.

"தங்களுடைய யோசனைப்படியே நடக்கிறேன்" என்றாள் லுத்ப்.

"உரிஷ்யா மாகாணத்தைத் தவிர வேறு புகலிட மில்லை நமக்கு. மொகலாயரின் ஆட்சி இன்னும் நன்றாக வேர் ஊன்றாத இடம் அது ஒன்றே. உரிஷ்யாவிலுள்ள சைனியங்களை நாம் முதலில் கைவசம் செய்துகொள்ள வேண்டும். உன்னுடைய தமயன் அவ்விடத்தில் மன் ஸப்தார்* அல்லவா? நாளைக்கு நான், அவன் யுத்தத் தில் படுகாயப்பட்டிருக்கிறானென்று வெளியிடுவேன். நீ அவனைப் பார்க்கச் செல்லும் சாக்காக உரிஷ்யா வுக்குப் புறப்படு. அங்கே செய்யவேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டு சடுதியில் ஆக்ராவுக்குத் திரும்ப வேண்டும்" என்று ஆலோசனை கூறினார்.

லுத்ப்-உன்னிஸா இந்த யோசனைப்படி காரி யத்தைச் சாதிக்க உரிஷ்யாவுக்கு வந்தவள் திரும்பிப் போகும்போது நமக்கு அறிமுகமானாள்.

---

* படைத்தலைவன்.

2

வேறு வழியில்

‘ ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்ருகும் ’

— நல்வழி

மதிபிபி, அதாவது லுத்ப்-உன்னிஸா நவகுமாரனிடம் விடை பெற்றுக்கொண்டு வர்த்தமானபுரியை நோக்கித் துரிதமாகப் பயணப்பட்டும், அன்றே அவள் அந்நகரை அடையவில்லை. பாதிவழியில் ஒரு சத்திரத்தில் அவள் தங்கவேண்டியதாயிற்று. மாலைப் பொழுது. பேஷ்மனுடன் லுத்ப் ஸம்பாஷித்துக்கொண்டிருந்தாள். மதி திடீரென பேஷ்மனை நோக்கி, “பேஷ்மன், என்னுடைய புருஷர் பார்வைக்கு எப்படி இருக்கிருர் ?” என்று கேட்டாள்.

பேஷ்மன் வியப்படைந்து, “எப்படி இருப்பார் ; அழகாகத்தான் !” என்ருள்.

“நல்ல முருகு வாய்ந்த யுவகர் அல்லவா அவர் ?” என்ருள் லுத்ப்.

நவகுமாரன்மீது ஒருவிதமான பகை மூண்டது பேஷ்மனுக்கு. மதி தன் நகைகளைக் கபாலகுண்டலைக்கு ஈந்ததைப் பார்த்து அவளுக்குச் சகிக்கவில்லை. தானே அவற்றைக் கவர எண்ணங்கொண்டிருந்தாள். அந்த

ஆசையில் மண் விழவே கபாலகுண்டலைமீதும், அவள் கணவன்மீதும் தீராத்துவேஷம் கொண்டாள். ஆதலால் யஜமானியின் கேள்விக்கு அவள் எரிந்துகொண்டு தந்த மறுமொழி, "ஏழைப் பார்ப்பானுக்கு அழகு இருந்தால்தான் என்ன, இராது போனால்தான் என்ன?" என்பதுதான்.

தன் தாசிப் பெண்ணின் மனப்போக்கை ஊகித்தவளாய் மதி சிரித்தவண்ணமே, "அந்த ஏழைப் பிராமணன் ஓர் ஓம்ராவாகி விடுகிறானென்று வைத்துக் கொள். அப்போது அவருடைய அழகிற்கு மதிப்பு ஏற்படாதா?" என்றாள்.

"அது எப்படி?"

"தெரியாதா உனக்கு? கஸ்ரூ ஸிம்ஹாஸனத்திற்கு வந்தவுடன் பேகம் என்னுடைய கஸமை* ஒரு பிரபல ஓம்ராவாக்குவதாக வாக்களித்திருக்கிறார்."

"தெரியும் அம்மா, ஓம்ராவாக வரப்போகிறவர் தங்களுடைய பழைய புருஷரென்று எண்ணுகிறேன்..."?

"எத்தனை கணவன்மார்களுக்கு நான் பெண்டாட்டியடீ?"

"புதுசாக வரப்போகிறவரைத்தான் சொன்னேன்" என்றாள் பேஷ்மன்.

மெதுவாக நகைத்து மதிபிபி, "என்னைப்போன்ற பதிவிரதைக்கா இரண்டு கணவர்கள் இருப்பார்கள்? அடி கழுதை! வரவர நாக்கு நீள்கிறதா?" என்று சொல்லும்போது அறையின் வெளிப்புறம் யாரோ

* கஸம் = புருஷன்.

நகர்ந்ததுபோன்ற சாயை தெரிந்தது. "அது யார், பார் அந்தப் பக்கமாகப் போகிறது?" என்றுள் மதி.

பேஷ்மன் வெளியே நின்று ஆளைக் கூப்பிட்டாள். வந்தவன் லுத்ப் - உன்னிஸாவை வணங்கிவிட்டு, அவள் கையில் ஒரு கடிதத்தைச் கொடுத்து, "பிபி! இந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு, தங்களிடம் சேர்ப்பிக்க உரிஷ்யாவுக்கு வந்தேன். ஜரூரான விஷயம்" என்று கூறினுன். கடிதத்தைப் பிரித்துப் படித்ததும் லுத்ப் - உன்னிஸா கொண்டிருந்த ஆசை நம்பிக்கை யாவும் ஆவியாகப் போய்விட்டன.

சீட்டில் கண்டிருந்த விஷயம் இதுவே:

"நம் யத்தனங்கள் யாவும் பயனற்றுப் போயின. மரணத்தறுவாயிலும் அக்பர்ஷா தம் திட சித்தத்தை இழக்கவில்லை. நம்முடைய மந்திரங்கள் அவரிடத்தில் பலித்தால்தானே? அவரது ஆக்ஞையின் பேரில் இப்போது அவருடைய புத்திரர் ஸெலிம் ஜிஹாங்கீர் பாதுஷாவாக விளங்குகிருர்.

"கஸ்ரூவைப்பற்றி நீ கவலைப்பட வேண்டிய தில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் உன்னுடைய விரோதிகளால் உனக்கு யாதொரு தீங்கும் வராதிருப்பதற்காக, உடனே ஆக்ராவுக்கு வரவேண்டும்."

அந்தச் சதியாலோசனை சரித்திரப் பிரஸித்த மானது. இங்கே அதை விஸ்தரிப்பது வீணே.

சமாசாரம் கொண்டு வந்ததற்காகத் தூதனுக்கு வெகுமதி அளித்து அவனை அனுப்பியதும் மதிபிபி பேஷ்மனுக்குக் கடிதத்தைப் படித்துக் காண்பித்தாள்.

" இதற்கென்ன உபாயம்?"

" இப்போது எந்த வழியும் தோன்றவில்லை!"

பேஷ்மன் :— (சிந்தாகுலத்துடன்) விபரீதம் ஒன்றும் நேரிடாதே? இப்போது இருப்பதைவிட நல்ல நிலைமையில் இருப்போம். பாதுஷாவின் ஜெனனாவில் ஒருத்தியாக இருப்பது வேறு அரசனுடைய பட்ட ராணியாக இருப்பதைவிட மேல் அல்லவா?

மதி :—(மெதுவாக நகைத்து) அந்தக் காலம் வரப் போகிறதேது? மொகல் அந்தப்புரத்தில் எனக்கு இனி மேல் இடம் கிடையாது. சீக்கிரத்தில் மெஹெர் - உன்னிஸாவை ஜிஹாங்கீர் விவாகம் செய்துகொள்வார். மெஹெருக்கும் எனக்கும் பிராணஸ்நேகம் சின்ன வயதி லிருந்து. ராஜ்யத்தை அவள்தான் பரிபாலனம் செய்யப் போகிறுள். ஸெலிம் அவளுக்கு அடங்கிப் பொம்மை மாதிரி இருப்பார். அவர் ஸிம்ஹாஸனத்தில் ஏருமல் இருப்பதற்காக முட்டுக்கட்டை போட்டவர்களுள் நானும் ஒருத்தியென்றே அவருக்கு வெளிச்சமாகிவிடும். அப்போது என் கதி என்னவாகும் தெரியுமா?

பேஷ்மன் திகிலடைந்துபோய் அழத் தொடங்கி ஞள். "ஆனல் நமக்கு என்ன ஆபத்து வரப் போகிறதோ?" என்ருள் கம்பலையுடன்.

"ஒன்றைத்தான் நான் நம்பியிருக்கிறேன். மெஹெ ருக்கு ஜிஹாங்கீரிடத்தில் எந்தவிதமான பற்றுதல் இருக்கிறதோ அதை அறியவேண்டும். அவள்மட்டும் தன் கணவனிடத்தில் உள்ளூற அன்புகொண்டவளாய் இருந்தால், ஜிஹாங்கீர் நூறு ஷேர் ஆப்கனைக் கொன்ரு லும் அவள் அவனுக்கு இணங்கவே மாட்டாள்.

அவ்வாறு இராமல் ஜிஹாங்கீர்மீது அவள் தீராக் காதல் கொண்டிருக்கும் பக்ஷத்தில் நாம் தப்புவதற்கு வழியே இல்லை" என்றாள் லூத்ப்.

"மெஹெர் - உன்னிஸாவின் உள்ளத்தில் புகுந்து பார்ப்பது எப்படி?" என்று பேஷ்மன் வினவினாள்.

ஆபத்துத் தலைக்குமேல் தொங்கும்போதுகூடத் தனக்கு இயல்பான சிரிப்புடன், "லூத்ப் - உன்னிஸா வினால் ஆகாத காரியங்கூட ஒன்றுண்டோ? மெஹெர் எனக்கு வேண்டியவள். நாளைக்கே வர்த்தமானபுரிக்குச் சென்று அவளைக் காணமாட்டேனோ?" என்றாள் லூத்ப்.

பே :—மெஹெர் ஜிஹாங்கீரை விரும்பாத பக்ஷத்தில் என்ன நடக்குமோ?

லூத்ப் :—என்னுடைய தகப்பனார் சொல்லுவார், இடம் பொருள் ஏவலை அறிந்து எதையும் செய்ய வேண்டுமென்று.

இருவரும் சற்றுநேரம் சும்மா இருந்தனர். மெல்லிய சிரிப்பினால் மதியின் நமுடு அசைந்தது.

"என்ன நினைத்துக்கொண்டு சிரிக்கிறீர்கள்?" என்று பேஷ்மன் கேட்டாள்.

"புது யுக்தி தோன்றுகிறது."

"அது என்னவோ?"

ஆனால் லூத்ப் பேஷ்மனுக்கு அதை வெளியிட வில்லை. வாசகர்களுக்கு நானும் அது இன்னதென்று சொல்லமாட்டேன்; பின்னால் தெளிவாகும்.

3

இகலாள் வீட்டில்

" சித்திர விழியார் நெஞ்சந் தெரிந்தவ ரில்லை வேந்தே !"
—விவேக சிந்தாமணி

அச்சமயம் ஷேர் ஆப்கன், வங்காள ஸுபாதாரின் காரியதரிசியாக வர்த்தமானபுரத்தில் இருந்தான்.

மதிபிபி வர்த்தமானபுரிக்கு வந்தபோது அவனுடைய இல்லத்திலேதான் தங்கிவிட்டுச் சென்றாள். ஆப்கனும், அவனுடைய குடும்பத்தவரும் விசேஷ மரியாதைகளுடன் மதியைத் தம் விருந்தாளியாக வரவேற்றனர். ஆக்ராவில் இருக்கும்போது ஷேர் ஆப்கனும், அவன் மனைவி மெஹெர்-உன்னிஸாவும் மதிக்கு நன்றாகப் பழக்கமுடையவர்கள். மெஹெருக்கு மதியிடம் அளவற்ற அன்பு. பின்னரே இருவரும் மொகல் ஸிம்ஹாஸனத்திற்குப் போட்டியிடும் இகலர்களாக மாறினர். இப்போது இருவரும் ஒரே இடத்தில் சந்திக்க நேரிடவே மெஹெர்-உன்னிஸா, 'இந்து தேசத்தை ஆள யார் கொடுத்துவைத்திருக்கிறாளோ? அது கடவுளுக்கும், அந்த ஸெலிமுக்குமே தெரியும். வேறு யாருக்காவது தெரியுமென்றால், லுத்ப் - உன்னிஸாவுக்குத்தான். இந்த விஷயத்தைப்பற்றி அவள் ஏதாவது வெளியிடுகிறாளா பார்ப்போம்' என்று நினைத்தாள்.

இந்தவிதமே மெஹெறரின் உள்ளத்தைத் துருவிப் பார்க்க வேண்டுமென்று லுத்ப்-உன்னிஸாவுக்கும் பேராவல்!

அந்தக் காலத்தில் இந்தியாவிலேயே அதிக ரூபவதியும் குணவதியுமென்று பிரக்கியாதி அடைந்தவள் மெஹெர்-உன்னிஸாவே; சந்தேகம் இல்லை. அவளுக்கு ஒப்பாக உலகத்தில் ஜனித்தவர்கள் மிக மிகச் சிலரே. சரித்திரப் புகழ்வாய்ந்த பெண்மணிகளுள் அவள் முக்கியமானவள் என்பது மட்டுமல்ல. அந்த யுகத்து மேதாவிகளான ஆடவர்களைவிடப் புத்தியிலும் அவள் எவ்வளவோ மடங்கு உயர்ந்தவளென்றே கூறலாம். ஆடல் பாடல்போன்ற நற்கலைகளில் அவளுக்கு நிகராக எந்தப் பெண்மணியும் வரவில்லை. காவிய ரசனையிலும், ஓவியம் வரைவதிலும், அக்காலத்துக் கலைவல்லுநரைத் திகைக்கச்செய்யும் ஆற்றல் அவளிடம் இருந்தது. அவளுடைய வடிவழகைவிடச் சுவையார்ந்த அவளது ஸம்பாஷணையின் பொலிவே எவர் மனத்தையும் கவரக் கூடிய பெற்றியதாகும். இவ்வகையான 'தன்மைகளில் சற்றும் மதி இளைத்தவள் அல்ல. இன்று அவ்விரு சமர்த்திகளும் ஒருவர் மனத்தை ஒருவர் ஆராயப் புகுவது விந்தையான விஷயமல்லவா?

மெஹெர்-உன்னிஸா தன் அறையில் ஓவியமொன்று வரைவதில் கருத்தாயிருந்தாள். அவளது பின்புறமாக மதி, தாம்பூலம் மென்றுகொண்டே படம் வரைவதைப் பார்த்தவண்ணம் அமர்ந்திருந்தாள். மெஹெர் அவளை விளித்து, "லுத்பா, சித்திரம் நன்றாக வருகிறதா?" என்றாள்.

" நீ எழுதும் சித்திரத்திற்கு எங்கேயாவது குற்றம் குறை உண்டோ? உனக்குச் சமமாகச் சித்திரம் எழுது வோர் வேறு எவரும் இல்லையென்ற ஒரு வருத்தந்தான் " என்றாள் மதி.

மேஹேர் :—அதற்காக வருந்துவானேன்?

மதி :—வேறு யாருக்காவது உன்னுடைய கைப் பழக்கம் இருந்தால், உன் வதனத்தைப்போல் வசீகர மாகத் தன் முகத்தையும் வைத்துக்கொள்ள மாட் டார்களா?

மே :—மயானத்திற்குப் போகும்போது இந்த முக காந்தி கூட வருமா என்ன?

இந்த வார்த்தையில் ஆழ்ந்த கருத்து அடங்கி யிருந்தது.

ம :—மெஹேர்! இன்று இந்த மனச்சோர்வும் வெறுப்பும் உன்னிடத்தில் தோன்றுவதேனோ?

மே :—மனச்சோர்வு ஒன்றுமில்லை. நாளைக்கு என்னைவிட்டு நீ போய்விடுவதைக் குறித்துத்தான் நான் வருத்தப்படுகிறேன். உன் நினைவே எனக்கு அடிக்கடி வரும். இன்னும் இரண்டொரு தினங்கள் தங்கிச் சென்றால் எவ்வளவோ மகிழ்ச்சி அடைவேன்.

ம :—முடியுமானால் நான் பத்து நாட்களானாலும் உன்னுடன் தங்கியிருக்கமாட்டேனா? நான் பலபேருக்கு ஜவாப் சொல்லவேண்டியிருக்கிறது. பல தொல்லைகளில் சிக்கிக்கொண்டிருக்கிறேன். நான் எப்படித் தங்குவது, மெஹேர்?

மே :—என்மேல் உள்ளூற அன்பு இருந்தால் இந்த மாதிரி யெல்லாம் சொல்லுவாயா? இந்தப் பக்கம்

அபூர்வமாக வந்திருக்கிறாய், லூத்ப்! இன்னும் சில தினங்கள் இங்கிருந்தால் என்ன முழுகிப்போய்விடும்?

ம:—நான்தான் சொன்னேனே, முக்கியமான வேலை இருக்கிறதென்று. என் சகோதரன் உரிஷ்யாவில் பத்தானியர்களுடன் மூண்ட போரில் படுகாயப்பட்டுக் கிடக்கிறான். அவனைப் பார்க்கவேண்டியே பேகத்தின் அனுமதியைப் பெற்று ஓடிவந்திருக்கிறேன். வழியில் பல கஷ்டங்கள் குறுக்கிட்டன. இன்னும் தாமதம் செய்தால் நன்றாயிராது. உன்னைப் பார்த்தும் வெகு நாட்களாயின. வந்தேன்; உன்னோடு இரண்டொரு தினங்களைக் குஷியாகவும் கழித்தேன்.

மே:—எத்தனை தினங்களுக்குள் வந்துசேர்வதாகச் சொல்லியிருக்கிறாய்?

மெஹெர் பொடிவைத்து இதை மொழிந்தாளெனக் கண்டுகொண்டாள் மதி.

வேடிக்கையாகவும் அதே சமயத்தில் சுருக்கென உறைக்கும் விதமாகவும் பேசுவதில் மெஹெர் திறமை வாய்ந்தவள். ஆனால் அத்தகைய சாமர்த்தியம் மதிக்கு இல்லை. "மூன்று மாதங்களுக்குள் ஆக்ராவுக்குத் திரும்பி வர வேண்டுமென்று ஆக்ஞை. ஆனால் அவ்வாறு நடப்பது அஸாத்யம். ஏற்கனவே இந்தப் பக்கத்தில் வீணாக நாட்களைக் கழித்தேன். பேகம் கோபித்துக் கொள்வாளோ என்னவோ?" என்றாள் லூத்ப்.

மெஹெர் யாவரையும் மயங்கச்செய்யும் சிரிப்புடன், "வாஸ்தவமே. அதனால் இளவரசர் ஸெலிமுக்கும் உன்மேல் கோபம் வரலாம்?" என்றாள்.

அர்த்தம் நிரம்பிய இம்மொழியைக் கேட்டு மதி திடுக்கிட்டாள். " என்னைக் கேலி செய்கிருயா? அப்படித் தான் இருக்கட்டுமே. இளவரசர் என்மேல் கோபம் கொள்வார் " என்ருள்.

மே:—உன்னை ஒன்று ஆந்தரிகமாகக் கேட்க விருப்பம். பேகமென்ற பட்டம் உனக்கு எப்போது வரப்போகிறது? இளவரசர் உன்னைத் தன் ஆசை நாயகியாக வைத்துகொள்ளப் போகிருரென்று காற்று வாக்கிலே கேள்விப்பட்டேனே, நிஜந்தானு?

ம:—நான் ஸ்வாதீனமற்றவள். கொஞ்ச நஞ்ச மிருக்கும் ஸ்வாதீனத்தை நான் ஏன் இழக்கவேண்டும்? பேகத்தின் பாங்கியாக இருப்பதால்தானே என்னுல் இங்கு வரமுடிந்தது; உன்னைப் பார்க்க முடிந்தது. அப்படி ஸெலிமின் ஆசைநாயகியாக இருந்தால் இந்தப் பக்கம் நான் வருவதேது?

மே:—பாதுஷாவாக வரப்போகிறவரின் பட்ட ராணியாக ஆனபிறகு நீ உரிஷ்யாவுக்கு வரவேண்டிய அவசியமென்ன இருக்கிறது?

ம:—ஸெலிமின் பிரதான மகிஷியாக வருவதற்கு அவ்வளவு தலைபடைத்தவளா நான்? இந்த ஹிந்து ஸ்தானத்தில் மெஹர் - உன்னிஸா ஒருத்தியே மொகல் சக்கரவர்த்தினியாகத் தகுதியுடையவள்!

மெஹர் தன் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள். சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு அவள், " லுத்பா! என்னை வருத்துவதற்காக நீ இந்த வார்த்தையைச் சொல்லவில்லை யென்று நினைக்கிறேன். என் இதயத்தைக் கண்டறிய இவ்வாறு சொன்னுயா? நான்

மெஹெரும் லுத்ப் - உன்னிஸாவும்

ஷேர் ஆப்கனின் பத்தினிப்பெண் ; என் உடலும் உயிரும் அவர் ஒருவருக்கே உரியவை. அதை மறந்து பேசுகிருயா என்ன ?" என்ருள்.

வெட்கம் கெட்டவளான மதிக்கு இப்பதிலிலுள்ள இகழ்ச்சிக் குறிப்பு ஒரு பிரமாதமாகத் தோன்றவில்லை. இதற்கு மாருக அனுகூலமான சந்தர்ப்பமே கிட்டியது அவளுக்கு. "மெஹெர், நீ கணவனைத் தெய்வமெனக் கொண்டாடுகிறவளென்று எனக்குத் தெரியும். ஸெலிம் உன் தியானமாகவே பைத்தியம் பிடித்தவர்போல் இருக்கிருர். எச்சரிக்கை செய்யவே உனக்கு இதைச் சொன்னேன்" என்ருள்.

மெ :—இப்போது புரிந்தது. அதனுல் நான் பயப்பட வேண்டிய காரணமென்ன ?

ம :—கணவனை இழக்கும் பெருங்கேடு வருமென்ற பயந்தான்.

இதைக் கூறியதும் மெஹெர் - உன்னிஸாவின் முகத்தையே ஊன்றிக் கவனிக்கலானுள் மதி. ஆனுல் மெஹெரின் வதனத்தில் திகிலின் சாயையோ, உவப்பின் பிரகாசமோ ஒன்றும் புலப்படவில்லை.

மெஹெர் பெருமையுடன், "விதவையாவதைப் பற்றிப் பயமா? ஷேர் ஆப்கன் தம் உயிரைக் காத்துக் கொள்ளச் சக்தியற்றவரல்ல. அதிலும் அக்பர் பாதுஷாவின் அரசாட்சியில், அவருடைய சொந்தப் பிள்ளையாய் இருந்தாலும் சரி, எந்தப் பாவத்தையும் அறியாத ஒருவருடைய உயிருக்குத் தீங்கு இழைப்பானுனல் ராஜ தண்டனையிலிருந்து அவனுல் தப்பவே முடியாது" என்ருள் கண்களில் ஒளி படர.

ம:—உண்மையான பேச்சு. ஆனால் அக்பர் காலஞ் சென்றதாகவும், ஸெலிம் ஸிம்ஹாஸனம் ஏறிவிட்ட தாகவும் எனக்குக் கேள்வி. தில்லிக்கு அதிபதியே இந்த மாதிரி ஓர் இழிவான காரியத்தில் இறங்குவதா யிருந்தால் அவரை யார் தடுப்பது?

மெஹெர் இதற்கு மறுமொழி பகரவில்லை. வேய் போல் அவள் தேகம் நடுக்குற்றது. முகம் கவிழ்ந்து வீற்றிருந்தாள். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகத் தொடங்கியது. அப்போது மதி, "ஏன் அழுகி ருய், மெஹெர்?" என்று ஆதரவுடன் கேட்டாள். நீண்ட பெருமூச்சுடன் மெஹெர் பதிலுரைத்தாள்; "ஸெலீம் பாரத நாட்டின் சக்கரவர்த்தி.........நான் எங்கே?"

மதியின் எண்ணம் பலித்தது. "ஸெலிமை உன்னால் மறக்க முடியவில்லை அல்லவா?" என்ருள்.

மெஹெர் அடைத்த குரலில், "எப்படி மறக்க முடியும்? என்னை வேண்டுமானாலும் மறந்துவிட முடியும். அவரை மறப்பதென்பது ஒருநாளும் முடியாது, லுத்பா! என் மனத்தைத் திறந்து சொல்லு கிறேன் உனக்கு. உன் ஒருத்தி மனசில் மட்டும் இருக்கட்டும்" என்ருள்.

ம:—அப்படியே, மெஹெர். நான் வர்த்தமான புரிக்குச் சென்றிருந்த சமாசாரம் ஸெலிமுக்கு தெரிந் தால் அவர் உன்னைப்பற்றி விசாரிக்காமல் என்னை விடுவாரா? அதற்கு நான் என்ன பதில் சொல்வது?

சில நாழிகை சிந்தையில் ஆழ்ந்திருந்ததும், மெஹெர் மதியை நோக்கி, "மெஹெர் தன் மனப் பீடத்தில் அவரை (ஸெலிமை) வைத்துத் தியானம் செய்கிரு

ளென்று சொல்லு. சமயம் வந்தால் அவருக்காகப் பிராணனையும் துறக்கத் துணிந்துள்ளாள்; ஆனால் மானங்கெட்டுத் தன் குலத்திற்கு அபகீர்த்தியைத் தேடிக் கொள்ளமாட்டாள். அடியாளின் கணவர் உயிருடன் இருக்கும்போது பிறரது முகத்தை நிமிர்ந்து நோக்க மாட்டாள்.. அவரால் தன் கணவருடைய ஆயுள் முடிவடைந்தால் இந்த ஜன்மத்தில் அவரை நாடுவாளென்று கனவிலும் நினைக்க வேண்டாமென்று சொல்லு" என்றாள்.

தூணியிலிருந்து புறப்படும் அம்புகள் போன்ற இந்த வார்த்தைகளைக் கூறியதும் மெஹெர் அவ்விடத்தைவிட்டு அகன்றாள். மதிபிபி உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. முடிவில் வெற்றி அடைந்தவள் அவளே. மெஹெரின் உள்ளத்தை ஆராய்ந்து தெரிந்துகொண்டாள் மதி. ஆனால் மதியின் நெஞ்சின் ஆழத்தை மெஹெரால் கண்டுபிடிக்கமுடியாமற் போய் விட்டது. பின்னால் மொகல் ஸாம்ராஜ்யத்தையே கைப்பற்றிய மெஹெரின் புத்திபலம் மதியிடம் இன்று தோல்வியுற்றது. இதற்குக் காரணம், மெஹெர்-உன்னிஸாவின் லக்ஷ்யம் காதல். மதிபிபியின் கருத்தெல்லாம் தன்னலமே!

மானிடர் உள்ளத்தின் விந்தையான பான்மையை அறிந்துகொள்ளும் சாமர்த்தியம் மதிக்கு உண்டு. மெஹெர் - உன்னிஸா சொன்னதை வைத்துக்கொண்டு அவள் ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தாள். அவள் கொண்டிருந்த முடிவும் நடந்தேறியது. மெஹெர் ஜிஹாங்கீரின் ஆருயிர்க் காதலி யெனத் தெளிந்தாள்.

தம்மைப் பெருமைப்படுத்திக்கொள்ளும் இயல்புடைய பெண் வர்க்கத்தினர் முதலில் ஒன்று சொல்லி விடுவார்கள். பிறகு வழி அனுகூலமாக ஏற்படும்போது தம் நெஞ்சில் புதைந்து கிடப்பதை வெளிக்கிளப்புவர். அவர்கள் முனைந்துவிட்டால் தடுப்பது அஸாத்யம். அப்போது பாதுஷாவின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றவும் வல்லவர் அவர்கள்.

இந்த முடிவுக்கு வந்ததால் மதி கொண்டிருந்த ஆசை, நம்பிக்கை யாவும் ஆற்றில் கரைத்த மணலாகி விட்டன. அதனால் மதி துக்கப்பட்டாளா என்ன ? இல்லை. அதற்கு மாறாகப் பூரிப்பே கொண்டாள். தன் மனம் திடீரென இவ்வாறு மாறியதன் காரணம் மதிக்கே முதலில் விளங்கவில்லை. ஆக்ராவுக்குப் பிரயாணமானாள். நடுவில் கடந்தன சில தினங்கள். அச்சமயம் அவளுக்குத் தன் மனப்போக்கு முற்றும் தெளிவாகி விட்டது.

4

அரசர் மாளிகையில்

" எங்கும் போய்க் கரைகாணுது எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே "

— பெரிய திருமொழி

மதி ஆக்ராவுக்கு வந்துசேர்ந்தாள். இனிமேல் அவளை மதியென்று கூறவேண்டிய அவசியமில்லை. சிலநாட்கள் அவளுடைய சித்தம் தாறுமாருன வழிகளில் செல்லத் தொடங்கியது. ஜிஹாங்கீரை அவள் சந்தித்தாள். முன்போலவே அவளைப் பாதுஷாவாக மாறிய ஸெலிம் ஆதரவுடன் கூப்பிட்டு, அவளுடைய தமயனின் க்ஷேமத்தைப் பற்றியும் விசாரித்தான். மெஹெர்-உன்னிஸாவிடம் லுத்ப் உரைத்தது அக்ஷரம் விடாமல் உண்மையாகவே முடிந்தது. சம்பாஷணைக் கிடையே ஜிஹாங்கீர், " மெஹெருடன் நீ இரண்டொரு நாள் தங்கியிருந்ததாகச் சொன்னுயே, என்னைப்பற்றி அவள் ஒன்றும் பேசவில்லையா ?" என்று கேட்டான். லுத்ப் கபடற்ற நெஞ்சுடன் மெஹெர் ஸெலிமிடத்தில் கொண்டுள்ள அந்தரங்கமான காதலைப்பற்றிச் சொன்னுள். பாதுஷா இதைச் செவியுற்று மௌனமாக இருந்தான். அவனுடைய நயனங்களில் நீர்த்துளிகள் துடித்துக்கொண்டிருந்தன.

" ஜஹாம்பனு ! அவ்வளவு தொலைவிலிருந்து நல்ல சமாசாரம் கொண்டுவந்தாளே, அவளுக்கு எந்தமாதிரி

யான வெகுமதி அளிக்க உத்தேசமோ?" என்றாள் அந்த மாயக்காரி.

பாதுஷா சிரித்துவிட்டு, "பிபி, உன்னுடைய ஆசைக்கோர் அளவில்லை!" என்றான்.

லுத்ப் :—ஜஹாம்பனா! அடியாள்மீது ஏதேனும் குற்றமிருந்தால் சொல்லுங்கள்.

பாது :—ஓர் ஏக சத்திராதிபதியே உன்கீழ்க் *'குலாமா'க இருக்கும்போது உனக்கென்ன குறைவு, லுத்பா?

லுத்ப்-உன்னிஸா முறுவல்செய்து, "பெண்களான எங்களுக்குமட்டும் வேறு கடமைகள் இல்லையா?" என்றாள்.

பா :—அது என்னவோ?

லு :—முதலில் தங்கள் ஆக்ஞை பிறக்கட்டும். அப்புறம் அடியாள் கூறுவதற்குச் செவிசாயுங்கள்.

பா :—அதனால் அரசியல் காரியங்களுக்கு இடையூறு ஒன்றும் வராதே?

லு :—(சிரித்து) என் ஒருத்தியினாலா தில்லீச்வரரின் ராஜ்ய காரியத்திற்குத் தடங்கல் விளையும்?

பா :—ஆனால் செவி சாய்க்கிறேன். நீ செய்து முடிக்கவேண்டிய கடமை யாதோ?

லு :—கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்.

ஜிஹாங்கீர் உரத்த குரலில் நகைத்தான். "என்ன புதுமை இது? எங்கே இடம் பார்த்திருக்கிறாய்?" என்றான்.

---

* குலாம் = தாஸன்.

" இடம் நிச்சயமாகிவிட்டது. தங்களுடைய உத்தரவுக்குத்தான் காத்திருக்கிறேன். ராஜாவின் ஸம்மதம் இராமற்போனுல் ஒன்றுமே நிறைவேருது."

" என் ஸம்மதம் எதற்கு, லுத்பா? யாரை இன்ப சாகரத்தில் அமிழ்த்த உத்தேசித்திருக்கிருய்? அந்தப் புண்யவான் யார் சொல்லேன்?"

லு :—அடியாள், தங்களுக்குத் தொண்டாற்றுவதனுலேயே கேவலம் இரண்டு புருஷர்களுடன் நட்புக் கொள்ளும் விபசாரி யாகமாட்டாள். அவள் தன் கணவனையே மீண்டும் விவாகம் செய்துகொள்ளத் தங்கள் அனுமதியை யாசிக்கிருள்.

" அப்படியா? ஆனுல் இந்தப் பழைய 'நபரின்' கதி என்ன? துறந்துவிட எண்ணமா?"

" அதற்குப் பதில் மெஹெர்-உன்னிஸாவை வைத்து விட்டுச் செல்கிறேனே."

" எந்த மெஹெர்-உன்னிஸா அவள்?"

" மொகல் ராணியாக வரப்போகிருளே அவள் தான்!"

மெஹெர்-உன்னிஸா தனக்குப் பட்டமகிஷியாக வருவாளென்பதை நன்கு அறிந்து லுத்ப் ஆசாபங்கத்திஞல் தன்னைவிட்டு விலக முயல்கிருளென்று நினைத்தான் ஜிஹாங்கீர். அவன் மனம் வேதனைப்பட்டது.

" மஹாராஜாவுக்கு இது பிடிக்கவில்லை போலும்?" என்று லுத்ப் பேச்சுக் கொடுத்தாள்.

"பிடிக்கவில்லை யென்று சொல்லவில்லையே நான். ஒருதரம் வரித்தவனை மீண்டும் நீ விவாகம் செய்து கொள்வதன் நோக்கம் என்ன ?"

லு:—அடியாளுடைய கொழுநர் அடியாளை முதலில் பத்தினியாகப் பாவிக்கவில்லை. இப்போது அவர் ஜஹாம் பனுவின் அடிமையை விட்டுப்பிரிய மனம் வராதவ ராய்த் துடிக்கிறார்.

பாதுஷா மெதுவாகச் சிரித்தானே ஒழியச் சிந்தனை யில் ஆழ்ந்து விளங்கியது அவன் முகம்.

"இன்னுயிர் லுத்பா! உன் பொருட்டு எதை வேண்டுமானாலும் நான் செய்யத் தயார். அவ்வழி உன் மனம் செல்வதாயிருந்தால் அவ்விதமே நட. அதனால் என்னைத் துறந்துவிடுவானேன் ? ஒரே ஆகாயத்தில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடமில்லையா ? இரு மலர் கள் ஒரே காம்பில் தோன்றுவதில்லையா ?" என்றான் பாதுஷா ஏக்கத்துடன்.

அகன்ற விழிகளுடன் லுத்ப் அவனையே சிலகணம் நோக்கிவிட்டு, "சிறிய மலர் அவ்வாறு இருக்குமே தவிர ஒரே கொடியில் இரண்டு பத்மங்கள் எங்கேயாவது பூத்ததுண்டோ ? தங்கள் ஸிம்ஹாஸனத்தின்கீழ் உறுத் தும் முள்ளாக இருக்கமாட்டேன் " என்றாள்.

இதைக் கூறியதும் தன் மஹலுக்குச் சென்றாள் லுத்ப்-உன்னிஸா.

இந்த விந்தையான மனப்பான்மை அவளுக்கு ஏன் பிறந்ததென்று ஜிஹாங்கீருடைய மூளைக்கு எட்ட

வில்லை. தனக்கு அனுபவம் உள்ள வரை இதைக் குறித்து அவன் யோசித்துவிட்டு அதோடு நின்ருன். பிறர் மனத்துள் ஆழ்ந்திருக்கும் தத்துவங்களைத் தெரிந்து கொள்ளக்கூடிய ஞானம் அவனுக்கு இல்லை.

லுத்ப்-உன்னிஸாவின் நெஞ்சம் கல். ஆராய்வதற்கு இடம் தராத கடினம் வாய்ந்தது. பெண்ணீர்மையை ஈடழிக்கும் ஸெலிமின் மோஹன ரூபங்கூட அவள் மனத்தை அசைக்கவில்லை. ஆனல் இந்தக் கல்நெஞ்சத்தையும் துளைக்கப் புழுவொன்று தோன்றியது!

5

தன் அகத்தில்

"பிறப்பிடைக் கொண்டுஞ் சிறப்பொடு பெருகி
நெஞ்சிற் பின்னி நீங்கல்செல்லா அன்பு'' — பெருங்கதை

லுத்ப் - உன்னிஸா தன் மஹலை உற்றதும், மலர்ந்த முகத்துடன் பேஷ்மனைக் கூப்பிட்டாள். பொன்னும் முத்தும் வைத்துப் பதித்த ஆபரணங்களை ஒவ்வொன்ருகக் களைந்துவிட்டு, "இதெல்லாம் உனக்கே, எடுத்துக்கொள்" என்ருள்.

பேஷ்மன் திகைத்து நின்ருள். அவளால் இதை நம்பவே முடியவில்லை. "இந்த விலையுயர்ந்த நகைகள் எனக்கு எதற்கம்மா ? இன்று என்ன செய்தி ? அதைச் சொல்லுங்கள்" என்ருள்.

"நல்ல செய்திதான்."

"அதுதான் தெரிகிறதே......மெஹெர் - உன்னிஸா வின் தொல்லை நீங்கிற்ரு ?"

"அதைக் குறித்து இனி யாதொரு விசாரமும் இல்லை" என்ருள் லுத்ப்.

பேஷ்மன் தன் உள மகிழ்ச்சியைக் காட்ட, "எனக்கு என்ன குறை! பேகம் ஸாஹிபாவின் அந்தரங்க மனுஷி யாகிவிடுவேன்" என்ருள்.

லு :—அந்த ஆசை உனக்கிருந்தால் நான் மெஹெ ருக்குச் சிபார்சு செய்கிறேன்.

பே :—இதென்ன கேலி? மெஹெர் பிபிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ? நீங்கள் அல்லவோ பாது ஷாவின் பேகம் ?

லு :—அந்தமாதிரி நான் சொல்லவில்லையே. அந்த விஷயத்தைப்பற்றி என் ஸந்தேகம் தெளிந்துவிட்ட தென்றுதான் சொன்னேன்.

பே :—ஆக்ராவின் ராணியாக வராமற்போனல் பட்ட சிரமம் யாவும் விருதாவா ?

" ஆக்ராவோடு எந்தவிதமான உறவும் இனி நான் வைத்துக்கொள்ளப் போவதில்லை."

" இதென்ன, நீங்கள் பேசுவதே விந்தையாய் இருக் கிறதே ! இதற்கா, ' இன்று நல்ல செய்தி ' என்றீர்கள் ? எதையும் எனக்கு விவரமாகச் சொன்னல்தான் தெரியும்."

" இனி ஒருபோதும் நான் ஆக்ராவின் எல்லையை மிதிக்கக்கூடாதென்று உறுதி கொண்டுவிட்டேன்."

" ஆனல் எங்கே போக உத்தேசம்?"

" வங்காளத்தில் வாஸம் செய்யப் போகிறேன். முடியுமானல் அந்த நாட்டைச்'சேர்ந்த நல்ல புருஷன் ஒருவனைக் கல்யாணம் செய்துகொண்டு நிம்மதியாகக் காலம் கழிக்கவேண்டுமென்று எண்ணம்."

" இது மிகவும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. கேட்கும்போதே என் குலை நடுங்குகிறது, அம்மா !"

"வெறும் தமாஷுக்குச் சொன்னதல்ல. நான் ஆக்ராவை விட்டு நீங்குவதென்னவோ ஸத்யம். பாது ஷாவினிடமிருந்து விடையும் பெற்றுக்கொண்டேன்."

"இந்த மோசமான புத்தி உங்களுக்கு யார் போதித்தது?"

"என்ன மோசம்? ஆக்ராவில் இத்தனை நாட்கள் சுற்றி அலைந்தேனே; என்ன பயன் அடைந்தேன்? சுகமான வாழ்வில் இருக்க, பால்யத்திலிருந்து எனக்கு விருப்பமடீ. அதைத் தேட என் பிறந்தநாடாகிய வங்காளத்தைத் துறந்து இவ்வளவு தொலைவில் வந்தும் எனது ஆசை நிறைவேறக் காணோம். இன்பத்தைப் பெற நான் செலவழித்த பணத்திற்கோ ஒரு கணக்கில்லை. நான் செய்த தீய காரியங்களுக்கோ எல்லை இல்லை. ஆனால் எனது லக்ஷ்யம்மட்டும் கைகூடாமல் நின்றது. ஐச்வர்யம், கௌரவம், கீர்த்தி இவற்றில் எனக்கு ஒரு குறைவுமில்லை. இருந்தும் என் மனம் நாடிய வஸ்து கிடைக்கவில்லையே. இத்தனை தினங்களை வீணகக் கழித்தபிறகு இப்போது எண்ணிக்கொள்கிறேன், அரை நிமிஷமாவது நான் சுகத்தை அனுபவித்தேனு வென்று. என்னுடைய வேட்கை நாளுக்கு நாள் அதிகரிக்கிறதே ஒழியத் தணியவில்லை. நினைத்த மாத்திரம் அளவற்ற தனம் பெறக்கூடிய தன்மை எனக்கு உண்டு. ஆனால் அது எதற்காக? அது இமைப்பொழுதாவது எனக்கு இன்பம் தருமா? மலையருவி போன்றது எனக்குள்ள இந்தத் தாகம். ஆரம்பத்தில் தெள்ளிய ஓடையாகச் சலசலத்துக்கொண்டு இருப்பிடம் தெரியாமல் நெளிந்து சென்றது. அங்நிலையில் அதை அறிவார் யார்? போகப்

போக அதன் உருவம் நதியாக மாறியது. நீரில் அழுக்கும் பாசியும் படர்ந்தன. அதற்குமேல் காற்று வந்து சிற்றலைகளைக் கிளப்பியது. ஆறும் அகன்றுகொண்டே வந்தது. அதன் ஆழத்தில் முதலை போன்ற கொடிய பிராணிகளும் இருப்பிடம் கொண்டன. பின்னும் நதி பெரிதாகத் தொடங்கியது. அதன் நீர் குழம்பி விளங்கிற்று. ஆற்றிடையில் மணல் திடர்கள் தோன்றின. நீரின் ஓட்டம் அடங்கிக்கொண்டே வந்தது. பெரிய ஆறு எல்லையற்ற கடலினுள் பாய்ந்து எங்கு மறைந்து விட்டதோ யாருக்குத் தெரியும்?

பே :—இதெல்லாம் எனக்கு விளங்காத பெரிய வார்த்தை, பிபிஜான்! எதனுல் நீங்கள் சுகப்படவில்லை யென்று சொல்லுகிறீர்கள்?

லு :—நான் சுகமடையாததன் காரணம் இத்தனை நாட்கள் சென்றபிறகே எனக்குப் புரிகிறது. மூன்று வருஷகாலம் ஆக்ரா மாளிகையின் நிழலில் மக்கிக் கிடந்தேன். சிறிதளவும் நான் இன்பத்தைக் காணவில்லையடீ. உரிஷ்யாவிலிருந்து அன்று திரும்புகையில் வழியில் அதை ஒருநாள் பெறக் கொடுத்துவைத்தேன். இப்பொழுதாவது என் வார்த்தையின் ரகஸியம் புரிந்ததா?

பே :—உங்களுடைய பேச்சே மிகவும் கூடமாயிருக்கிறது, அம்மா!

லு :—ஹிந்துக்களின் தெய்வ விக்கிரகங்களைப்போல் இதுவரை நான் இருந்தேன். வெளிப்புறம் தங்கக் கவசம் அணிந்திருந்தாலும் அவற்றின் உட்புறம் வெறும் கருங்கல். ஐம்புலனும் ஒன்றை நாடி அலைகின்றன. இந்தத் தாகம் அல்லும் பகலும் என்னை எரித்துக்

கொல்லுகிறது. கல்லானுலும் அதனுள் ஜீவாக்னி இருக்கிறதா இல்லையா என்பதை ஆராய்ந்து வருகிறேனே.

பே :—இதற்கெல்லாம் அர்த்தம் என்னவோ ?

லு :—(நகைகளைக் காட்டி) இந்த வைரமோதிரம் யார் அளித்தது ?

“ஷாஹ் பாஜ்கான்.”

“இந்த மரகதக்கண்டி ?”

“ஆஜீம்கான்.”

“இன்னும் யார் யார் தந்திருக்கிருர்கள் ?”

“கரீம்கான், கோகலதாஷ், ராஜா ஜீவனஸிம்ஹர், ராஜா ப்ரதாபாதித்யர், மூஸாகான் எத்தனையோ பேர். அவர்கள் பெயரெல்லாம் ஞாபகம் இருக்கிறதா ? கடைசியில் ஜஹாம்பனுவே நகைகளால் உங்களை இழைத்திருக்கிருரே.”

“இவர்களுள் யார்மீது எனக்கு அளவற்ற காதல், சொல்லு ?”

“எல்லோர் பேரிலுந்தான்” என்ருள் பேஷ்மன் சிரித்து.

“இது முகஸ்துதிக்காகச் சொல்லுகிற வார்த்தை. உள்ளூறச் சொல்லு ?”

பேஷ்மன் மெதுவான குரலில், “ஒருவரிடத்திலும் நீங்கள் காதல் கொள்ளவில்லை” என்ருள்.

“அதனுல் என் நெஞ்சத்தைக் கல்லோடு ஒப்பிடுவது சரிதானே ?”

“காதல் கொள்ள உங்களால் ஆகும்போது ஏன் அவ்விதம் செய்யவில்லை ?”

"மனமென்று ஒன்று இருக்கிறதே; அது இசைய வேண்டாமா? இதற்காகவே நான் ஆக்ராவை வெறுத்து நீங்குகிறேன்."

"அப்படிச் செய்வதனுல் என்ன நன்மை வந்து விடப் போகிறது? ஆக்ராவில் உங்களுக்குத் தகுந்த ஆடவர் எவருமே அகப்படாமற் போய்க் காட்டு மிராண்டிகள் வாழும் அந்த நாட்டிலா தேடிப்பிடிக்கப் போகிறீர்கள்? உங்களிடம் காதல்கொள்ள ஒருவர் இருக்கும்போது நீங்கள் ஏன் அதைர்யப் படுகிறீர்கள்? தில்லி பாதுஷாவ்விடவா உயர்ந்த புருஷர் இந்தப் பூலோகத்தில் உங்களுக்குக் கிடைக்கப்போகிருர்?"

லு:—அடி மூடமே! ஆகாயத்தில் சந்திர ஸூர்யர்கள் இருக்கும்போது ஜலம் மேலே நோக்கிச் செல்லாமல் ஏன் கீழே ஊர்ந்து செல்லவேண்டும்?

பே:—ஏன் அப்படி?

லு:—விதி!

லுத்ப்-உன்னிஸா எல்லாவற்றையும் பேஷ்மனிடம் விண்டு கூறவில்லை. கல்லையும் எரிக்கவல்லது காமாக்கினி. அதன் தாபத்தால் லுத்பின் கடினமான நெஞ்சமும் உருகத் தொடங்கியது!



6

சேவடியில்

“பாவிடை யாடுகுழல்போற் கரந்து பரந்தது உள்ளம்
————அடியேனுன் னடைக்கலமே” — **திருவாசகம்**

மண்ணில் வித்தை ஊன்றியதும் அதனினின்று முளைகிளம்புகிறது. முளையின்வளர்ச்சி எவரும் காணுதற் கரியது. ஒருதரம் விதையை நட்டபிறகு அதைப் பயிரிட்டவன் எங்கிருந்தால் என்ன? அது முளையாகிச் செடியாகிப் பெரிய மரமாக மாறிவிடுகிறது. கன்றுக இருக்கும்போது அதை யாரும் கவனிப்பதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக வளர்கிறது. முழம் அளவுச் செடியினால் இடையூறு ஒன்றும் வராதென்று அதை யாரும் லக்ஷ்யம் செய்வதில்லை. நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் கழிந்தபின், அதைக் கவனிக்குங்கால் பெரிய விருக்ஷமாகக் காட்சி தருகிறது. அதன் நிழலில் மற்றும் உள்ள சிறு செடிகள் வளர்ச்சி குன்றிச் சாகின்றன. வேறு எதுவும் பயிராவதற்கு அனுகூலமிராது போய் விடுகிறது.

லுத்ப்-உன்னிஸாவின் காதலும் இவ்வாறே வளரத் தொடங்கியது. திடீரென ஒருநாள் தன் மனத்திற் கினியனை ஒருவனை அவள் கண்ணுற்றாள். அப்போது

காதலின் பூர்ண உணர்வு, அவளுக்கு உண்டாகவில்லை. ஆனால் மனத்துள் கொழுந்துவிட்ட அக்காதலின் சுடரை அழியாமல் காத்துவந்தாள். அதன் இன்னுகர்ச்சி விகாச மாவதற்குள் மணாளனுடைய நட்பை இழந்தாள். ஆனால் அவனுடைய முகம் மட்டும் அவளது நினைவில் பதிந்து விட்டது. மனத்திரையில் அவனைக் கண்டுகளிப்பதே அவளுக்கு ஒருவாறு ஆறுதலைத் தந்தது ; வித்தினின்று முளை தோன்றியது. தன் நாயகனைக் காண லுத்ப் - உன்னிஸாவுக்குத் தீராத வேட்கை மூண்டது. ஒன்றை அதிகமாக நினைக்க நினைக்க அதைச் செய்யவேண்டு மென்ற தூண்டுதலும் ஏற்பட்டுவிடுகிறது. இதுவே சித்த விருத்தி. லுத்ப் - உன்னிஸாவின் நினைவை விட்டு அவனது உருவம் அரைக்கணமும் அகல வில்லை. காதலனைக் காணாமற்போனால் அவளுக்கு உயிரே நீங்கிவிடும்போல் இருந்தது. காலக்கிரமத்தில் இந்த ஏக்கம் மறைந்துவிடுவது ஸஹஜம். ஆனால் லுத்ப்-உன்னிஸாவுக்கோ இந்த உணர்ச்சி அதிகரிக்கத் தொடங்கியது. மொகல் ஸிம்ஹாஸனத்தின்மீது அவளுக்கிருந்த பற்றுதல் அற்றுப்போனதற்கு இதுவே காரணம்.காமக்கனல் எரிக்கும் இடமாகவே அவளுக்குத் தோற்றியது அந்த ஸிம்ஹாஸனம். நரகமொத்த அரச வாழ்வைத் துறந்து தான் வரித்த புருஷனையும், தன் இனத்தவர்களையும் அடைய அவள் மனம் அலைபாய்ந் தது. அவள் உள்ளத்தைக் கவர்ந்தவன் நவகுமாரனே!

அவனை நம்பியே, லுத்ப்-உன்னிஸா, தன் எண்ணங் களை அவலமாக்கிய மெஹெறின் கபடத்தை அறிந்தும் துயர்கொள்ளவில்லை. இதனாலேயே அவள் ஆக்ராவி

லிருக்கும் தன் உடைமைகளைக் காப்பாற்றிக்கொள்ள யாதொரு முயற்சியும் செய்யவில்லை.

நவகுமாரனை அடையும் நிமித்தமாக அவள் பாதுஷா போன்றவரின் உறவையும் அறுத்துக்கொண்டு விட்டாள்.

லுத்ப்-உன்னிஸா ஸப்தக்ராமத்திற்கு வந்தாள். ராஜவீதியில் நடுநாயகமான ஒரு மாளிகையைத் தனக்கென அமர்த்திக்கொண்டாள். பொன்னும் வெள்ளியும் மலிந்து ஆளும் அம்பும் சூழ்ந்து ஸுகபோகங்கள் திகழும் மணிமாடமொன்று தோன்றவே வீதியில் செல்வோர் திகைப்புற்றனர். மஹலின் ஒவ்வோர் அறையும் கண்களைக் கவர்ந்தது. நறுமலர்க் குவியல் எங்கே பார்த்தாலும். அத்தர் பன்னீர் இவற்றின் சுகந்தம் எவ்விடத்திலும் கமழ்ந்து வீசியது. பொன்னாலும் வெள்ளியாலும் கஜ தந்தத்தினாலும் ஆன பொருள்கள் அவ்வீட்டை அலங்கரித்தன.

இவ்வாறு சோபிக்கும் ஒரு சிங்கார அறைதனில் லுத்ப்-உன்னிஸா முகவாட்டத்துடன் சுகாசனம் ஒன்றில் வீற்றிருந்தாள். மற்றோர் ஆசனத்தில் நவகுமாரன். ஸப்தக்ராமத்திற்கு வந்தபிறகு நவகுமாரனை இருதரமே லுத்ப்-உன்னிஸா சந்தித்தாள். அவளுடைய மனோரதம் அதனால் எவ்வளவுதூரம் நிறைவேறியதென்பதைப் பின்நிகழ்வதைக்கொண்டு ஒருவாறு அறியலாம். நவகுமாரன் சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு, "ஆனால் நான் வருகிறேன். என்னை இனிமேல் கூப்பிடாதே" என்றான்.

"போகவேண்டாம்; சற்று நில்லுங்கள். நான் சொல்வதை இன்னும் சரியாகக்கூடக் கேட்டுக்கொள்ள வில்லையே?" என்ருள் லுத்ப்-உன்னிஸா.

பின்னும் சற்று நாழிகை பொறுத்திருந்தான் நவகுமாரன். ஆனல் லுத்ப் எதுவும் பேசவில்லை. அவளை நோக்கி, "இன்னும் என்ன சொல்லவேண்டும்?" என்ருன். இதற்கு மறுமொழி பகரவில்லை லுத்ப். கண்ணிமைகள் வெம்பனி தீர்க்க மௌனம் பூண்டு துயரின் உருவாகவே விளங்கினுள்.

அவளது நிலையைக் கவனித்ததும் நவகுமாரன் அவ்விடத்தை விட்டு அகல எழுந்திருந்தான். அப்போது லுத்ப் அவனுடைய உத்தரீயத்தின் நுனியைப் பற்றிக் கொண்டாள். சற்று மனக்கசிவுடன் நவகுமாரன், "என்ன, சொல்லேன்?" என்ருன்.

"இந்த உலகத்தில் நீங்கள் விரும்பக்கூடியதொன் றுமே இல்லையா? பணம், பாக்கியம் காதல் கேளிக்கை இவை ஒன்றுமே உங்களுக்குப் பிடிக்காதா? இதற்குப் பிரதியாக நான் எதுவும் பெற விரும்பவில்லை. என்னை உங்களுக்கு அடிமை ஆக்கிக்கொள்கிறேன். பத்தினி யாக இருக்கும் அதிர்ஷ்டம் இராதுபோனுலும், அடியாளாக இருக்கிறேனே" என்று கெஞ்சினுள் லுத்ப்.

"நான் எளிய பிராம்மணன். இந்த ஜன்மத்தை வறுமையிலேயே கழிப்பேன். சொத்துக்கு ஆசைப் பட்டு, ஜாதி கெட்டவளான உனக்குக் கள்ள புருஷன் ஆகச் சொல்லுகிருயா?" என்ருன் நவகுமாரன்.

கள்ளபுருஷன்! லுத்ப்-உன்னிஸா தன் மனைவி யென்று நவகுமாரனுக்குத் தெரியாது. லுத்ப் உளம் வெதும்பித் தலை குனிந்துகொண்டாள். அவள் பிடியி லிருந்து தன் அங்கவஸ்திரத்தை மெல்ல வாங்கிக் கொண்டான் நவகுமாரன். லுத்ப்-உன்னிஸா மீண்டும் அதன் முனையைப்பற்றி, "நல்லது, அது போகட்டும். ஆண்டவனுடைய சித்தம் அவ்வாறு இருக்கும்போது நான் என் செய்வேன்? என் எண்ணமெல்லாம் பாழடையட்டும். நான் வேறு எதுவும் யாசிக்கவில்லை. நீங்கள் இந்தப் பக்கம் வரும்போது, அடிமை ஒருத்தி இருக்கிறாளே என்ற கவனம் வந்து முகம் காட்ட வேண்டும். உங்களைக் கண்ணாறக் காணும் இன்ப மாவது நான் அடையக்கூடாதா?"

ந :—நீயோ முஸல்மான்; பிறனுடைய பெண் டாட்டி. இங்கே நின்று உன்னுடன் உரையாடுவது கூட மஹா பாபம். இனிமேல் உன் முகத்தில் விழிக் கவே மாட்டேன்.

சிறிது நேரம் நிச்சப்தம். லுத்ப் - உன்னிஸாவின் மனத்துள் கடும்புயல் குமுறியது. சிலையென அசைவற்று இருந்தாள். நவகுமாரனுடைய உத்தரீயத்தின் நுனி மெல்ல நழுவியது, அவளுடைய விரல்களிலிருந்து. "இருக்கட்டும் போங்கள்" என்றாள் லுத்ப்.

நவகுமாரன் போக யத்தனித்தான். அவன் இரண் டடி முன்னே எடுத்து வைத்ததும் லுத்ப் - உன்னிஸா பூமலிந்த மரமென அவனுடைய காலடியில் வீழ்ந்தாள். தன் ஆம்பல் வள்ளிக் கைகளினால் அவனுடைய இரு பாதங்களைப் பற்றிக்கொண்டு உருக்கம் தொனிக்க,

'இரும்பா உமது நெஞ்சம்? ஆக்ராவின் இன்ப வாழ்வையும் உதறித் தள்ளிவிட்டு உம்மிடத்தில் மையலாகி இங்கு வந்தேன்; என்னை வெறுத்துத் தள்ளாதீர்" என்றாள்.

"மறுபடியும் ஆக்ராவுக்குத் திரும்பிச் செல். என்மேல் உள்ள ஆசையை விட்டொழி" என்றான் நவகுமாரன்.

"இந்த ஜன்மத்தில் இல்லை" என்று இயம்பி லுத்ப்-உன்னிஸா சரேலென எழுந்து நின்றாள். செருக்குடன், "உங்களை நான் விடேன்" என்று சொல்லும்போது எழிலுடன் விளங்கியது அவள் வதனம். நவகுமாரனையே நோக்கின அவளுடைய கலக வேல் விழிகள். அவள் புவன மோஹினியாகவே காட்சி தந்தாள். எதையும் பொருட்படுத்தாத செருக்கு அவள் இதயத்தில் வேரூன்றி நின்றது. மொகல் ஸாம்ராஜ்யத்தையே ஆட்டிவைக்க விரும்பிய அந்நெஞ்சின் துணிவு இன்று காதல் நோயால் வாடும் அவள் உடலில் மீண்டும் சஞ்சரித்தது. நெற்றிக் கட்டில் நரம்பு தடித்து அவளது முகத்தைப் பின்னும் கம்பீரமாக்கியது. ஒளி வீசும் அவளுடைய கண்கள், ரவியின் கிரணங்கள் தோய்ந்த அலைகடல்போல் தோன்றின. நாசித்துவாரங்கள் துடித்தன. வருபுனலின் எதிரே செல்லும் வளை கழுத்து அன்னம் போலவும், காலில் மிதிபட்டுப் படமெடுத்துச் சீறியெழும் நச்சரவம் போலவும் லுத்ப்-உன்னிஸா சிரம் தூக்கி, "இந்த ஜன்மத்தில் இல்லை. நீங்கள் எனக்கே உரியவர்" என்றாள் மூச்சு வாங்க.

லுத்ப்-உன்னிஸாவின் உக்கிர ரூபத்தைக் கண்டதும் நவகுமாரன் திடுக்கிட்டான். வர்ணனைக்கு அடங்

காத அவளது வனப்பை அன்று பார்த்ததுபோல் என்றுமே அவன் பார்த்ததில்லை. பேரிடிக்குமுன் இலங்கும் மின்னலைப்போல் கண்களைக் கூசச்செய்யும் அழகு அது; அதோடு பயத்தையும் தருவது. நவகுமாரன் மதிமருண்டு நின்றான். அவள் கொண்டிருந்த கம்பீரத் தோற்றம் வெகு நாட்களுக்குமுன் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை அவனுக்கு நினைவூட்டியது. நவகுமாரன் தன் முதல் மனைவியான பத்மாவதியை வெறுத்து அவளைப் பள்ளியறையிலிருந்து வெளியே தள்ளும்போது, இதே காய்ந்த சினம் வெளிப்பட்டது அவளது நயனக் கொள்ளையிலும். இவ்வாறே அவளது நாசியும் துடித்தது. இவளைப் போலவே அவளும் ஒரு பார்வை பார்த்து எழிலுடன் நின்றாள் அன்று. அன்றைக் காட்சிக்கும் இன்றைக் காட்சிக்கும் ஓர் ஒற்றுமை இருப்பதைக் கண்டான் நவகுமாரன். ஸந்தேகம் மூண்டவனாய் அடங்கிய குரலில் அவன் லுத்ப் - உன்னிஸாவை, " நீ யார் தெரியவில்லையே ?" என்றான்.

கண்களிலுள்ள பாவை விரிய லுத்ப்-உன்னிஸா, " நான்தான் பத்மாவதி !" என்றாள்.

இதைக் கூறியதும் பதிலை எதிர்பார்க்காமல் அவள் அவ்வறையை விட்டு அகன்றாள்.

நவகுமாரனும், பல சந்தேகங்கள் மனத்திடைக் குழும தன் வீட்டை நோக்கி மெல்ல நடந்தான்.

7

ஊர்ப்புறத்தில்

"எய்தப் போதுவ லேத மாயினும்
ஐயமின் றினி யான்றுணி கருமம்" — பெருங்கதை

தன்னறைக்குள் சென்று லுத்ப் - உன்னிஸா கதவை மூடிக்கொண்டாள். இரண்டு நாட்கள் வரை அறையினின்று அவள் வெளியில் வரவே இல்லை. இந்த இருதினங்களில் ஒரு காரியத்தை நடத்த அவள் துணிவு கொண்டாள். கதிரவன் சினந்தணிந்த அந்திப்பொழுது. லுத்ப்-உன்னிஸா பேஷ்மனைக் கூப்பிட்டு அவளுடைய உதவியின்பேரில் புதுவிதமான உடைதரித்துக்கொண்டாள். பெண்ணென்று கண்டுபிடிக்க முடியாதபடி உரு மாறினாள். கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டே அவள் பேஷ்மனை விளித்து, " இந்த வேஷத்தில் என்னை யாராவது கண்டுபிடிப்பார்களா?" என்றாள்.

" முடியவே முடியாது" என்றாள் பேஷ்மன்.

லு :—நான் புறப்படுகிறேன். எனக்குத் துணையாக யாரும் வரவேண்டாம்.

பேஷ்மன் தயங்கிக்கொண்டே, " என்னமோ அடிமைப்பெண் சொல்லுகிறாளே என்று எண்ண வேண்டாம்" என்று ஆரம்பித்தாள்.

"என்ன, சொல்லு?"

"எதற்காக இந்த வேஷம், அம்மா?"

"நவகுமாரரைக் கபாலகுண்டலையை விட்டுப் பிரித்து விடுவதற்கே; இல்லாவிட்டால் அவர் என் வசப்படுவ தேது?"

"பிபி! எந்தக் காரியத்தையும் நன்ருக யோசித்துச் செய்யுங்கள். நீங்கள் போகிற இடமோ முன்பின் அறியாத இடம். வழியில் காடு. மேலும் இருட்டி வருகிறது. ஒன்றியாகப் போகிறீர்களே? எதற்கும் உஷாராக இருங்கள்."

பேஷ்மனுடைய சொல்லை அசட்டைசெய்து லுத்ப்-உன்னிஸா வெளிக் கிளம்பிஞள். மனிதர் நடமாட்டமே இராத ஊர்ப்புறத்திலே நவகுமாரனுடைய வீடு. அதை நோக்கி நடந்தாள். அவ்விடத்தை அணுகும்போது பொழுதுபோய் இருட்டிவிட்டது. நவகுமாரன் வீட்டிற்குச் சிறிது தூரத்தில் அடர்ந்த காடொன்று உண்டென நேயர்கள் முன்பே அறிந்திருப்பார்கள். அதன் எல்லையில் ஒரு மரத்தடியில் வந்து தங்கிஞள் லுத்ப். தான் செய்யத் துணிந்த ஸாஹஸமான வேலையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிஞள். எதிர்பாராத வண்ணம் அவளுடைய சூழ்வினைக்கு உதவியும் கிடைத்தது.

லுத்ப்-உன்னிஸா பதுங்கியிருந்த இடத்திற்கு அணித்தாக மனிதர் பேசும் அரவம் கேட்டது. நாற்புறமும் கூர்ந்து கவனித்தாள். வனத்தின் மத்திய பாகத்தில் வெளிச்சம் தென்பட்டது. லுத்ப்-உன்னிஸா பெண்ணுயிருந்தாலும் ஆடவர்களைவிடத் திடமுடைய

நெஞ்சினள். ஒளிக்கொழுந்து தோன்றும் இடத்தை நண்ணினாள். மரத்தின் மறைவிலிருந்து அங்கே நடப்பதைக் கவனித்தாள். அது ஹோமத் தீ விடும் வெளிச்சமெனத் தெரிந்தது. தன் செவியில் விழுந்த சப்தத்தைக் கொண்டு அது மந்திர உச்சாடனமெனத் தெளிந்தாள். உச்சாடனத்தின் நடுவே அடிக்கடி ஒரு சொல் ஓர் ஆளின் பெயராக இருந்தது. அதைச் செவியுற்ற மாத்திரம் லுத்ப் - உன்னிஸா ஹோமம் வளர்த்தும் மனிதன் அருகே சென்று அமர்ந்தாள்.

நேயர்களே! அவ்விடத்திலேயே அவளை விட்டு விடுவோம்.

நாம் கபாலகுண்டலையைச் சந்தித்து வெகு காலமாயிற்று. அவளுடைய சங்கதி ஒன்றுமே தெரியவில்லை. அதைத் தெரிந்துகொள்வது அவசியமல்லவா?

மூன்றாவது பாகம் முற்றிற்று.



நான்காம் பாகம்

இடையுரை

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" — குறள்

"சாதலும் பிறத்த லுந் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்"
— சிந்தாமணி

இதுவரை கதையைப் பின்பற்றியதிலிருந்து வாசகர்கள் அதன் போக்கை ஒருவாறு ஊகித்துக் கொண்டிருக்கலாம். ஓவியன் சித்திரம் வரைவதன்முன் சலாகையினால் வெறும் கோடுகளையே கீற்றுகிறான். பிறகு ரேகைகளை ஒன்றாகச் சேர்த்து ஓர் உருவமாக்கி வர்ண விந்யாஸங்களைத் தீட்டுகிறான். நாமும் அவ்வாறே கதையின் பல அம்சங்களைத் தனித்தனியாக மனத்துள் வரைந்து கொண்டோம். இப்போது அவற்றை இணைத்து அதற்கு நிழலும் ஒளியும் தருவோம்.

சூரிய வெப்பத்தினால் நீர் ஆவியாகிறது. அதிலிருந்து மேகம்; அந்நிலையில் அதை யாரும் கவனிப்பதில்லை. பிறகு துளித்துளியாக மேகங்கள் பரவுகின்றன. இருள் நிற வானில் நெய்யணி குஞ்சரம்போல் நீருண்ட முகிற் கூட்டம் முழங்குகின்றன. எச் சாரும் சரேலென மின்னல் பாய்கிறது. செருமன்னர் சேனைபோல் மழையும் இறங்குகிறது. கபாலகுண்டலையின் வாழ்க்கையும் கார் வானத்

தின் இயல்புடைய தெனலாம். அவளது வாழ்வில் ஓர் இருண்ட புயல் கடுகி வருவதன் அறிகுறியை இது காறும் கவனித்துவந்தோம்.

'அதிர்ஷ்டம்' என்கிறார்களே அதில் நேயர்களுக்கு நம்பிக்கை உண்டா? 'தலையெழுத்து' என்பதை நான் இங்கே குறிப்பிடவில்லை. இதன்மேல் பழிசுமத்திவிட்டு, வினைமேல் மனத்தைச் செலுத்தாதவர் சோம்பேறிகள் அல்லவா? ஆனால் பின்னால் நிகழப்போவதற்குப் பூர்வத்தி லிருந்தே ஏற்பாடுகள் நடக்கின்றன. அதன் விளைவு மனிதனால் தடுத்தற்கரிது. இதை நேயர்கள் ஒப்புக் கொள்வார்களா? எல்லா நாட்டிலும் எக்காலத்திலும் தீர்க்க தரிசனம் உடையவர்கள் இதன் உண்மையை உணர்ந்திருக்கிறார்கள்.

இந்த 'அதிர்ஷ்ட' வாதத்தை அடிப்படையாகக் கொண்டே ஆதிகிரேக்க நாடகங்கள் அமைந்துள் ளன. நுண்ணறிவினரான ஷேக்ஸ்பியரின் 'மாக்பெத்' (Macbeth) எனும் நாடகத்திற்கு இதுவே மூலக் கொள்கை.வால்டர் ஸ்காட்டின் (Walter Scott) 'பிரைட் அப் லாமர்மூர்' (Bride of Lammermore) என்ற கதையும் இதையே அவலம்பித்து இருக்கிறது. கேடே (Goethe) போன்ற ஜெர்மன் கவிவாணர்கள் இதையே தம் காவியங்களின் மூலமாக உலகிற்கு அறிவித் துள்ளனர். 'பேட்' (Fate): 'நெஸஸிடி' (Necessity) இன்னும் வெவ்வேறு பெயரால் ஐரோப்பிய தத்துவ ஞானிகளிடையே அபிப்பிராய பேதம் உண்டாவதற்கு இந்த 'அதிர்ஷ்டமே' காரணமாக நிற்கிறது.

நம் நாட்டிலோ, இதை அறியாதவர்களே இல்லையெனலாம். கௌரவர்களின் அழிவை விவரிக்கும் பாரதம் இயற்றிய வியாஸ கவியும் இந்த 'அதிர்ஷ்ட' வாதத்தைப் பின்பற்றியவர்தாம். கௌரவ பாண்டவர்களின் சிறு வயது விளையாட்டுக்களில் கௌரவர்களின் நாசத்திற்குரிய ஏதுக்கள் மங்கலாகத் தென்படுகின்றன. கிருஷ்ணபரமாத்மா இவ்வல்வினையின் அவதாரமாக இருக்கிறார். திருதராஷ்டிரன் புலம்பும் கட்டத்தில் கவி அதைத் தெளிவுபடச் சொல்லுகிறார். தத்துவ ஞானிகளிடையே இந்த 'அதிர்ஷ்டம்' என்ற சொல் அதிகமாக அடிபடுகிறது. பகவத்கீதை பூரா'வும் இந்த வாதத்தையே எதிரொலிக்கின்றது. பலர் இதைத்தான் 'விதியின் செயல்' என்று கருதிப் பணிகின்றனர். சில பேர் இதை* 'லலாட லிபி' (தலை எழுத்து) என்று நினைத்துக்கொண்டு விசாரமில்லாமல் இருக்கிறார்கள்.

ஏதோ ஒரு கண்காணாத தெய்வமோ, அமானுஷிகமான சக்தியோ நம்முடைய காரியங்களை இயற்றுகிறதென்று நான் கூறவில்லை. கடவுள் இல்லை என்பாரும் 'அதிர்ஷ்டம்' என்று ஒன்று உண்டென்கிறார்கள். வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு விஷயமும் நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கையின் நியமத்தாலும் உடன் பிறந்த குணத்தினாலுமே விளைவது. மனிதனின் மனப்பான்மை இயற்கையின் வசப்பட்டதே. ஆதலால் 'அதிர்ஷ்டம்' எனப்படுவது இவ்விரண்டின் செயற்கையினாலே ஏற்படு

---

* கவிகள் கூறும் 'Destiny' தத்துவ ஞானிகளின் 'Fate' - ஓரே பொருளின் வெவ்வேறு உருவங்கள், வெவ்வேறு பெயரல்ல.

4100

கிறது. ஆனால் இவ்விரண்டும் சேர்வதற்குக் காரணம் மனிதன் அறிவுக்கு எட்டாத விஷயம். ஆராயமுடியாத இந்நிலையைத்தான் ‘அதிர்ஷ்டம்’ என்கிறோம்.

வாசகருள் சிலர் இதைப் படித்ததும் சப்பிட்டுப் போவார்கள். விதியை அனுசரித்துக் கதைக்கு இவ்வாறான முடிவு கட்டுவது விரும்பத்தக்கதல்ல ; ஆசிரியர் நினைத்தால் இதன் போக்கை வேறுவிதமாக மாற்றவும் கூடுமே என்று அவர்கள் கூறலாம். இதற்குப் பதில் ‘அதுவும் விதியின் செயலே. அதைத் தடுப்பவரும் உளரோ? கதாசிரியனால் மட்டும் இயலுமா? ஆரம்பத்திலேயே இதன் வித்து நன்றாக ஊன்றிவிட்டது. இது முளைத்தே தீரும். இதற்கு இடையூறு செய்தால் உண்மைக்குப் பங்கமே உண்டாகும்.’

இப்போது நாம் ‘அதிர்ஷ்டம்’ காட்டும் வழியிலேயே செல்வோம். நூல் நூற்றாய்விட்டது. அதை முடிபோடுவது நமது வேலை.

1

பள்ளியறையில்

" சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
*நிறைகாக்கும் காப்பே தலை " — **குறள்***

லுத்ப் - உன்னிஸா ஆக்ராவுக்குச் சென்று அங்கிருந்து ஸப்தக்கிராமம் திரும்புவதற்கு ஏறக்குறைய ஒரு வருஷ காலமாயிற்று. கபாலகுண்டலை நவகுமாரனுடன் இல்வாழ்க்கையைத் தொடங்கி அதே கால அளவு ஆயிற்று. லுத்ப் - உன்னிஸா அவ்விருள் மாலையில் வனத்துள் புகுந்த சமயம் கபாலகுண்டலை தன் சயன அறையில் சிந்தையில் ஆழ்ந்து கிடந்தாள். ஸமுத்திர தீரத்தில் அவிழ்ந்துபுரளும் கூந்தலுடன் உடலில் அணிகலமின்றி நேயர்கள் பார்த்த கபாலகுண்டலையாக இப்போது அவள் இல்லை. சியாமாஸுந்தரியின் வாக்குப் பலித்து விட்டது. புருஷனுடைய பரிசம் பட்டதும் தவப்பெண்ணான கபாலகுண்டலை ஸம்ஸாரத்திற்கு உகந்தவளாயினள். வண்டெனக் கருங்குழற் கற்றை பின்னப்பட்டு அவளது முதுகுப்புறத்தை அழகுறச் செய்தது. கூந்தலைப் பின்னியிருக்கும் விதத்தில் கலைத்திறமை விளங்கியது. குழலைப் பலவகையாக வாரிமுடிப்பதில் கைதேர்ந்தவள் சியாமாஸுந்தரி. சிறு சிறு அலைகளாகத் தோன்றும்படி

கிரீடம்போன்று அவளது முகமண்டலத்தைப் பொலி வுறச் செய்யும் அளகம். கட்டிற்கு அடங்காத இரண் டொரு மயிர்ச்சுருள் குறு வேர்வையினுல் தோய்ந்து நெற்றிக் கட்டில் படிந்திருந்தது. கபாலினியின் இரு செவிகளிலும் பொற்குழைகள். அவளது கழுத்தில் தொங்கும் சுவர்ணகண்டி அவளது மேனிநிறத்தோடு கலந்தபோது பாதிமதி ஒளிரும் இரவில் மலரும் பூவின் தோற்றம் கொண்டது. அவள் இடையில் வெள்ளைக் கலை உடுத்தியிருந்த காட்சி, தண் மதியம் கதிர் விரிக்கும் வானிடைத் துல்லிய மேகத்தை நினைப்பூட்டியது. முன் போலவே அவளது தேககாந்தி ஒள்ளிய நிலவையே ஒத்திருந்தாலும், சற்றுச் சோபை குன்றியே விளங்கியது, நிர்மலமான ஆகாயத்தை ஒரு கருமுகில் கறைபடுத்து வது போன்று. கபாலகுண்டலை தன் அறையில் தனி யாக இருக்கவில்லை. அவளுடைய பாங்கியான சியாமா ஸுந்தரியும் கூடவே இருந்தாள். இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். அந்த ஸம்பாஷணையின் ஒரு பகுதி யைக் கதையைப் படிப்போர் கவனிக்கவேண்டும்.

"மாப்பிள்ளை எத்தனை நாள் தங்குவதாக உத் தேசம்?" என்று சியாமாவைக் கேட்டாள் கபால குண்டலை.

"நாளைக்குச் சாயந்தரமே போய் விடுவார் போலிருக்கு. ஆகா, இன்று அந்தப் பச்சிலைமட்டும் எனக்குக் கிடைத்தால் அவரைப் போகவிடாமல் வசப் படுத்திக் கொள்வேன்! ஆனுல் என் மனோரதமும் ஈடேறுமா? நேற்று இரவு அந்த இலையைத் தேட வெளியே சிறிது தூரம் சென்றதற்கே உதையும் குத்தும்

வேண்டிய மட்டும் கிடைத்ததம்மா எனக்கு. இன்றைக்குப் போய்த் தேடலாமென்ருல் எனக்குத் தைரியமில்லையடீ" என்ருள் சியாமா.

கபாலகுண்டலை :—பகலில் அந்தப் பச்சிலையைப் பறித்துவந்தால் என்ன ?

சியாமா:—ஐயோ, அப்படியிருந்தால் இந்தச் சங்கடமெல்லாம் படுவானேன் ? பகலில் எடுத்துவந்தால் பலிக்காதாம். தலைமயிரை விரித்துக் கொண்டு அதைக் கிள்ளவேண்டுமாம். மிருணு, இதெல்லாம் உன் மனத்திற்குள் இருக்கட்டும்.

கபால :—இன்று காலை நான் அந்தச் செடி இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டேன்...நீ போக வேண்டாம் ; நீ சொல்லுகிறபடியே தனியாகச் சென்று அதைப் பறித்துக்கொண்டு வருகிறேன் பார்.

சியாமா :—இத்தனை தினங்கள் இருந்ததுபோல் இருக்கிறேன். நீ ஒன்றியாக, அதுவும் நடு ராத்திரியில் அந்தமாதிரி இடங்களுக்குப் போகவேண்டாமடீ. என் தலை எழுத்துப்படி ஆகிறது.

கபால :—அதற்காக நீ கவலைப்படாதே. ராத்திரி எந்த வேளையிலும் வெளியே செல்ல எனக்கு அச்சம் இல்லை. சிறு வயதிலிருந்து நான் அப்படிச் செல்லப் பழகியிருக்கிறேன். அந்தமாதிரி ஒரு தைர்யம் இராது போனல் நான் இங்கு வந்திருக்க முடியுமா ?

— அதற்காகச் சொல்லவில்லை ; ராத்திரியில் தனியாகக் காட்டில் உன்போல் குடித்தனம் பண்ணும் பெண்ணை யாராவது பார்க்க நேரிட்டால் நன்ருக இராதே. இரண்டுபேரும் சென்று நேற்றுத்தான் வசவு

வாங்கிக்கொண்டோம். நீ தனியாகச் செல்வது தெரிந்தால் உன்னை லேசிலா விடுவார்கள் ?

— குடி முழுகிப் போய்விடாதே. இராவேளையில் வெளியே செல்வதனால் வியபசாரதோஷம் வந்துவிடுமா என்ன ?

— நான் அப்படிச் சொன்னேனா? நம்மைப்போலவா எல்லோரும் இருப்பார்கள்? சில விஷமக்காரர்கள் இதைப் பிரமாதப்படுத்தி ஊரெங்கும் விதை விதைப்பார்களே !

— சொல்லிக்கொண்டு திரியட்டுமே ; நாம் என்னவோ உண்மையாக இருக்கிறோம். நம்முடைய நேர்மைக்கு ஒரு கேடும் வராதடீ.

— வருமென்று சொல்லவில்லை. ஆனால் உன்மேல் யாராவது அடாப்பழி சுமத்தினால் என் மனம் கேட்காதம்மா.

— வீண் மனக்கிலேசத்திற்கு இடம் தராதே.

— அப்படி இருக்கமுடியுமா ? அண்ணாதான் என்ன நினைப்பார் ? அவர் மனம் நோவுமே.

கபாலகுண்டலை குளிர்ந்த பார்வையுடன் சியாமாவை நோக்கி, “ஒன்றுமிராததற்கு மன வருத்தங் கொண்டால் நான் என்ன செய்வது ? விவாகம் ஸ்திரீகளை அடிமைகளாக்க ஒரு வழி என்று தெரிந்திருந்தால் நான் விவாகமே செய்துகொண்டிருக்க மாட்டேன்” என்றாள்.

அதற்குமேல் அவள் சொன்னதைச் சியாமா ஸுந்தரி நன்றாகக் கேட்டுக்கொள்ளவில்லை. தன் வேலையைக் கவனிக்க எழுந்து சென்றாள். கபாலகுண்டலையும் வீட்டுக் காரியத்தில் மனத்தைச் செலுத்தினாள்.

வேலையெல்லாம் முடிந்ததும் பச்சிலையை எடுத்து வர வீட்டினின்று கிளம்பினுள். ஊர் தூங்கும் வேளை. நல்ல நிலா. வெளியறையில் நவகுமாரன் இன்னும் கண்ணயரவில்லை. கபாலகுண்டலை வெளியே செல்வதைச் சாலேகத்தின் மூலமாகக் கண்ணுற்ருன். அவன் எழுந்துவந்து மிருண்மயியின் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

"என்ன ?" என்ருள் கபாலகுண்டலை.

"எங்கே போகிருய் இந்த நள்ளிரவில் ?" என்ருன் நவகுமாரன்.

இவ்வாறு அவளை விசாரிக்கும்போது அவனது குரலில் சந்தேகத்தின் குறிப்புச் சற்றும் ஒலிக்கவே இல்லை.

"சியாமா தன் கணவனை வசியப்படுத்த ஒரு பச்சிலை வேண்டுமென்ருள், அதைக் கொண்டுவரவே நான் போகிறேன்" என்ருள் கபாலினி சற்றும் தயங்காமல். நவகுமாரன் இன்குரலுடன், ' நல்லது. நேற்றுத்தான் இருவரும் போனீர்களே, இன்றைக்குமா போகவேண்டும் ?' என்ருன்.

"நேற்று அந்தச் செடி அகப்படவில்லை. இன்று தேடிப் பார்க்கவேண்டும்."

நவகுமாரன் இதமாகவே, "அதை மத்தியான வேளையில் தேடக்கூடாதா ? இந்தப் பாதி ராத்திரியிலேயா தேடவேண்டும் ?" என்ருன்.

"பகலில் கொண்டுவந்தால் அந்தப் பச்சிலை புலிக்காதாம்."

"அந்தச் செடியின் பெயரைச் சொன்னுல் நான் போய் எடுத்துவருகிறேன்."

"செடியைப் பார்த்தால்தானே தெரியும். எனக்கு அதன்பெயர் தெரியாது. மேலும் புருஷர்கள் எடுத்து வந்தால் அது உபயோகப்படாது. தலைமயிரை விரித்துப் போட்டுக்கொண்டு பெண்கள் எடுத்தால்தான் பலன் அளிக்குமாம். இதரர்களுக்கு நான் உதவி செய்வதை நீங்கள் தடுக்கவேண்டாம்."

இம்மொழியைக் கபாலகுண்டலை சற்று வருத்தத் துடனேயே கூறினாள். அதற்குமேல் நவகுமாரன் தார்க் காணிக்கவில்லை. நானும் துணையாக வருகிறேனே" என்றான்.

காபாலகுண்டலை அகம்பாவத்துடன், "என்மீது நம்பிக்கை இராவிட்டால் வாருங்களேன்" என்றாள்.

நவகுமாரனால் இதற்குப் பதில் சொல்ல முடிய வில்லை. பெருமூச்சுடன் கபாலகுண்டலையின் கைகளை விட்டு விட்டுத் தன் அறையை அடைந்தான். கபால குண்டலை தன்னந்தனியே அவ்விருண்ட கானகத்துள் நுழைந்தாள்.

2

கானகத்தே

" நிலவே, நீனிற விசும்பிற் பல்கதிர் பரப்பிப்
பான்மலி கடலிற் பரந்துபட் டன்றே
யானே,......புலம்புகொ ளவலமொடு
கனையிருங் கங்குலுங் கண்படை யிலனே "—**நற்றிணை**

ஸப்தக் கிராமத்தின் ஒருபுறம் காடு அடர்ந்த இடமென்று முன்பே கூறியுள்ளோம். ஊரின் எல்லைக் குள்ளேயே இருந்தது அந்த வனம். கபாலகுண்டலை துணையின்றிக் கருங் கானத்துள் பச்சிலையைத் தேடச் சென்றாள். நிச்சப்தமான நடு இரவு. இனிமை பயக்கும் இளவேனிற்காலம். ஆகாயத்தில் குளிர்ந்த கிரணங் களைப் பொழியும் சந்திரன், அன்னத்தின் தூவிபோன்ற சிதறிய மேகங்களுக்கு இடையே அடிக்கடி மூழ்கி மூழ்கி எழுந்துகொண்டிருந்தான். பூமியில் ஓஷதிகள் அம்ருதமயமான அவ்வெண்ணிலாவை மௌனமாகப் பருகிக்கொண்டிருந்தன. உள்ளம் குளிர்ந்த அவற்றின் தளிர்கள் நிலவொளியில் பளபளத்தன. இலை செழித்த கொடிகளின் மறைவில் சிறு மலர்கள் முறுவல் செய் தன. பக்ஷி மிருகங்களின் அரவம் எங்குமே கேட்க வில்லை. எப்போதோ ஒருசமயம் எங்கோ துயில் கலைந்த ஒரு பறவை சிறகை அடித்துக்கொள்ளும். பாம்போ

பூச்சியோ சருகுகள் ஊடே சலசலத்துச் செல்லும். நடு நடுவே வெகுதூரத்தில் ஊர்த்தெருவில் நாய்களின் குரைப்பு. காற்றே இல்லையென்று சொல்லமுடியாது. உடலுக்கு உணர்வு தரும் மந்தமாருதம் வீசியது. மரத்தின் உச்சாணிக் கிளைகளில் இலைகள் அசையும் ஓசை. மரங்களிலிருந்து தரைமீது புரண்டிருந்தன பைங்கொடிகள். நீலமான வானக்கடலில் மேக ஓடங்கள் மிதந்து நிதானமாக ஒரு நோக்கமுமின்றிச் சென்றுகொண்டிருந்தன. சிறு தென்றல் வீசும்பொழுது பழைய இன்ப நினைவுகள் ஸஹஜமாகவே எவர் மனத்திலும் மெதுவாக எழுவதுண்டு. கபாலகுண்டலைக்கும் இந்த அநுபவமே ஏற்பட்டது. மணற் குன்றின்மீது நின்றபோது திவலை ஏந்திய கடற் காற்றுத் தன் கூந்தலுடன் விளையாடினது அவள் கவனத்திற்கு வந்தது. கடலெனப் பரந்த நெடுவானை அவள் நோக்கும் தருணம், அது அன்று கண்டுகளித்த நீலவாரிதியை அவளுக்கு நினைவுறுத்தியது. பழைய ஞாபகங்கள் வரவே மெய்ம்மறந்தவளாய்ச் சென்றுகொண்டிருந்தாள் கபாலகுண்டலை.

வேறுபட்ட சிந்தனையில் தான் குறித்துச் செல்லும் காரியத்தைக்கூட அவள் மறந்தாள். அவள் செல்லும் பாதை வரவரக் குறுகி, முட்புதரில் கலந்துவிட்டது. தலைக்குமேல் மரங்களின் கிளைக்கூட்டம் சந்திரிகையை மூடிவிட்டது. அந்த மங்கலில் வழி எதுவென்று தெரியவில்லை. பாதை புலப்படாது போகவே கபாலகுண்டலையின் ஆழ்ந்த சிந்தனையும் கலைந்தது. இங்குமங்கும் நோக்கினாள்; அந்த இருண்ட அடவியுள் ஒரு வெளிச்சம் தெரிந்தது. லுத்ப்-உன்னிஸா பார்த்த ஒளியே

அது. இந்தமாதிரிச் சமயங்களில், இத்தகைய காட்சிகளைக் கண்டிருந்த பழக்கத்தினுல் கபாலகுண்டலை அச்சம் சற்றும் கொள்ளவில்லை. அதற்கு மாருக அதை ஆராய அவள் மனம் தாவியது. மெல்லவே தீபச் சுடரை நோக்கிச் சென்ருள். ஒளிவிடும் இடத்தில் எவரும் இல்லை. ஆனுல் அதற்குச் சிறிது தொலைவில், புதர்கள் நெருங்கி இருப்பதனுல், சட்டெனக் கண்களுக்குப் புலப்படாத ஓர் இடிந்த வீடு தென்பட்டது. செங்கற்களால் கட்டப்பட்ட மிகவும் சிறிய வீடு. ஓரே அறை அதனுள். உள்ளே மனிதர் பேசும் அரவம் கேட்டது. கபாலகுண்டலை ஓசை செய்யாமல் அடிவைத்துச் சுவர் மறைவில் நின்று செவி கொடுத்தாள். வீட்டை நெருங்கியதும் இருவர் ஸாவதானமாகவே வார்த்தையாடுவதை அறிந்தாள். முதலில் அவர்களுடைய பேச்சு தெளிவாகப் புரிபடவில்லை; செவிகள் ஊன்றிய பிறகே கீழ்க்கண்ட விதமான வார்த்தைகளைக் கேட்டாள் :

அவர்களுள் ஓர் ஆள், "என்னுடைய விருப்பம் கொலை...... இதற்கு உன் சம்மதம் இராத பக்ஷத்தில் உனக்கு ஸஹாயம் செய்ய முடியாது. எனக்கும் உன் உதவி வேண்டாம்" என்றும், மற்ற ஆள், "எனக்கும் நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லை; ஆனுல் அப்புறப்படுத்துவதே என்னுடைய விருப்பம். ஆனுல் இந்தக் கொலைக்கு நான் உடந்தையாக இருக்க மாட்டேன்; அவ்வாறு நடப்பதாயிருந்தால் அதற்குப் பிரதிகூலமாகவே வேலை செய்வேன்" என்றும் பேசிக் கொண்டார்கள்.

முதலில் பேசிய ஆஸாமி, "நீ சுத்த முட்டாள். உனக்கு அறிவைப் புகட்டுகிறேன் கேள். ரகஸியமான சமாசாரம் ஒன்று சொல்லுவேன். வீட்டைச் சுற்றி ஒரு தரம் பார்த்துவிட்டு வா. யாரோ மூச்சுவிடுவதுபோல் எனக்குத் தோன்றுகிறது'' என்ருன். உண்மையில் கபாலகுண்டலே இவர்களுடைய பேச்சை நன்ருகக் கவனிப்பதற்கு வீட்டுச்சுவர் ஓரமாகக் காதை வைத்துக்கொண்டிருந்தாள். பரபரப்பினுல் அவளுக்கு மூச்சு வாங்கியது.

தன் கூட்டாளியின் பேச்சை நிறைவேற்ற வீட்டிலிருக்கும் ஓர் ஆள் வெளியே வருகையில் கபாலகுண்டலே நிற்பது தெரிந்தது. நிலவொளியில் வந்த ஆள் புருஷனெனத் தெளிந்தாள் கபாலகுண்டலே. கண்டதும் நடுங்குவதா, அல்லது நிச்சலமாயிருப்பதா என்ற சங்கடமான நிலேயில் நின்ருள். வந்தவன் ஒரு பிராம்மணன்; சாதாரணமான வேஷ்டியே உடுத்திருந்தான். உடலில் அழகாகக் கொசுவிய அங்கவஸ்திரம் திகழ்ந்தது. அந்தப் பிராம்மண குமாரன் இளமையாகவே தோற்றினுன். வயது இன்னதென்று அறியவியலாத முகவிலாஸம். நங்கையரதுபோல் அழகு நிரம்பிய வதனம். க்ஷவரம் செய்து கொண்டு ஆடவர் வைத்துக்கொள்வதுபோல் அவனுடைய தலேமயிர் இல்லே. பெண்களுக்குரிய நெடுங் கூந்தலாக உத்தரீயத்தினுள் மறைந்து, கழுத்திலும், தோள்களிலும், மார்பிலும் படிந்து கிடந்தது. அவனது விசாலமான நெற்றியின் மத்தியபாகத்தை நரம்பொன்று சற்றே தடித்துச் சோபிக்கச் செய்தது. மின்னெளி நிரம்பிய இரு விழிகள் அவனுக்கு. உறையிராத பெரிய வாள் ஒன்று

அவன் கையில். இவ்வளவு அழகு வாய்ந்திருந்தும் அவனிடத்தில் பயங்கரபாவமே வெளிப்பட்டது. தங்கச் சாயலான அவனுடைய மேனியில் ஏதோ ஒரு குரூர சிந்தையின் நிழல் படிந்திருந்தது. உள்ளத்தை உருவும் அவ் வாலிபனுடைய கண்பார்வை கபாலகுண்டலேக்குப் பீதியை விளைவித்தது.

இருவரும் ஒருவரை யொருவர் க்ஷணநேரம் பார்த்துப் பிரமித்து நின்றனர். கபாலகுண்டலேயின் கண்ணிமைகள் அசைந்தபிறகே அந்த வாலிபப் பிராம்மணன் "நீ யார்?" என்று கேட்டான்.

ஒரு வருஷத்திற்கு முன் ஹிஜ்லியில் இதே கேள்வியைக் கபாலகுண்டலேக்குப் போட்டிருந்தால், அவள் அதற்குத் தக்கவாறு பதில் கொடுத்திருப்பாள். ஆனுல் இப்போது அவளது நிலேமை எவ்வளவோ மாறிவிட்டபடியால் உடனே மறுமொழி பகர அவளால் இயலவில்லே. பிராம்மண யுவகன், கபாலகுண்டலே வாயடைத்திருப்பதைப் பார்த்து வெகு கம்பீரமாகவே, "கபாலகுண்டலா! இந்த நிசியில் நீ இந்தக் காட்டினுள் வந்த காரியமென்ன?" என்ருன்.

தனக்குத் தெரியாத ஓர் ஆடவன் தன் பெயரை உச்சரிப்பதைக் கேட்டுக் கபாலகுண்டலே திடுக்குற்ருள். வெருட்சியும் கொண்டாள். அதனுல் சட்டென பதில் தர அவள் நா எழவில்லே.

பிராம்மண வேஷதாரி மீண்டும், "நாங்கள் பேசியது உனக்குத் தெரிந்துவிட்டதென்று எண்ணுகிறேன்" என்ருன்.

கபாலகுண்டலேக்குப் பேசுவதற்கான சக்தி திடீரென வந்தது. "நானுந்தான் அதைக் கேட்கிறேன். இந்தக் கானகத்தில் நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து எந்தக் கொடுமை புரிய நள்ளிரவில் சதி செய்கிறீர்கள்?" என்ருள்.

பிராம்மண வேடத்தான் சிறிதுநேரம் பதில் இல்லாமல் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். தன் இஷ்டம் சித்திபெற ஓர் உபாயம் பளிச்சென மனத்திடை தோன்றவே அவன் கபாலகுண்டலேயின் கையைப் பற்றிக் கொண்டு அந்தப் பாழடைந்த வீட்டைவிட்டுக் கொஞ்ச தூரம் அழைத்துச் சென்ருன். சின மிகுதியால் கபாலகுண்டலே அவனது பிடியை உதறித் தள்ளினுள். பிராம்மண உருவங்கொண்டவன் மெதுவான குரலில் கபாலகுண்டலேயின் காதோடு கூறினுன்: "எதற்காக அதைர்யப்படுகிருய்? நான் ஆடவனல்ல."

கபாலகுண்டலேக்குத் தைர்யம் வந்தது. இந்த மொழியினுல் அவள் சிறிது நம்பிக்கை கொண்டாலும் முற்றும் நம்பிவிடவில்லே ஆசாமியை. அந்த வேஷதாரியுடன் சென்ருள் கபாலகுண்டலே. ஒரு மறைவான இடத்தை அடைந்ததும், "நாங்கள் செய்த கொடிய யோசனைகளே நீ கேட்க விரும்புகிருயா? அவை யாவும் உன்னேக் குறித்துத்தான்" என்ருன் அம்மாறுவேஷதாரி.

கபாலகுண்டலேயின் ஆவல் அதிகரித்தது. "கேட்கிறேன் சொல்லு" என்ருள்.

பொய் வேடத்தான், "நான் திரும்பிவருகிற வரைக்கும் எனக்காக இந்த இடத்திலேயே காத்திருக்க வேண்டும்" என்ருன்.

இதைக் கூறியதும் அவன் அந்தப் பாழடைந்த வீட்டை நோக்கிச் சென்ருன். கபாலகுண்டலே சில கணம் அதே இடத்தில் உட்கார்ந்திருந்தாள். ஆனுல் அவள் கண்ணுல் பார்த்ததையும் காதால் கேட்டதையும் நினைத்துக் கொள்ளும்போது நடுக்கம் ஏற்பட்டது. அதுவும் அந்தச் சமயம் தனியாக அவ்விருண்ட வனத்துள் இருக்கவே அவளுடைய பயம் அதிகரித்தது. பிராம்மண வேஷதாரி தன்னை எந்த எண்ணத் திஞல் இங்கு இருக்கச் சொல்லவேண்டும்? ஒருவேளை நல்ல தருணம் வாய்த்ததென்று தன் துர் எண்ணத்தை நிறைவேற்ற முயலுகிருனே? இவ்வாறெல்லாம் அவள் மனம் மருண்டது. சென்றவன் திரும்பிவர நாழிகையும் ஆகிவிட்டது. கபாலகுண்டலேக்கு இருப்புக் கொள்ள வில்லே. எழுந்து வேகமாகத் தன் வீட்டை நோக்கி நடையைக் கட்டிஞள்.

அச்சமயம் ஆகாய மண்டலம் மேகாடம்பரத்திஞல் கறுத்துக்கொண்டு வந்தது. காட்டில் இருந்த கொஞ்ச நஞ்ச வெளிச்சமும் மறையத் தொடங்கியது. கபால குண்டலே இதற்குமேல் எள்ளளவும் தாமதிக்கவில்லே. விரைவாகக் காட்டை விட்டு வெளியே வந்துகொண் டிருந்தாள். வரும்போது பின்புறமாக வேறு யாருடைய காலோசையோ கேட்டது. திரும்பிப் பார்த்ததும் கனே இருளில் எவருமே தென்படவில்லே. பிராம்மண வேஷதாரிதான் தன்னைப் பின் தொடருகிரு னென்று எண்ணிக்கொண்டாள். வனத்தை விட்டு அகன்றதும், முன்பு வர்ணித்த அச்சிறு பாதையே நடக்கலாஞள். அவ்விடத்தில் அவ்வளவு இருட்டில்லே.

ஆள் இருப்பது தெரியக்கூடும். அப்படியும் பின்னுல் வருவது யாரென்று புலப்படவில்லை. துரிதமாகவே காலடி வைத்தாள். மறுபடியும் மனிதனின் காலடிச் சப்தம் கேட்டது. வானில் கருமுகில்கள் சினந்தன. கபாலகுண்டலை பின்னும் வேகமாக நடந்தாள். சமீபத்தில் வீடும் வந்துவிட்டது. அதை நெருங்குவதற்குள் பிரசண்ட வேகமாகக் காற்று மழை பேர் இரைச்சலுடன் தோன்றியது. கபாலகுண்டலை ஓடினுள். பின்னுல் வரும் ஆளும் ஓடுவதுபோல் சப்தம் கேட்டது. அடைக்கலம் புகுவதற்குள் கபாலகுண்டலை அந்தக் காற்று மழையினுல் தெப்பக்கட்டை யாகிவிட்டாள். மழை நீர் அவள் உடலில் வழிந்தோடியது. மேகம் உறுமிற்று. பளிச்பளிச்சென மின்னல் வெட்டியது சற்றைக்கொருதரம். வையம் நடுங்கியது. அடர்மழை பிடித்துக்கொண்டது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு தன் இல்லத்துள் வதிந்தாள் கபாலகுண்டலை. வாயிற்படியைத் தாண்டித் தன்னறைக்குள் சென்ருள். அவளுக்காகக் கதவும் திறந்து வைக்கப்பட்டிருந்தது. கதவைத் தாழிடச் செல்லுகையில்வாயிற்படியைத் தற்செயலாகக் கண்ணுற்றபோது பூதாகாரமான ஓர் ஆள் நிற்பதை உணர்ந்தாள். அதே சமயம் ஆகாயம் மின்னியது. கண்கூசும் அவ்வொளியில் ஆள் யாரென்பது தெரிந்தது. கடற்கரையில் வசிக்கும் அந்தக் காபாலிகனே !

3

க ன வி ல்

"கனவென மருண்ட வென்னெஞ் சேமாப்ப"

— பத்துப் பாட்டு

கபாலகுண்டலை மெதுவாக அறையின் கதவை மூடிக்கொண்டு மெல்லக் கட்டிலில்வந்து படுத்தாள். மானிடனின் உள்ளம் எல்லையற்ற கடல்போன்றது; அதன்மேல் எழும் கவலை வரிசைகளைக் கணக்கிட யாவரே வல்லார்? கபாலகுண்டலையின் கலவரங்கள் சித்தக்கடலை அலைக்கத்தொடங்கின. அதை ஆராய எவரால் முடியும்?

அன்றிரவு நவகுமாரன் மனோவேதனையினால் கபாலகுண்டலையின் படுக்கையறையில் படுத்துக் கொள்ளவரவில்லை. துணையின்றி அன்று கபாலகுண்டலை இருக்க வேண்டியதாயிற்று. கண்படை இல்லாது வருந்தினாள். மழைத்துளி சொட்டும் விரிசடை யுடைய அந்தப் பயங்கரமான முகம் மையிருட்டில் நாற்புறமும் தென்படுவதுபோல் மருள் கொண்டாள். முன்னம் நடந்தவற்றை யெல்லாம் கபாலகுண்டலை நினைத்துப் பார்த்தாள். காபாலிகனை ஏமாற்றிவிட்டு வந்தது யாவும் அவளது ஞாபக வழிப்பட்டது. கடற்

கரையைச் சார்ந்த சுடுகாட்டில் காபாலிகன் செய்து வந்த பைசாச வினைகள் ஒவ்வொன்ருக அவள் கவனத்திற்கு வந்தன. அவன் பண்ணின பைரவீ பூஜையும், நவகுமாரன் சிறைப்பட்ட காட்சியும் தத்ரூபமாக மீண்டும் அவள் மனக் கண்முன் தோன்றின. சியாமா ஸுந்தரி மருந்துக்காகப் பச்சிலையை விரும்பியது, நவகுமாரன் போகவேண்டாமென்று தடுத்தது, அவனைப் பொருட்படுத்தாமல்தான் வனத்துள் சென்றது, அதற்கு மேல் நிலவின் அழகு, கானத்துள் பரவியிருந்த குவையிருள், அங்குச் சந்தித்த அதிசயமான பிராம்மண குமாரன், கடும்புயல், யாரோ பின்தொடர்ந்து வந்தது, வாயிற்படியில் காட்சி அளித்த அந்தப் பயங்கர ரூபம் இவை யாவும் வரிசையாக அவள் அகக் கண்ணெதிரே முளைத்தன.

கிழக்குவானில் செந்நிறமாக உதயகன்னியின் கிரீடச்சோதி படர்ந்தது. அப்போதுதான் நித்திரை கபாலகுண்டலையின் கண்ணிதழ்களை அழுத்தியது. அந்த மெல்லிய துயிலில் ஒரு விசித்திரமான கனவு கண்டாள் :

ஒரு மரக்கலத்தில் ஏறி முன்பு பார்த்த அதே சமுத்திரத்தில் செல்வதுபோல் தோற்றியது. நேர்த்தியான கப்பல். அதன் பாய்மரத்தில் வஸந்த (மஞ்சள்) வர்ணத்தில் கொடி ஒன்று பறக்கிறது. நாவிகர்கள் கழுத்தில் மாலையணிந்து கலத்தை நடத்துகிருர்கள். ராதாசியாம் விஷயமான காதல் பாட்டுக்களைப் பாடுகின்றனர். குடதிசையில் தாழும் சூரியன் பொற்கிரணங்களைச் சொரிவதனுல் கடல் உருக்கிய பொன்போல்

திகழ்கிறது. விண்ணிடை ஓடும் மேகங்கள் அந்தப் பொன்மாரியில் குளிக்கின்றன. திடீரென இரவு கவிந்து வருகிறது. வானத்தின் அணியாகத் திகழ்ந்த கதிரவனை எங்கோ காணவில்லை. தங்கமென ஒளிர்ந்த மேகங்கள் இருந்த சுவடிராமல் மறைகின்றன. கருநீல மான புயற்கூட்டம் வானெங்கும் வியாபிக்கின்றது. திக்கு, திசை யாவும் மழுங்குகின்றன. கருங்கடல் இருண்ட ஆகாயத்தைத் தழுவுகின்றது. கரையை நோக்கிக் கப்பலைத் திருப்புகிறான் மீகான். ஆனால் கரை எத்திசையில் உள்ளது என்பதே புலப்படவில்லை. கப்பலோட்டிகள் பாடும் களிப்பாட்டும் நிற்கிறது. கழுத்தில் அணிந்த மாலைகளைப் பிய்த்து எறிகின்றனர். சுபமான மஞ்சள் நிறக் கொடியும் அறுந்து கடலில் விழு கிறது. பெருங்காற்று வீசுகிறது. மலையளவு திரைகள் பொங்குகின்றன. திவலை சிதறும் அலையின் நடுவே ஜடாதாரியான ஒரு பிரும்மாண்ட உருவம் தோன்றிக் கபாலகுண்டலை இருக்கும் கலத்தைத் தன் இடது கையால் தூக்கி அகண்ட வாரிதியில் வீசி எறிய முற்படு கிறது. அதே சமயம் பிராம்மணனைப்போல் வேடம் புனைந்த யுவகன் கப்பலைப் பிடித்துக்கொள்கிறான். கபாலகுண்டலையைப் பார்த்து அவன் சொல்லுகிறான்:—

"உன்னை வைத்துக்கொள்ளட்டுமா, அல்லது இந்த ஆழியில் அமிழ்த்தி விடட்டுமா?" கபாலகுண்டலை யின் வாயினின்று திடீரென, "என்னை மூழ்க்கி விடு" என்ற சொற்கள் வருகின்றன. பிராம்மண வேடத்தான் கப்பலை விட்டுத் தன் கையை எடுத்துக் கொள்கிறான். கப்பல் சப்தம் செய்கிறது. அது பேச

ஆரம்பிக்கிறது; " இந்தப் பாரத்தைச் சுமக்க இனிமேல் என்னால் ஆகாது; நான் பாதாளத்துள் அடைக்கலம் தேடிக் கொள்ளுகிறேன்.'' இவ்வாறு கூறியதும், மரக்கலம் கபாலகுண்டலையைக் கடலில் தள்ளி விட்டுப் பாதாளத்தில் மறைகிறது.

உடலெங்கும் வேர்த்தவளாய்க் கபாலகுண்டலை சிலிர்த்துக்கொண்டே கனவு கலைந்து விழித்தபோது நன்றாகப் புலர்ந்துவிட்டது. திறந்திருந்த சாளரக் கதவு வழியாக இன்பத்தை மூட்டும் தென்றல் சிறு மூச்சாகப் புகுந்தது. மெல்ல ஊசலாடும் மரக்கிளைகளில் அமர்ந்து தீங்குரற் பறவைகள் கூவிக்கொண்டிருந்தன. சாளரத்தின் வெளிப்புறம் வனக்கொடி யொன்று சுகந்த புஷ்பங்களை ஏந்தி ஆடிக்கொண்டிருந்தது. பெண்களின் இயல்பை யொட்டிக் கபாலகுண்டலை மலர்களைக் கொய்யக் கொடியைப் பற்றினாள். கொடி நெருக்கத்தில் யாரோ கடிதம் ஒன்றை மறைத்து வைத்திருப்பதைக் கவனித்தாள். அதை எடுத்து வாசித்தாள்; கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது.

" இன்று சாயந்தரத்திற்குமேல், நேற்று இரவு கண்ட பிராம்மண குமாரனை நீ சந்திப்பாய். உன்னைப்பற்றிய முக்கிய விஷயத்தை இன்று உனக்கு வெளியிடுவேன்.

இப்படிக்கு

பிராம்மண வேடம் கொண்டவன் "

4

குறியிடத்தில்

" நன்றென வுணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே "

— குறுந்தொகை

கபாலகுண்டலை அன்று பொழுது சாயும்வரை வேறு எதன்மேலும் கருத்தைச் செலுத்தாது பிராம்மண வேஷதாரியைச் சந்திக்கலாமா கூடாதாவென்று தயங்கிக் கொண்டிருந்தாள். பதிவ்ரதையான ஒரு பெண் இரவில் யாரும் இராத இடத்தில், முன்பின் அறியாத ஒருவனைக் காணச்செல்வது பெரும்பேதைமை யென்று அவளுக்குத் தோன்றவே இல்லை. இதைக்குறித்து அவள் கொண்டுள்ள துணிவு, பார்த்துப்பேசுவதனால் என்ன தோஷம் வந்துவிடுமென்பதே. ஆடவன் ஒருவன் மற்றொருவனையும், பெண் ஒருத்தி மற்றொருத்தியையும் கண்டு பேசுவதுபோல் ஒருவன் அன்னிய ஸ்திரீயிடமும் ஒரு ஸ்திரீ வேறு புருஷனிடமும் நேசப்பான்மை கொள்வதில் என்ன தவறு? மேலும் அந்தப் பார்ப்பன வேடம் பூண்ட ஆள் புருஷனோ பெண்ணோ என்ற சந்தேகம் இருக்கும்போது, அவனைக் கண்டு பேசுவதனால் தவறொன்றுமில்லை யென்பதே அவளுடைய

நியாயம். மானத்தை விற்க அவள் செல்லவில்லையே? தன் பதிக்குத் துரோகம் செய்ய அவள் கனவிலும் நினைக்கவில்லை.

அவள் கவலை கொண்டதெல்லாம், அறிமுகமிராத ஒருவனைச் சந்திப்பதனால் நன்மை விளையுமா, அல்லது தீமை விளையுமா என்பதே. யாதொரு நிச்சயத்திற்கும் வரமுடியாமல் அலைபாய்ந்தது அவள் மனம். முதலில் அந்தப் பிராம்மண வாலிபனுடன் பேசியது, அப்புறம் காபாலிகனைக் கண்டது, அதற்குப் பிறகு துர்ஸ்வப்னம் இவை யாவும் யோசிக்கையில் சமீபத்திலே தனக்கு ஏதாவது கெடுதி நேரிடுமோ என ஐயுற்றாள். காபாலிகன் திடீரெனத் தோன்றுவதற்கும், கனைக் கண்டதற்கும் சம்பந்தமிருக்கலாமென்றும் அவ்வாறு சந்தேகப்படு வதற்குக் காரணமிராது போகவில்லையென்றும் உணர்ந் தாள். அந்தப் பார்ப்பன வேடதாரி காபாலிகனுடைய கையாள், அவனைச் சந்திப்பதனால் தனக்குக் கெடுதியே நேரிடலாமென அவளுக்குச் சம்சயம் உண்டாயிற்று. தன்னைக் குறித்தே காபாலிகனுடன் பேசியதாக அவன் தெளிவாகச் சொல்லியும் இருக்கிறான். யாரோ ஒருவனைக் கொலை புரிவதா அல்லது அப்புறப்படுத்து வதா என்ற விஷயமாக இருவரும் கூடி ஆலோசனை செய்திருக்கின்றனர். அந்த மாதிரி ஏதாவது ஒன்று நடக்கலாம் - அப்புறம் அந்தக் கனவு - அதன் பொருள் என்னவோ? கனவில் அந்தப் பிராம்மண குமாரன் விபத்து வரும்போது தன்னைக் காக்கவந்தான். அவ் வாறு காரியத்திலும் பரிணமிக்குமா? எல்லாவற்றையும் வெளியிடுவதாக அவனும் தெற்றென எழுதியிருக்

கிருன். அவன் ஸ்வப்னத்தில் 'மூழ்கி விடுகிருயா?" என்ருனே, உண்மையில் அவன் அவ்வாறு சொல்லியிருப் பாஞ?...இருக்கமுடியாது.

நம்பினேரைக் கைவிடாத பவானியே கனவில் தன்னைக் காப்பாற்ற அந்தப் பிராம்மண குமாரன் வருவதை முன் கூட்டித் தெரிவித்தாள் போலும்! அவனுடைய உதவியிராது போனுல் மூழ்கிச் சாக வேண்டியதுதானே? இப்படிப் பல்வேறு முரணுன எண்ணங்கள் குழம்பிடக் கபாலகுண்டலை கடைசியில் அந்தப் பிராம்மண வாலிபனைச் சந்திப்பதென்றே திடம் கொண்டாள். அறிவாளி ஒருவன் இந்த முடிவிற்கு வருவாஞ என்பது சந்தேகம். ஆனுல் புத்திமானுடைய கொள்கையைப்பற்றி நமக்கு என்ன வேலை இங்கு? கபால குண்டலை அறிவாளியுமல்ல; அதனுல் புத்தியுள்ளவளுக் குரிய சித்தாந்தம் அவளுக்கு உண்டாகவில்லை யென்ப தில் அதிசயமுமில்லை. ஆவல் மேலிட்ட மகளிரைப்போல் அவள் முடிவு கட்டினுள். மனத்தைக்கவரும் ஓர் அழ கனைக் காண அவாவும் யுவதியைப்போன்று துணி கரம் கொண்டாள். இருளில் உலவவிரும்பும் தவப் பெண்ணை யொத்து இந்த உறுதிக்கு வந்தாள். பவானி யின்பால் சித்தம் வைத்தவளைப்போல் இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தாள். தீச்சுடரில் விழுந்து மடியும் பூச்சியைப்போல் இந்த முடிவிற்கு வந்தாள்.

அஸ்தமானமாகியதும் வீட்டுக் காரியங்கள் சில வற்றை முடித்துக்கொண்டு கபாலகுண்டலை முன் போலவே வனத்தை நோக்கிப் புறப்பட்டாள். போவதன்முன் தன் பள்ளியறையிலுள்ள விளக்கைப்

பிரகாசமாகத் தூண்டிவிட்டுச் சென்ருள். அவள் சென்றவுடன் விளக்கும் பட்டென அணைந்தது.

புறப்படும்போது கபாலகுண்டலை ஒரு விஷயத்தை மறந்துவிட்டாள். எந்த இடத்தில் அந்தப் பிராம்மண குமாரனைச் சந்திப்பதென்பதையே. இதற்காக அந்தக் கடிதத்தை மீண்டும் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. வீட்டுக்குத் திரும்பிக் கடிதம் வைத்த இடத்தில் தேடினுள். அது அகப்படவில்லை. தலையை வாரிப் பின்னிக்கொள்ளும்போது, அந்த லிகிதத்தைப் பத்திரமாகக் கூந்தலுள் செருகிக்கொண்டது சட்டென அவள் ஞாபகத்திற்கு வரவே, உடனே கூந்தலைத் தடவிப் பார்த்தாள். கடிதம் விரலில் தட்டுப்படாது போகவே குழலை அவிழ்த்தாள். ஆனுல் கடிதம் சிக்கவில்லை. அறையின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் தேடினுள். அகப்படாதென உணர்ந்து கபாலகுண்டலை, பிராம்மண குமாரனைக் காண, முன்பு அவனைச் சந்தித்த இடத்தை நோக்கிச் சென்ருள். தன் நெடுங்கூந்தலை மீண்டும் பின்னிவிட்டுக்கொள்ள அவளுக்கு ஒழிவே இல்லை. ஆகவே, கேசபாரம் பின்புறமாக மேகம்போல் படர்ந்து இலங்க, காலதேவதைபோல் அவள் இருண்ட காட்டை நோக்கி நடந்தாள்.

5

இல்வாயிலில்

" கண்கூடல்லது கருத்தளவழியும் " — மணிமேகலை

அன்று மாலைவேளையில் கபாலகுண்டலை வீட்டுக் காரியத்தில் ஈடுபட்டிருக்கும்போது எப்போதோ கடிதம் அவள் கூந்தலிலிருந்து நழுவிக் கீழே விழுந்துவிட்டது. அதை அவள் கவனிக்கவேயில்லை. நவகுமாரன்மட்டும் அதைக் கவனிக்க நேரிட்டது. கவின்பெறப் புனைந்த கோதையிலிருந்து கடிதம் விழுவதைப் பார்த்து அவன் பிரமித்துப் போனான். கபாலகுண்டலை அகன்றதும் லிகிதத்தைப் பிரித்துப் படிக்க வெளியே சென்றான். கடிதத்தைப் படித்ததும் அவனுக்குத் தோன்றிய எண்ணங்கள் இவையே: " உன்னைப்பற்றிய விஷயம். - அது என்னவோ " நேற்றுக் கண்ட பிராம்மணகுமாரன்-யார் அவன் ? இது காதல்உரையாயிருக்குமா ? அவன் மிருண்மயியின் சோரபுருஷனா ? " முன் இரவு நிகழ்ந்தவற்றின் உண்மையை அறியாதவன் இதைத் தவிர வேறு எந்த முடிவுக்கு வருவான் ?

கணவனைத் தெய்வமெனப் போற்றும் பெண்ணரசி அவன் மரித்த காலத்தில் அவனுடன் சிதையில் ஏறும்போது, நெருப்பு அவளுக்குத் தண்மையாகத்

தோற்றினாலும், அதன் வெம்மையை அவள் உணராது போகவில்லை. அவள் உடல்மட்டும் துவள்கிறது. முதலில் புகைச்சுருள் கப்பிக்கொண்டு திணரச் செய்கிறது. கண்களைக் கரிக்கிறது. எதுவும் இருள்மயமாக ஆகிவிடுகிறது. கட்டையில் தீப்பிடிக்கிறது. அழற்கொழுந்து அரவின் நாக்கைப்போல் அவளுடைய அவயவங்களை மெல்ல எரிக்கத் தொடங்குகிறது. பிறகு அக்னி ஜ்வாலை நாற்புறமும் அவளைச் சுடுகிறது. திகுதிகு வென்று சிதை பற்றிக்கொள்ளும்போது அவளது உயிர் புழுவைப்போல் துடிக்கிறது. உலகத்தை மறக்கிறாள். மூளையைக் கனல் கவ்வுகிறது. உடல் வெந்து பிடிசாம்பலாகிறது.

லிகிதத்தைப் படித்தபோது நவகுமாரனுக்கு முதலில் ஒன்றுமே தோன்றவில்லை. அப்புறம் சந்தேகம்; அதற்குமேல் நிச்சயம்; முடிவில் எரிச்சலும் நீங்காத வேதனையும் அவனுக்கு மூண்டன. அதிக வருத்தத்தை யாவது அதிக ஸந்தோஷத்தையாவது ஸஹஜமாக மனுஷ்ய ஹ்ருதயம் உடனே கொள்வதில்லை; கிரமமாகத்தான் அந்த உணர்வைப் பெறுகிறது. நவகுமாரனையும் முதலில் ஸந்தேகமென்னும் தூமராசி சூழ்ந்து கொண்டது; பிறகு வேதனை தீக்கொழுந்தென அவன் உள்ளத்தைச் சுட்டது. கடைசியில் இவ்விரண்டின் தாபத்தினால் அவன் மனம் முற்றும் தீய்ந்து துகளாகியது. கபாலகுண்டலை தனக்குத் தெரியாமல் சில காரியங்களைச் செய்வதை அவன் அறிவான். தான் தடை செய்தபோதிலும் அவள் தனியாக இஷ்டப்படி போவதும் வருவதுமாக இருந்தாள். தன்

வார்த்தையை அலக்ஷ்யம் செய்து நள்ளிரவில் காட்டிற்குச் சென்ருள். வேறு எவராகிலும் இவ்வாறு சகித்துக் கொண்டிருப்பார்களா? மனத்தை வீண் கல்வரத்திற்கு உட்படுத்தி, அது நிமிஷத்திற்கு ஒருதரம் தன்னைக் கொட்டி வேதனைப்படுத்தாமல் இருப்பதற்காகவே நவகுமாரன் அவள்மேல் தினையளவும் அவநம்பிக்கை கொண்டதில்லை. இன்றும் சந்தேகத்திற்கு அவன் இடம் தரவில்லை. ஆனல் இன்று சந்தேகமில்லை; புதிய அனுபவமே அவனுக்கு ஏற்பட்டது.

வேதனையின் முதற்பெருக்கு அடங்கியதும் நவகுமாரன் மௌனமாகவே வெகுநேரம் கலுழ்ந்து புலம்பினன். கண்ணீர் பெருக்கியதும் சற்று மனவமைதியுற்ருன். தான் மேலே செய்யவேண்டிய காரியத்தைப் பற்றி ஒரு நிதானத்திற்கு வந்தான். கபாலகுண்டலையை அவன் கடிந்துகொள்ளப் போவதில்லை. அவள் வனத்திற்குச் செல்லும்போது அவளைப் பின்தொடர்வதே அவனுடைய எண்ணம். கபாலகுண்டலை புரியும் பெரும் பாதகத்தைக் கண்கூடாக அறியவேண்டும். அதற்குப் பிறகு உயிரை மாய்த்துக்கொள்வதே அவன் கொண்ட உறுதி. கபாலகுண்டலையை ஒன்றுமே சொல்லப் போவதில்லை. தன் பிராணனைத்தான் தியாகம் செய்து கொள்ளப் போகிருன். அதைச் செய்யாமல் வேறு வழி? துயர் நிரம்பிய இந்த வாழ்வைச் சகிக்க அவனுக்குச் சக்தியில்லை.

இந்த ஸ்திரத்திற்கு வந்தவனுய், கபாலகுண்டலை வெளிக் கிளம்புவதற்காகக் காத்துக்கொண்டிருந்தான் நவகுமாரன். அவள் புறப்பட்டுச் சிறிது தொலைவு

சென்றவுடன் பின்தொடர்ந்தான். மறுபடியும் கபால குண்டலை திரும்புவதைப் பார்த்து, நவகுமாரன் ஒரு புறமாக மறைந்துகொண்டான். கடைசியில் அவள் மீண்டும் வெளியே வந்ததும், அவளை நிழல்போல் தொடர்ந்தான். அதே சமயம் தன் எதிரே திடுக்கிடும் வடிவுடைய ஓர் உருவம் நிற்பதைக் கண்டான்.

அவன் யார், எதற்காக அங்கு நிற்கிறான் என்று விசாரிக்க நவகுமாரன் சற்றும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. அவனை ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை. கபாலகுண்டலை செல்லும் திக்கிலே இருந்தது அவன் நோக்கு. தன் வழியில் குறுக்கிடும் ஆளை, மார்பைத் தொட்டு ஒரு புறமாகத் தள்ள முயன்றான். ஆனால் அவனை அப்புறப்படுத்த நவகுமாரனால் முடியவில்லை.

"யார் நீ? வழிவிட்டு நில்" என்றான் நவகுமாரன். அந்நெடிய மனிதன், "நான் யாரா? உனக்குத் தெரியவில்லையா?" என்றான். அவனது குரலோசை ஸமுத்திர கோஷம்போல் செவிகளில் பாய்ந்தது. நவகுமாரன் உற்று நோக்கினான். முன்பு கடற்கரையில் தான் கண்ட சடைசூடிய காபாலிகனே!

நவகுமாரன் திடுக்குற்றான், ஆனால் சிறிதும் பீதி அடையவில்லை. அவனுடைய முகம் மலர்ந்தது. "கபால குண்டலை உன்னைக் காண்பதற்கா போகிறாள்?" என்றான்.

"இல்லை" என்றான் காபாலிகன்.

அவனுக்குத் திடீரென மூண்ட நம்பிக்கை சட்டென அணைந்துவிட்டது. பழையபடி நவகுமாரனுடைய வதனத்தில் துயரின் சாயை படர்ந்தது.

" ஆனால், வழிவிடு எனக்கு " என்றான்.

" இதோ விடுகிறேன், ஆனால் உன்னோடு சில வார்த்தை நான் பேசவேண்டும். முதலில் அதற்குச் செவிகொடு " என்றான் காபாலிகன்.

" உன்னுடனா பேச்சு? முன்பு என் பிராணனுக்கு உலைவைத்தவனல்லவா நீ? என் உயிர்தானே வேண்டும், எடுத்துக்கொள். என் காரியத்தில் மட்டும் குறுக்கிடாதே. கொஞ்ச நாழிகை பொறு. நான் வந்துவிடுகிறேன். ஏனோ நான் அன்றே தெய்வத்திற்கு என் பிராணனை அர்ப்பணம் செய்யாமல் இருந்தேன்? இப்போது அதன் பயனை அனுபவிக்கிறேன். என்னைக் காப்பாற்றியவள் என்னைத் துரோகம் செய்துவிட்டாள். காபாலிகனே! என்னை இனிமேல் நம்பு. இதே இடத்திற்கு வந்து உன் உபாஸனைக் கடவுளுக்குப் பலி ஆவேன் " என்றான் நவகுமாரன்.

" உன்னைக் கொல்வதற்காக நான் இங்கு வரவில்லையப்பா! பவானியின் விருப்பமும் அதுவல்ல. நான் வந்த காரியத்தை உனக்குச் சொல்லுகிறேன். வீட்டினுள் சென்று பேசலாம் வா " என்றான் காபாலிகன்.

" இப்போது அவகாசமில்லை. அப்புறம் கேட்டுக்கொள்கிறேன். எனக்காகக் காத்திரு. முக்கியமான அலுவல்மேல் செல்கிறேன், அதை முடித்துக்கொண்டு வருகிறேன் " என்றான் நவகுமாரன்.

" குழந்தாய்! எனக்கு எல்லாம் தெரியும். அந்த மகா பாபியைத்தானே கவனிக்கச் செல்கிறாய்? அவள் போகும் இடம் எனக்குத் தெரியும். உன்னை அந்த இடத்திற்கே கூட்டிச் செல்கிறேன். நீ பார்க்க விரும்பி

யதையே காட்டுகிறேன். இப்போது என் பேச்சைக் கேள். என்னிடத்தில் பயமா? உனக்கு யாதொரு கெடுதியும் நேரிடாது” என்றான் காபாலிகன்.

“உன்னிடத்தில் யாதொரு பயமுமில்லை; வா” என்றான் நவகுமாரன்.

இதைக் கூறியதும் காபாலிகனை நவகுமாரன் வீட்டினுள் அழைத்துச் சென்று வீற்றிருக்கச்செய்து, தானும் உட்கார்ந்துகொண்டு, “இனிமேல் சொல்” என்றான்.

6

மீண்டும் கானல்

"பழகிய பகையும் பிரிவின்னுதே......" — நற்றிணை

காபாலிகன் இடத்தில் அமர்ந்ததும் தன் இருகரங்களையும் நவகுமாரனுக்குக் காட்டினன். அவை முறிந்து கிடந்தன. நேயர்களுக்குக் கவனமிருக்கலாம், கபாலகுண்டலை நவகுமாரனுடன் ஓடிப்போன அன்றிரவு காபாலிகன் அவர்களைத் தேட மணற்குன்றில் ஏறியபோது சறுக்கி விழுந்துவிட்டது. உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தன்னிரு கைகளையும் தரையில் ஊன்றிக்கொள்ளவே அவை முறிந்தன. காபாலிகன் இந்தச் செய்தியை நவகுமாரனிடம் அறிவித்துவிட்டுப் பேசலுற்ருன் : "கையிரண்டும் போனுலும் என் செயல் யாவும் பங்கப்படவில்லை. ஆனுல் இந்தக் கைகள் தம் வலிமையை இழந்துவிட்டன. விறகு கொண்டு வரும்போது அந்தக் கஷ்டம் சொல்லி முடியாது."

"தரையில் விழுந்தவுடனே கையிரண்டும் பிரயோஜனப்படாதென்று தோன்றவில்லை. விழுந்ததும் நான் மூர்ச்சையானேன். மயக்கமும், எப்போதாவது ஒரு சமயம் ஸ்மரணைகொள்வதுமான நிலையில் எத்தனை

நாட்கள் கிடந்தேனே தெரியாது. இரண்டு ராத்திரி ஒருபகல் இருக்கலாம். அதிகாலையில் எனக்கு முழுப் பிரக்ஞை வந்து எழுந்தேன். நினைவு வருவதன்முன் ஒரு ஸ்வப்னம் கண்டேன் - ஸாக்ஷாத் பவானி - " என்று சொல்லும்போது காபாலிகனுடைய உடல் நடுங்கியது. "பவானி என்முன் ஆவிர்ப்பவித்து, புருவம் சினத்தால் சுருங்க என்னைச்சுட்டி, 'துராசாரம் பிடித்தவனே! உன் சித்தம் தூய்மை அடையாததனால் எனக்கு நீ செய்யும் பூஜை விக்கினமுற்றது. இதுவரை உன் புலன்களை முதலில் திருப்தி செய்யக்கருதினாய்; இந்தப் பெண்ணின் ரத்தத்தை நீ எனக்கு அர்ப்பணம் செய்ய மறந்தாய். இவளாலேயே நீ முன்செய்த வழிபாடுகள் யாவும் வீணாயின. இனி உன்னிடமிருந்து எதையும் பெற விரும்பேன்' என்று சொன்னாள். அப்போது நான் கதறிக் கண்ணீர் பெருக்கி அம்மஹா சக்தியைச் சரண் புகுந்தேன். அவள் இரக்கங்கொண்டு, 'இதற்கு ஒரே பிராயச்சித்தம் இருக்கிறது. இந்தக் கபாலகுண்டலையை எனக்குப் பலியாகக் கொடுக்கவேண்டும். நீ இதைப் பூர்த்தி செய்யும்வரை உன் பூஜை பலனளிக்காது' என்றாள்."

"என்னுடைய நலிந்த உடல் எப்போது ஆரோக்கியமடைந்ததென்பதை இங்கே கூறுவது அனாவசியம். முற்றும் குணமடைந்ததும் பராசக்தியின் ஏவலை நிறைவேற்ற முற்பட்டேன். இவ்விரு கரங்களிலும் குழந்தைகளுக்குள்ள பலங்கூட இல்லை. தோள்வன்மையின்றி எந்தக் காரியந்தான் சித்திபெறும்? ஆகையால் உதவிக்கு ஓர் ஆளைத் தேடுவது அவசியமாயிற்று. இந்த

மனுஷ்ய வர்க்கத்திற்கே அறிவு மிகவும் குறைவு. அதுவும் இந்தக் கலிகாலத்தில் யவன அரசனுடைய தண்டனைக்குப் பயந்து எவனுமே இத்தகைய புண்ய கைங்கரியத்தைச் செய்ய முன்வரமாட்டான். வெகுநாள் பலவிடங்களில் அலைந்த பிறகு இந்தப் பாபிஷ்டி இருக்கு மிடத்தைக் கண்டுபிடித்தேன். கைபிராத காரணத்தால் பவானியின் ஆக்ஞை நிறைவேருது நிற்கின்றது. மானஸீகச் சித்திபெறவே இவ்வாருன கிருத்தியங் களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நேற்று இரவு, சமீபத்திலிருக்கும் அந்த வனத்துள் நான் ஹோமம் செய்து கொண்டிருந்தேன். கபாலகுண்டலையுடன் ஒரு பிராம்மண யுவகன் இருப்பதை என் கண்களாலேயே பார்த்தேன். அவனை மீண்டும் சந்திக்கவே அவள் இன்றும் செல்கிருள். அவனை நீயே பார்க்க வேண்டு மாளுல் என்னுடன் வா காண்பிக்கிறேன்" என்ருன் காபாலிகன்.

"அப்பனே! கபாலகுண்டலை பலியாவதற்கு உகந்த வள். பவானியின் சொற்படி அவளை நான் காவு தரு கிறேன். என் விஷயத்திலும் அவள் துரோகம் செய்த வளே; உன்வரைக்கும் அப்படியே. அவளைக் கொல்ல வேண்டியதுதான். அந்தச் சகாயம் நீ செய். அம்மகா பாபியைப் பிடித்து ஹோமம் வளர்த்தும் இடத்திற்குக் கொண்டுவா. அங்கு உன் கையினுலேயே அவளை வெட்டி வீரபலியிடு. இதனுல் சர்வேச்வரிக்கு செய்த அபராதங் களினின்று நீ மன்னிப்புப் பெறுவாய். இந்தப் பரிசுத்த மான தொழிலினுல் உனக்கு அமோகமான புண்ணியம்

கிட்டும். ஒரு விபசாரி தகுந்த தண்டனையும் அடை வாள்; நம் இருவர் வஞ்சமும் தீரும் —"

காபாலிகன் பேச்சை முடித்தான். நவகுமாரன் யாதொரு பதிலும் தரவில்லை. அவன் வாய் திறவாம லிருப்பதைக் கண்டு காபாலிகன், "குழந்தாய், இப் போதே அவளுடைய களங்கத்தை உனக்குக் காட்டு கிறேன். வா என்னோடு" என்றான்.

உடல் வியர்க்க நவகுமாரன் காபாலிகன் பின் சென்றான்.



7

காமக்கிழத்தியும் - காதல் மனையாளும்

‘கவலைகொள் நெஞ்சினேன் கலுழ்தரக் கடனேக்கி
யவலமெய்க் கொண்டது போலுமஃ தெவன்கொலோ’
— *நெய்தற்கலி*

கபாலகுண்டலை வீட்டைவிட்டு வெளிக் கிளம்பி நேராகக் காட்டினுள் நுழைந்தாள். அங்கே பாழடைந்த வீட்டில் பிராம்மண யுவகனைக் கண்டாள். யுவக னுடைய முகம் களையற்று இருந்தது. இரவுப்பொழுதாய் இருந்ததால் அது நன்கு தெரியவில்லை. கபாலகுண்டலை யைக் கண்டதும் அவன், “காபாலிகன் இந்த இடத்திற்கு வரக்கூடும், அதனால் நாம் இங்கே கூடிப்பேசுவது உசித மன்று. வேறிடம் செல்வோம்” என்றான். வனத்துள் நாற்புறமும் விருக்ஷங்கள் சூழ்ந்த ஏகாந்தமான இடம் ஒன்றிருந்தது. பிராம்மணவேஷதாரி கபாலகுண்டலை யைத் தனியான பாதைவழியே அவ்விடத்திற்கு இட்டுச் சென்றான். இருவரும் அவ்விடத்தில் அமர்ந்ததும் பிராம்மண யுவகன் பேசத்தொடங்கினான்.

“முதலில் நான் யாரென்பதை உனக்குத் தெரிவிக் கிறேன். நான் சொல்லும் சமாசாரம் நம்பக்கூடியதா இல்லையாவென்று நீயே யோசித்துப் பார்க்கலாம். ஹிஜ்லியைவிட்டு உன் புருஷனுடன் நீ வரும்போது

வழியில் ஓர் இரவு துருக்கப் பெண்ணொருத்தியைச் சத்திரத்தில் கண்டிருப்பாய்; உனக்குக் கவனமிருக்கிறதா?"

"எனக்கு ஆபரணங்களைத் தந்து அழகு பார்த்தாளே அந்தத் துருக்க யுவதியா?" என்றாள் கபாலகுண்டலை.

"ஆமாம். அவளே நான்!" என்றாள் அந்தப் பிராம்மண வேஷதாரி.

கபாலகுண்டலை வியப்புற்றதற்கு அளவே இல்லை. லுத்ப்-உன்னிஸா அவள் ஆச்சர்யப்படுவதைப் பார்த்து, "இதைவிட இன்னும் அதிசய சமாசாரம் ஒன்று இருக்கிறதே, நான் உன்னுடைய சக்களத்தி!" என்றாள்.

கபாலகுண்டலை சாமர்த்தியமாகவே, "அது எப்படி?" என்றாள்.

அப்போது லுத்ப்-உன்னிஸா பழைய விருத்தாந்தங்களை ஒன்று விடாமல் எடுத்துரைத்தாள். தனக்கு விவாகமானது; தந்தையுடன் ஜாதிப் பிரஷ்டமானது; புருஷன் தன்னை ஒதுக்கியது; ஆக்ராவில் மொகல் தர்பாரின் ஆதரவில் இருந்தது; ஸப்தக்கிராமத்தில் ஆடம்பரமான வாழ்க்கை நடத்தியது; அங்கு நவகுமாரனைக் கண்டது; அவனுடன் தான் நடந்துகொண்ட விதம்; மாறுவேடம் புனைந்து காட்டினுள் சென்றது; அங்கு ஹோமம் செய்யும் காபாலிகனைக் கண்டது யாவும் கூறினாள்.

"எந்த அபிப்பிராயத்தைக்கொண்டு இந்த திருட்டு வேஷம் கொண்டாயோ?" என்று வினவினாள் கபாலகுண்டலை.

"உன் புருஷனிடமிருந்து உன்னை என்றென்றும் பிரித்துவைக்கும் நோக்கத்துடனே இந்தக் காரியத்தில் இறங்கினேன்" என்றாள் லுத்ப்-உன்னிஸா.

கபாலகுண்டலை சிந்திக்கத் தொடங்கினாள். "அது எப்படி நிறைவேறும்?" என்றாள்.

லுத்ப் :—உன் புருஷன் உன்மீது சந்தேகம் கொள்ளும்படி நான் ஏதாவது சூழ்ச்சி செய்யலாம் அல்லவா? அதைப்பற்றி இப்போது நான் அக்கறைப்படவில்லை. அந்த வழியை விட்டுவிட்டேன். இப்போது என் சொற்படி நீ நடந்துகொள்ள விரும்பினால் உன் மூலமாகவே என் கோரிக்கை வெற்றியடையும். அதனால் உனக்கும் நன்மையே விளையும்.

கபால் :—காபாலிகன் உன்னிடம் யாரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான்?

லு :—உன்னைக் குறித்துத்தான். காபாலிகன் ஹோமம் வளர்த்துவது உன் நன்மைக்கா அல்லது நாசத்திற்கா வென்பதை அறியவே அவனிடம் சென்றேன். அவன் தன் காரியத்தை முடிக்கும் வரை அங்கேயே உட்கார்ந்திருந்தேன். ஹோமம் முடிவுறும் சமயம், அடிக்கடி உன் பெயரை உச்சரிக்கவேண்டிய காரணத்தை விசாரித்தேன். சிலநேரம் அவனுடன் பேசியதிலிருந்து உனக்குத் தீங்குபுரியும் நோக்கத்துடன் இந்த ஹோமத் தீயை வளர்த்தினனென்று அறிந்தேன். எனக்கும் அந்த எண்ணந்தானே? அதை அவனுக்குத் தெரியப்படுத்தினேன். உடனே இருவரும் ஒத்துழைத்து இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க அந்தப் பாழும் விடுதியில்தான் சதி செய்தோம். உன்னைக்

கொல்வதே அவனுடைய முக்கிய நோக்கம். ஆனால் எனக்கு அது இஷ்டமில்லை. இந்த ஜன்மத்தில்தான் நான் கணக்கிடத் தொலையாப் பாபங்களைச் செய்திருக்கிறேனே. குற்றமறியாத ஒரு பெண்ணைக் கொல்லும் முயற்சியில் நான் பங்கெடுத்துக்கொண்டு பாபத்தை இன்னும் மூட்டை கட்டிக் கொள்ளவேண்டுமா? நான் அவனுடைய யுக்திக்குச் சம்மதிக்கவில்லை. நீயும் அதே சமயம் அங்கே தோன்றினாய். எங்களுடைய பேச்சு உன் காதுக்கும் எட்டியிருக்கலாம்.

கபா:—என் காதிலும் இதே பேச்சு விழுந்தது.

லு:—அந்தக் காபாலிகன் என்னை ஒரு முட்டாளென்று எண்ணிக்கொண்டு நற்புத்தி ஓத வந்துவிட்டான். எவ்வளவு தூரம் அவனுடைய காரியம் நிற்கிறதென்பதைக் கவனித்து வரவே இந்த வனத்துள் உன்னை ஓர் இடத்தில் நிற்கும்படி சொன்னேன்.

கபா:—நீ திரும்பி வரவே இல்லை. அது ஏன்?

லு:—அவன் கொஞ்சத்தில் என்னை விடவில்லை. அனாவசியமான பேச்சிற்கு இடம் கொடுத்துக் காலதாமதம் செய்துவிட்டான். அந்த ஆள் உனக்கு நன்றாகத் தெரியுமா? அவன் யாரோ?

கபால்:—என்னைச் சிறுவயதில் காப்பாற்றி வளர்த்த காபாலிகன்.

லு:—அப்படியா! கடற்கரையில் உன்னைக் கண்டெடுத்து வளர்த்தது, நவகுமாரன் அவன் கையில் சிக்கியது, அவனோடு நீ ஓடிவிட்டது, யாவும் எனக்கு அந்தக் காபாலிகன் சொன்னான். நீங்கள் இருவரும் சென்றபிறகு நிகழ்ந்ததைப்பற்றியும் அவன் சொன்னான்.

அந்தச் சமாசாரமெல்லாம் உனக்குத் தெரியாதே? அதைப்பற்றியும் உனக்கு ஸவிஸ்தாரமாகக் கூறுகிறேன்.

காபாலிகன் குன்றினின்று சரிந்து விழுந்து கைகளை உடைத்துக் கொண்டது, அவன் கண்ட ஸ்வப்னம், எல்லாவற்றையும் சொன்னாள். 'ஸ்வப்னம்' என்றதும் கபாலகுண்டலைக்குத் தூக்கி வாரிப்போட்டது; மயிர்க் கூச்செறிந்தது; மூளையில் பளபளவென்று மின்னுவது போல் வேதனை மூண்டது. "காபாலிகன் பவானியின் கட்டளையை நிறைவேற்றவே திடம்கொண்டுவிட்டான். கையில் வலிமை இராததால் பிறருடைய உதவியை அவன் நாடுவது அவசியமாயிற்று. என்னை ஒரு பிராம் மணப் பிள்ளையென்று கருதி என் சகாயம் கிட்டுமோ வென்ற எண்ணத்தினால் அவன் எல்லாக் கதையையும் சொல்லிவிட்டான். இதுவரை அவனுடைய கொடுந் தொழிலில் உதவியாயிருக்க நான் உட்படவில்லை. என் பாழும் மனம் பின்னால் எவ்வாறு இழுத்துச்செல்லுமோ? அந்த ஹீனமான காரியத்தில் தலையிடமாட்டேனென்று நம்புகிறேன். அதற்கு மாறாகவே நடக்க உத்தேசித்திருக் கிறேன். காபாலிகனுடைய வேலைக்கு முட்டுக்கட்டை போடுவதே என்னுடைய உத்தேசமும்; இதற்காகவே உன்னைச் சந்தித்துப் பேச விரும்பினேன். சுயநன்மை யைக் கோரி இதை நான் செய்யவில்லை. உன் உயிரைக் காப்பாற்றவே இந்தச் சூழ்ச்சியைப் புரிந்தேன். இந்த உபகாரத்திற்காக எனக்கு ஏதாவது பிரதி செய்ய வேண்டும்?" என்றாள் லுத்ப்-உன்னிஸா.

"என்ன செய்யவேண்டும் சொல்?" என்றாள் கபாலகுண்டலை.

லு:—எனக்கு வாழ்க்கைப்பிச்சை அளிக்கவேண்டும்; உன் புருஷனை நீ துறந்துவிடவேண்டும்.

கபாலகுண்டலை வெகுநேரம் இந்தப் பெரும் பிரச்னையைக் குறித்துச் சிந்தித்த பிறகே, "புருஷனைத் துறந்துவிட்டு நான் எங்கே செல்வது?" என்றாள்.

"வேறு தேசத்திற்கு - தொலைவில். வசிக்க நேர்த்தியான மாளிகை தருவேன். அளவற்ற தனம் உனக்கே - சுச்ருஷை செய்யப் பணியாட்கள் - ராஜாத்தி மாதிரியாக வாழலாம் உன்னிஷ்டப்படி."

கபாலகுண்டலை மீண்டும் யோசனையில் ஆழ்ந்தாள். மனக்கண் முன்பு உலகத்தையே சுற்றி ஆராய்ந்து பார்த்தாள்; தன்க்கு இதம் செய்யக்கூடியவர்கள் எவரும் தென்படவில்லை. தன் உள்ளத்தினுள் புகுந்து பார்த்தாள்; அங்கும் தனக்குப் பிரியமானவர்கள் எவரையும் காணவில்லை, நவகுமாரனைக்கூட. 'எதற்காக லுத்ப்-உன்னிஸாவின் முயற்சிக்கு இடையூறாக நிற்கவேண்டும்? லுத்ப்-உன்னிஸா எனக்கு உபகாரம் செய்திருக்கிறேன் என்றாளே; அது என்னவென்று புரியவில்லை. அவள் தரும் ஐச்வர்யங்கள் எனக்குத் தேவை இல்லை. அவள் இன்பத்தை அடையும்மார்க்கத்தில் நான் ஏன் குறுக்காக நிற்கவேண்டும்?' என்ற முடிவுக்கு வந்து அவள் வெளிப்படையாக, "லுத்ப்-உன்னிஸா! உன் மனோபீஷ்டமே நிறைவேறட்டும். நாளைக்கு உன் காரியத்திற்குக் குந்தகமாக நிற்கும் இவளைக் காணமாட்டாய். எதேச்சையாக வனத்தில் திரிந்தேன் ஒருசமயம். மறுபடியும் அதே வனப்பறவை யாவேன்" என்றாள்.

உன்னிஸா ஆனந்தக்கடலில் ஆழ்ந்தாள். தன் கோரிக்கை இவ்வளவு எளிதில் கைகூடுமென்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. கபாலகுண்டலையின் பெருந்தன்மையை மெச்சினவளாய், "தங்கையே! நீண்ட ஆயுளுடன் நீ இருக்கவேண்டும்.எனக்குவாழ்வை அளித்தவள் நீயே. உன்னை அனாதையாகவிட என்மனம் இணங்கவில்லை. நாளைக் காலையில், என்னுடைய நம்பிக்கையான வேலைக்காரியை உன்னிடம் அனுப்புவேன். அவளுடன் நீ செல். வர்த்தமானில் எனக்கு மிகவும் வேண்டியவளான சீமாட்டி இருக்கிறாள் - உனக்கு வேண்டியவற்றை அவள் தருவாள்" என்றாள்.

உன்னிஸாவும் கபாலகுண்டலையும் அந்நியோந்யமாகப் பேசும் ஆர்வத்தில் எதிரேவரும் பெருங்கேட்டைச் சற்றும் கவனிக்கவில்லை. காட்டின் ஒருபுறம் காபாலிகனும் நவகுமாரனும் இவர்களுடைய நடவடிக்கைகளை மறைவிலிருந்து கவனிப்பதை இவர்கள் உணரவில்லை.

நவகுமாரனும், காபாலிகனும் இவர்கள் இருவரையும் பார்த்தார்களே ஒழியத் துரதிர்ஷ்டவசமாய் இவர்கள் பேசும் விஷயம் அவ்விருவரும் நின்ற இடத்தில் தெளிவாகக் கேட்கவில்லை. மனிதனின் கண்ணேக்குத் தொலைவில் செல்லக்கூடியது. ஆனால் விஷயத்தைப் பூர்ணமாக அறிந்துகொள்ளாமல் மனிதன் விபரீத ஸந்தேகங்களுக்கு ஆளாகிறான். விதியின் சூழ்ச்சியே மிகவும் அதிசயமானது!

கபாலகுண்டலை அவிழ்ந்து புரளும் கூந்தலுடன் நிற்பதைக் கண்ணுற்றான் நவகுமாரன். தனக்குச்

சொந்தமாவதற்குமுன் இதே மாதிரி அவள் தன் நெடுங் கூந்தலை முடிந்து கொள்ளாமலிருந்தாள். பக்கத்தில் இருக்கும் பிராம்மண யுவகனுடைய மயிர்ச் சுருளுடன் இவளது குழலும் கலந்திருப்பது நவகுமாரனுடைய கண்களை உறுத்தியது. ரகஸியம் பேச அவ்விருவரும் நெருங்கி இருந்ததால் இவ்வாறு இருவருடைய கேசபார மும் கலந்திருக்க நேரிட்டது. இதை அவர்கள் கவனிக் கவே இல்லை. சந்தேகம் குடிகொண்ட நவகுமாரனுடைய புத்திக்கு இந்த வெளித்தோற்றம் பின்னும் எரிச்சலை மூட்டியது. சித்தம் கலங்கித் தரையில் மெல்லச் சாய்ந் தான்.

காபாலிகன் அவனுடைய நிலையைக் கவனித்து, உடனே தன் இடுப்பில் வைத்திருந்த கொட்டாங்கைச் சியை வெளியே எடுத்து, "குழந்தாய்! குன்றிவிடாதே. இந்த மகா ஔஷதத்தை அருந்து. இது பவானியின் பிரஸாதம். உட்கொண்டதும் உனக்குப் பலம் உண்டா கும்" என்முன்.

நவகுமாரனுடைய வாயருகில் பாத்திரத்தைப் பிடித் தான். வேறு மனத்தினனாய், அது என்னவென்றுகூடக் கவனியாமல் மடக்கென விழுங்கினான் நவகுமாரன். அவனுக்கு மூண்டிருந்த கடும் வேட்கையும் தணிந்தது. ருசிகரமான அந்தத் திராவகம், உடலுக்குத் தென்பு தரக் காபாலிகன் செய்யும் ஒருவிதச் சாராயமென்று அவனுக் குத் தெரியாது. குடித்தவுடன் நவகுமாரனுக்கு உத்ஸாஹமும் பலமும் வந்தன.

இந்தப் பக்கம் லுத்ப்-உன்னிஸா முன்போலவே மெதுவான குரலில் கபாலகுண்டலையுடன் உரையாடிக்

கொண்டிருந்தாள். " தங்கையே! நீ எனக்குச் செய்யும் பேருதவிக்குத் தகுந்த கைம்மாறு செய்ய என்னால் இயலுமா? என்னை நீ என்றும் மறவாமல் இருந்தாயா னால் அதுவே எனக்குச் சொல்லமுடியாத ஸந்தோஷம். நான் உனக்குப் போட்ட நகைகளை நீ ஏழைகளுக்குத் தானம் செய்துவிட்டாய். என்னிடத்தில் இந்த க்ஷணத் தில் உனக்குத் தரக்கூடிய ஆபரணங்கள் ஒன்றும் இல்லை. ஏதோ ஒரு பிரயோஜனத்தை எண்ணி நேற்று இந்த மோதிரத்தை என் கூந்தலில் மறைத்து வைத்தி ருந்தேன். இறைவனது கிருபையால் ஒரு மஹா பாதகத் தைச் செய்யாமல் மீண்டேன். இந்த மோதிரத்தை நீயே வைத்துக்கொள். இதைப் பார்க்கும்போதெல்லாம் ஸ்நேகிதியான என்னுடைய ஞாபகம் வரும். உன் புருஷன், இந்த மோதிரம் யார் கொடுத்ததென்று கேட்டால், லுத்ப்-உன்னிஸா கொடுத்தாள்' என்று தைரியமாகச் சொல்."

இவ்வாறு இயம்பியதும் லுத்ப்-உன்னிஸா தன் விரலிலிருந்து அதிக மதிப்புடைய ஒரு கணையாழியைக் கழற்றிக் கபாலகுண்டலையின் கையில் தந்தாள். நவ குமாரனுடைய கண்களுக்கு அது நன்றாகத் தெரிந்தது. அவனுடைய உடல் ஏதோ ஒரு வேகத்தினால் நடுக்குறு வதைக் கவனித்துக் காபாலிகன் அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். மீண்டும் ஒருமுறை உணர்ச்சி யூட்டும் அந்த மதுவைக் குடிக்கக் கொடுத்தான். சாராயம் நவகுமாரனுடைய மூளையில் வேலை செய்ய

ஆரம்பித்தது. அவனுடைய ஸ்வபாவத்தையே அது கெடுத்துவிட்டது. அவனுக்குள்ள காருண்யத்தின் குருத்தையும் நசுக்கியது.

கபாலகுண்டலை லுத்ப் - உன்னிஸாவிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். அதே சமயம், நவகுமாரனும் காபாலிகனும் லுத்ப்-உன்னிஸாவின் கண்களில் படாமல் வேறு வழியாகச் சென்று கபாலகுண்டலையைப் பின்பற்றினார்கள்.

8

வீட்டை நோக்கி

“ஞாலத் தின்னுயிர் வாழ்வோர் நாப்பண்
காலம் பார்க்கும் காலன்” — பெருங்கதை

கபாலகுண்டலை மெதுவாகவே வீட்டை நோக்கி நடந்தாள். மிகவும் நிதானமாகவே இருந்தது அவளுடைய நடை. அதற்குக் காரணம், அவள் சிந்தையில் ஆழ்ந்திருந்ததே. லுத்ப் - உன்னிஸாவைச் சந்தித்த பிறகு கபாலகுண்டலையின் மனப்போக்கு முற்றும் மாறிவிட்டது. தன் உயிரைப் போக்கிக்கொள்ள அவள் துணிந்துவிட்டாள். எதற்காக அவ்வாறு துணிந்தாள்? லுத்ப் - உன்னிஸாவின் பொருட்டா? அன்று!

கபாலகுண்டலை உள்ளம் வரைக்கும் ஒரு தாந்திரிகனுடைய பெண்ணே. காளிகாதேவியின் அருளைப்பெறத் தாந்திரிகன் பிற உயிரைப் பலி தரச் சற்றும் தயங்காததுபோல் கபாலகுண்டலை அதே தெய்வத்தின் கடாக்ஷத்தைப் பெற ஆத்ம ஸமர்ப்பணம் செய்துகொள்ளத் துணிந்தாள். காபாலிகனைப்போல் அவள் ததேகத் தியானமாய் மஹாசக்தியின் அருளைப் பெற விரும்பினாள் என்பது மட்டும் அல்ல. அல்லும் பகலும் மஹா சக்தியின்

குண கீர்த்தனங்களைக் காதாரக் கேட்டும், ஸாதனைகள் புரிந்தும் மஹாசக்தியினிடம் நீங்காத பக்தி அவளுக்கு உண்டாயிற்று. பைரவியானவள் படைத்துக் காத்தருள்பவள்; அவளே மோக்ஷத்தையும் தருபவள். அத்தகைய கடவுளின் புனிதமான பூஜாபீடத்தை மனித ரத்தத்தினால் மாசுபடுத்தும் தந்த்ர மார்க்கத்தை அவள் வெறுத்தாள். பிற உயிரை வதைக்க அவள் மனம் இடம் தரவில்லை. இது ஒன்றைத் தவிர்த்து மஹாதேவிக்கு அவள் செய்துவந்த தொண்டில் ஒரு குறையும் கண்டுபிடிக்க முடியாது.

திரிலோக ஜனனியும், ஸுகதுக்கங்களைத் தந்து ஆட்கொள்பவளுமாகிய அந்த மஹா பைரவி கனவில் தோன்றி, தனக்கு உயிரைச் சமர்ப்பிக்கும்படி கபால குண்டலைக்குக் கட்டளையிட்டிருக்கிறாள். அந்த ஏவலைக் கபாலகுண்டலை நிறைவேற்றாமலா இருப்பாள்?

நீங்களும் நானும் அவளைப்போல் பிராணனைத் துறக்கத் துணியோம். வாழ்க்கையில் சுகம் அனுபவிக்க வேண்டுமானால் உயிர்தானே முக்கியம்? இன்பத்தை எதிர்பார்த்துத்தானே இந்தச் சம்சாரச்சுழலில் சிக்குண்டோம்? துயரை விரும்பி அல்லவே. நம்முடைய வினைப் பயனால் இதற்குச் சற்றுப் பங்கம் விளைந்தால் துக்க ஸாகரத்தில் ஆழ்ந்துவிட்டதாக எண்ணி அரற்றுகிறோம். ஸுகத்தின் நடுவே ஒரு சொட்டுத் துக்கம் கலந்து விட்டால் நமக்கு ஸஹிக்கவில்லையே! இதனால் ஸுகமே வாழ்க்கையின் லக்ஷ்யம், துக்கம் நடுவில்வரும் கோளாறே தவிர வேறல்ல என்ற சித்தாந்தம் வேரூன்றிவிடுகிறது.

கவலையற்ற வாழ்வைத்தானே யாவரும் விரும்புவார்கள்? துக்கத்தை யாராவது வருந்தியழைப்பார்களா? ஸுகமே இந்த வாழ்க்கையின் மூலம்; அதை ஒருபோதும் நாம் மறக்கமாட்டோம். ஆனால் இந்த ஸம்ஸார பந்தத்தில் நம்மைப் பிணைப்பது ஆசைதான்! கபாலகுண்டலைக்கு அந்தப் பந்தம் இல்லை. ஆகையால் அவளைக் கட்டிப் பிடிக்க யாரால்தான் முடியும்?

பந்தத்தை மீறிச் செல்பவர்களின் வேகம் தடுத்தற்கரிது. நெடுங்கோட்டினின்று இழிதரும் அருவியின் விசையை யாரால் தடுக்கமுடியும்? காற்று அந்நீரைச் சிதற அடிக்கும்போது, அதை நிறுத்த யாரால் ஆகும்? கபாலகுண்டலையின் சித்தம் அலைபட்டால் அதைத் தணிப்பவர் யார்? மழகளிறு மதம்கொண்டால் அது யார் கைக்கு அடங்கும்? கபாலகுண்டலை தன் நெஞ்சைச் சுட்டி, "இறைவனின் பாதமலரில் ஏன் உயிரை ஸமர்ப்பணம் செய்துகொள்ளக்கூடாது? பஞ்சபூதங்கள் சேர்ந்த இவ்வுடல் இருந்து என்ன பிரயோஜனம்?" என்று வினவினாள். இந்தக் கேள்விக்கு நிச்சிதமான பதில் கிடைக்கவில்லை. வாழ்க்கையில் அவளுக்கு வேறெந்தப் பந்தமும் இராது போனாலும் பஞ்சபூதங்களுக்கு ஒரு பந்தம் இருந்தது. தரையை நோக்கியவாறு கபாலகுண்டலை காட்டு வழியே சென்றுகொண்டிருந்தாள். ஒரு விஷயத்தைக் குறித்து அதே நினைவாக லயித்துவிட்டால் மானிடன் தன்னைச் சுற்றி நிகழ்வதை மறக்கிறான். உண்மையில் நிகழாத் தோற்றங்களைக்

காண்கின்றான். கபாலகுண்டலை அத்தகைய நிலைமையில் இருந்தாள்.

மேலே ஆகாயத்திலிருந்து ஒரு வாணி அவளுடைய செவிகளுக்கு, "குழந்தாய்! இதோ உனக்கு வழி காட்டுகிறேன்" என்று சொல்வதுபோலிருந்தது. கபால குண்டலை திடுக்குற்று மேலே நோக்கினாள். ஆகாச மண்டலத்தில் நீருண்ட கார்முகில் அனைய ஒரு வடிவம் குருதி வழியும் நர கபாலங்களை மாலையாக அணிந்து விளங்கியது. மனிதக் கரங்கள் தொடுத்த மேகலை அரைதனில் ஆடியது. இடது கையில் மண்டையோடு. உதிரச்சேறு படிந்த அவயவங்கள். ரௌத்திரம் வீசும் கொடிய நயனங்கள். நுதல்மேல் தூவெண் மதிப்பிறை. ஊழ்முடிவில் திகழும் கோலத்தில் ஸாக்ஷாத் பைரவியே தோன்றித் தன் வலது கரத்தைத் தூக்கிக் கபாலகுண் டலையை அழைப்பது போலிருந்தது.

கபாலகுண்டலை வானம் பார்த்தபடியே நடந்து சென்றாள். சூல்கொண்ட மேகம்போன்ற அவ்வுருவம் விண்ணிடை முன்னால் சென்றுகொண்டே இருந்தது. கங்காளமாலினியின் தேக உறுப்புக்கள் சிற்சில சமயம் மேகங்களிடையே மறைவதும் தோன்றுவதுமாய் திவ்வியக் காட்சி அளித்தன. கபாலகுண்டலை அதை விட்டு கண்பிரியாது சென்றாள்.

நவகுமாரனுக்கோ, காபாலிகனுக்கோ இத்தகைய அபூர்வக்காட்சி எதுவும் தென்படவில்லை. மதுவின் வேகம் தலைக்கேறிய நவகுமாரன் கபாலகுண்டலை பராக்காக மெல்லக் காலடிவைத்துச் செல்வது பொருத

வனைத் தன் கூட்டாளியைப் பார்த்து, "காபாலிகனே!" என்றான்.

"என்ன?" என்று குரல் கொடுத்தான் காபாலிகன்.

"மீண்டும் ஒருமுறை என் வேட்கையைத் தணிக்க நறவ் ஈவாய்."

காபாலிகன் உடனே அவனுக்கு மதுவை வழங்கினான்.

"இன்னும் ஏன் தாமதம்?" என்றான் நவகுமாரன்.

"என்னால் தாமதமில்லை?" என்று உரைத்தான் காபாலிகன்.

நவகுமாரன் அச்சம் தரும் கண்டத்வனியில் "கபாலகுண்டலே!" என்று கூப்பிட்டான்.

கபாலகுண்டலையின் ஸ்வப்னம் கலைந்தது. அந்தப் பயங்கர முழக்கத்தினால் அவளது குலை நடுங்கிற்று. இதுவரை யாருமே அந்தப் பெயரால் அவளைக் கூப்பிட்டதில்லை. திரும்பிப் பார்த்தாள். நவகுமாரனும் காபாலிகனும் தன்னெதிரே வருவது தெரிந்தது. முதலில் அவர்களை அறிந்துகொள்ள முடியவில்லை.

"நீங்கள் யார் - யமதூதர்களா?" என்றாள் கபாலகுண்டலை. உடனே அவர்கள் இன்னாரென்று புரிந்ததும், "இல்லை இல்லை, தந்தையே! பலி இடுவதற்கு என்னைத் தேடி வருகிறீர்களா?" என்றாள்.

நவகுமாரன் தன் கடினமான பிடிக்குள் கபாலகுண்டலையைப் பற்றிக் கொண்டான். காபாலிகன் கருணை ஒழுகும் தேன் மொழியில், "என் குழந்தையே! எங்களுடன் வா" என்றதும் மயானத்திற்குச் செல்லும் பாதையைக் காட்டினான்.

கபாலகுண்டலை அம்மஹா பயங்கரி காட்சி தந்த வானவெளியில் கண்களைச் செலுத்தினாள். சமர் அரங்கில் நடமாடும் செவ்வியள் இடிஇடியென நகைத்தாள். மூவிலை நெடுவேலை நீட்டிக் காபாலிகன் செல்லும் திசையைக் குறிப்பிட்டாள். கபாலகுண்டலை விதி இழுத்துச் சென்ற வழியே பேச்சின்றிக் காபாலிகன் பின்னாலேயே நடந்தாள். நவகுமாரன் தன் இரும்புப் பிடியிலிருந்து அவளைச் சற்றும் விடுவிக்கவில்லை.



9

மயானம்

"நடுங்குநோய் செய்தவர் நல்காமை நினைத்தலிற்
கடும்பனி கைம்மிகக் கையாற்று ளாழ்ந்தாங்கே
நடுங்குநோ யுழந்தவென் னலனழிய மணனோக்கி
யிடும்பைநோய்க் கிகுவன போலுமஃ தெவன்கொலோ?"

— நெய்தற்கலி

'காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்' — சிலப்பதிகாரம்

சந்திரிகையும் மங்கியது. வானெங்கும் புவியெங்கும் பேயிருள் சூழ்ந்தது. காபாலிகன் தன் கோரபூஜையை நடத்தும் இடத்திற்குக் கபாலகுண்டலையை அழைத்துச் சென்றான். கங்கையாற்றின் மத்தியில் ஒரு மணற் பரப்பு. அதை அடுத்தாற்போல் மயானம். பெருக்கு ஓடும் காலங்களில் அவ்வாற்றிடைக்குறையில் சிறு ஓடை யாகவே நீர்செல்லும்; வற்றிய காலங்களில் பொட்டுக் கூடத் தண்ணீர் இராது. மயானத்தின் எதிர்முகமாக ஆறு வெகு உயரத்திலிருந்து கீழே பாய்கிறது. அங்கு ஆழம் அதிகம். நீர்வீழ்ச்சியினால் பக்கத்திலுள்ள மணற் கரை பெயர்வதுண்டு. சில சமயம் பெரிய மணல்மேடு கள் திடீரென ஜலத்தின் விசையினால் கீழே அறுத்துக் கொண்டு பயங்கர சப்தத்துடன் ஆற்றில் மறைந்து போகும். வேள்வி நடக்கும் இடத்தில் விளக்கே இல்லை. காட்டு விறகில் மட்டும் சிறு கொழுந்தாக நெருப்பு

4100

எரிந்துகொண்டிருந்தது. அதன் ஒளியில் மங்கலாகத் தோற்றும் பிரேதபூமி பின்னும் பயங்கரக்காட்சி அளித்தது. பூஜைக்கு வேண்டிய பொருள்கள், பலிக்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் சித்தமாக இருந்தன. ஆற்றின் படுகை வெகுதூரம் இருளை நோக்கிப் பரவியிருந்தது. வேனிற்கால் தடையுருது கங்கா ஜலத்தின்மீது பாய்ந்து வீசியது. ஆற்றில் சிற்றலைகள் எழுப்பும் சலசலப்புச் சப்தம் ஆகாயத்தை நிரப்பியது. இடுகாட்டில் பிணந்தின்று உழலும் விலங்குகளின் விகாரக்கூச்சல் சற்றைக்கொருதரம் கேட்டது.

காபாலிகன், நவகுமாரனையும் கபாலகுண்டலையையும் உற்றவிடத்தில் தருப்பாசனத்தின்மீது வீற்றிருக்கச் செய்ததும், முறைப்படி பூஜையைத் தொடங்கினான். உகந்த சமயத்தில் கபாலகுண்டலைக்கு ஸ்நானம் செய்விக்கும்படி நவகுமாரனுக்கு உத்தரவிட்டான். கபாலகுண்டலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நவகுமாரன் அம்மயானத்தின் வழியாக ஸ்நானம் செய்விக்க அழைத்துச் சென்றான். போகும்வழியில் பலவிடங்களில் எலும்புத் துண்டுகள் அவர்களுடைய கால்களைக் குத்தி வருத்தின. நவகுமாரனுடைய கால் இடறி ஜலம் நிறைந்த ஒரு மட்பாண்டம் உடைந்துவிட்டது. அதன் சமீபமாகவே பிணம் ஒன்று கிடந்தது. அந்திமக் கிரியை இராத எந்த அனாதையின் சவதேகமோ அது? கபாலகுண்டலை அதைச் சுற்றிக்கொண்டு சென்றாள். நவகுமாரன் அதைக் காலால் மிதித்துக்கொண்டே நடந்தான். நாலு பக்கமும் மாமிசம் உண்ணும் பிராணிகள் அலைந்துகொண்டிருந்தன. மனிதர் வரும் அரவம் கேட்டு அவை

அவலக்ஷணமான குரலில் கூச்சலிட்டன. சில அவர்களைக் கவ்வித் தின்பதற்காக நெருங்கின ; சில பயந்து ஓடின. நவகுமாரனுடைய கை நடுங்குவதை உணர்ந்தாள் கபாலகுண்டலை. அவள் மட்டும் எதற்கும் அஞ்சாமல் நடுக்கமின்றி நின்றாள்.

"உங்களுக்குப் பயமாயிருக்கிறதா என்ன?" என்று நவகுமாரனைக் கேட்டாள்.

சாராயத்தின் மயக்கம் தெளிந்து கொண்டே வந்தது நவகுமாரனுக்கு. அவன் ஆழ்ந்த குரலில், "பயத்தினால் அல்ல மிருண்மயீ !" என்றான்.

"பின் ஏன் நடுங்குகின்றன கை கால்கள் ?"

இதை வினவிய குரலோசை ரமணிகளின் கண்டத்தினின்றுதான் எழும். முடிவுக் காலத்தில் மயான பூமியில் இத்தகைய இன்குரலில் கபாலகுண்டலை பேசுவாள் என்று யார் எதிர்பார்த்தார்கள் ? "பயமில்லை, என்னால் அழமுடியவில்லை. ஏதோ ஆக்ரோஷத்தினால் என் உடல் நடுங்குகிறது" என்றான் நவகுமாரன்.

"எதற்காக அழவேண்டும் ?" - மறுபடியும் கபாலகுண்டலையின் கண்டத்திலிருந்து இனிமை பயக்கும் அதே குரலோசை. "ஏன் அழவேண்டுமோ? மிருண்மயீ ! உனக்குத் தெரியாது. அவ்வழகிய ரூபத்தைக் கண்டு மயங்கி இருக்கவில்லையா நீ ?" என்று சொல்லும்போதே நவகுமாரனுடைய கண்டத்தில் வேதனை கடைந்தது. "உன் இதயத்தை இந்த மயானத்திலா வைத்துவிட்டு வந்தாய் ?" இதைக் கூறியதும் நவகுமாரன் கதறி அழுதவண்ணம் கபாலகுண்டலையின் காலடியில் தொப்பென்று சாய்ந்தான்.

" மிருண்மயீ !......கபாலகுண்டலே...... என்னைக் காப்பாற்று. உன் காலடியில் விழுந்துவிட்டேன். என்னைத் துரோகம் செய்யவில்லையென்று உன் வாயால் ஒருதரம் சொல்லிவிடேன். வாய் திறந்து சொல்லேன். உன்னை என் மார்போடு அணைத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிவிடுவேன்" என்று மனமுருகக் கதறினன்.

கபாலகுண்டலை நவகுமாரனைத் தொட்டு எழுப்பினாள்.

" நீங்கள் அதைப்பற்றி என்னைக் கேட்டால் தானே?" என்ருள் மெல்லிய குரலில்.

இந்தப் பேச்சு நிகழும்போது இருவரும் நீரோட்டத்தின் சமீபமாக நின்றுகொண்டிருந்தனர். கபாலகுண்டலை நதிக்கு முதுகுப்புறத்தைக் காட்டி நின்றிருந்தாள். அவளுக்குப் பின்னுல் ஓர் அடிவைத்தால் அகாத ஜலம். நீரின் விசையும் மும்முரமாகிக்கொண்டே வந்தது. கபாலகுண்டலை மணல் மேட்டில் நின்றிருந்தாள்.

" அதைப்பற்றி நீங்கள் ஏன் விசாரிக்கவில்லை என்னை?" என்ருள்.

நவகுமாரன் அசடன்போல், " என் மூளை கலங்கிப் போய்விட்டது. எதைக் கேட்பது சொல்லேன், மிருண்மயீ? அதைச் சொல்லேன்! சொல்லேன்! சொல்லேன்! என்னை மீட்பாய்! வீட்டிற்குப் போகலாம் வா......" என்று கூவினுன்.

" கேட்டிருந்தால் நான் பதில் சொல்லியிருப்பேன். இன்று நான் வனத்துள் சந்தித்த ஆள் யார் தெரியுமா? பத்மாவதிதான்; கள்ளப் புருஷன் அல்ல. நான் பதித் துரோகியல்ல. உங்களுடைய சந்தேகம் தெளிந்து

விட்டதா? ஆனால் இனி நான் வீட்டிற்குத் திரும்புவ தென்னவோ நடவாத காரியம். பவானியின் சரணங் களில் என் உடலை, என் உயிரை, எனது வாழ்வை ஸமர்ப்பிக்க உறுதி கொண்டுவிட்டேன். அதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்...... ஸ்வாமி! நீங்கள் வீட்டிற்குத் திரும்புங்கள்! நான் சாகப்போகிறேன். எனக்காக அழுது கண்ணீர் சிந்தவேண்டாம்" என்றாள்.

"கூடாது... மிருண்மயீ!... கூடாது" என்று உரத்த த்வனியில் கூவி நவகுமாரன் கபாலகுண்டலையை மார்போடு தழுவிக்கொள்ளக் கைகளை விரித்துக் கொண்டு முன்னேகினான். அவ்வளவுதான், கபால குண்டலையை அதற்குமேல் அவன் காணவில்லை. காற்று அடிக்கவே ஆற்றுநீர் கரைமேல் மோதியது. கபாலகுண்டலை நின்றிருந்த மணற்கரை கீழே அறுபட் டது. அம்மணல்மேடு பயங்கர ஓசையுடன் சரிந்து பிரவாகமாக ஓடும் நதியில் விழுந்தது. கபாலகுண்டலை மறைந்துபோனாள்.

மேடு சரியும் சப்தம் நவகுமாரனுடைய செவிக்குக் கேட்டது; கபாலகுண்டலை திடீரென மறைந்துபோன தையும் பார்த்தான். உடனே அவன் சுழன்று செல்லும் நீர்ப்பெருக்கில் தாவிக் குதித்தான். நீந்திக்கொண்டே ஆற்றுநீரில் கபாலகுண்டலையைத் தேடி அலைந்தான். அவள் அகப்படவில்லை. அவனும் எழுந்திருக்கவில்லை.

* * *

காபாலிகன் ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு சென்ற இருவரும் திரும்புவார்கள் திரும்புவார்களென்று வெகு நாழிகை எதிர்நோக்கினான். நேரமாகவே அவனுக்

குச் சந்தேகம்பிறந்தது. அவர்கள் தன்னை ஏமாற்றிவிட்டு வீட்டிற்குத் திரும்பிப் போயிருப்பார்களோ என்று எண்ணிக் காபாலிகன் தன்னிடத்தை விட்டெழுந்து மயானத்தைக் கடந்து ஆற்றங்கரையை அடைந்தான். அங்கு எவருமே இல்லை. நதிஜலத்தில் ஏதோ ஒன்று மிதந்து திடீரென மூழ்கியதைக் கவனித்தபோது அது ஒரு மனிதனுடைய உடலெனக் கண்டான். சரேலென வெள்ளத்தில் குதித்து அனுயாசமாகத் தான் பார்த்த தேகத்தைக் கரையில் இழுத்துப் போட்டான். நவகுமார னுடைய பிரக்ஞையற்ற உடலெனத் தெரிந்தது. கபால குண்டலையும் ஜலத்தில் மூழ்கிவிட்டாளென ஊகித்து அவன் மறுபடியும் நதியில் இறங்கி அவளைத் தேட லானுன். ஆனால் மூழ்கி மறைந்தவள் மறைந்தவளே.

கரையேறியதும் நவகுமாரனுக்கு ஸ்மரணை வரு வதற்கான வழிகளைச் செய்தான் காபாலிகன். நினைவு வந்ததும் நவகுமாரன் நீண்ட பெருமூச்சுடன், "மிருண் மயீ! மிருண்மயீ!" என்று ஓலமிட்டான்.

"மிருண்மயி எங்கே?" என்று காபாலிகன் வினவியதற்கு, "மிருண்மயீ! மிருண்மயீ! மிருண்மயீ!"* என்ற பதங்களே நவகுமாரனுடைய வாயினின்று வந்தன.

நான்காவது பாகம் முற்றிற்று

---

*முதற் பதிப்பில் இவ்வாறு உள்ளது; பின் வந்த பதிப்புக்களில், "எல்லையற்ற கங்காநதியின் பிரவாகத்தில் வேனிற் காற்று நீரில் திரைகளை எழுப்ப, கபாலகுண்டலையும் நவகுமாரனும் எங்கு மறைந்தார்களோ?" என்ற மாறுதல் காணப்படுகிறது.

அனுபந்தம் 1

போர்த்துக்கீஸ் கடற்கள்ளர்

கி. பி. 1528-ஆம் ஆண்டில் இந்தியாவில் முதன் முதலாகப் போர்த்துக்கீஸியர்களே காலெடுத்து வைத்து மங்களூர், கொச்சி, ஸிலோன், கோவா முதலிய இடங்களில் வியாபார ஸ்தலங்களை ஸ்தாபனம் செய்தனர். வங்காளத்தில் கி. பி. 1538-இல் ஜான் ஸில்வேரியா (John Sylveria) என்னும் போர்த்துக்கீஸியன், யாத்ரிகன் என்ற முறையில் அந்நாட்டு ஆசார விவகாரங்களையும் வாணிப விஷயங்களையும் நன்கு கண்டறிந்தபிறகு அங்கு வியாபார வசதிகளைத் தேடிக்கொண்டான். பிற இடங்களில் அவர்கள் ராஜ்யஸ்தாபனம் செய்ய முயன்றதுபோல் வங்காளத்தில் பிரயத்தனம் செய்யவில்லை. போர் வீரர்களாகவே தோன்றினர். 1538-ஆம் ஆண்டில் போர்த்துக்கீஸியருள் ஒரு சாரார், வங்காளத்தில் நுழைந்து, அச்சமயம் கௌடத்தில் ஆட்சிபுரிந்த அரசனின்கீழ் ஸைநிகர்களாக அமர்ந்தனர். வங்காளத்தில் இவர்களுக்குக் 'கள்ளர்' என்ற பட்டம் கிடைத்ததற்குக் காரணம்-கீழ்வங்காளத்தில் ஓடும் நதிகளில் படகுகளைச் செலுத்தி இவர்கள் நீர்க்கள்ளர்களாகத் திரிந்து நல்ல வயதுடைய ஆடவர்களையும் சிறுவர்களையும் அபகரித்து, கோவாவில் கூடும் அடிமைச்சந்தையில் அவர்களை விற்றோ அல்லது தம் மதத்தில் சேர்த்துக் கொண்டோ விடுவார்கள். கியாதிபெற்ற யாத்ரிகரான பெர்னியர் இக்கொள்ளைக் கூட்டத்தாரைப்பற்றி எழுதியுள்ளார்: "இவர்கள் சமுத்திரக் கரையோரமான ஊர்களிலும், நதி மூலமாக உள் நாடுகளிலும் கிராமாந்தரங்களிலும் புகுந்து கொள்ளையடித்தும், வீடு வாசல்களைக் கொளுத்தியும் பெண்களைக் கற்பழித்தும் பலவிதமான கொடூரங்களைப் புரிந்த மாபாவிகளாக விளங்கினர்."

"In 1538, a large body of Portuguese entered Bengal as military adventurers in the service of the King of Gour ; * * * they used to engage in piratical voyages to the lower districts of Bengal, kidnapping the natives and pillaging and destroying the populated villages and towns at the mouth of the Ganges"—*The good old days of Honourable John Company, Vol. III p. 160-85.*

கங்கா ஸாகரம் :

கங்காநதி கடலில் (வங்காள விரிகுடாவில்) கலக்கும் இடம். பிரஸித்திபெற்ற தீர்த்தம். ஸாங்க்ய மத கர்த்தாவான கபிலர் ஸகர புத்ரர்களைத் தம் சாபத்தினால் சாம்பராக்கிய இடம். கங்கா ஸாகரத்தில் கபிலாச்ரமம் என்ற இடம் இப்போதும் இருக்கிறது. பிரதி வருஷம் மார்கழி மாதத்திலும் மகர ஸங்க்ராந்தியின் போதும் ஆடம்பரத்துடன் விழா கொண்டாடப்படுகிறது. கங்கா ஸாகரத்தில் சிசுக்களை எறிந்துவிடும் வழக்கம் (ஸந்தான விஸர்ஜ்ஜனம்) ஒரு சமயம் வங்காளத்தில் பிரபலமாயிருந்தது. இப்போது அவ்வழக்கம் அடியோடு ஒழிந்தது.

காபாலிகர் :

(கபாலம் - மனிதனுடைய மண்டையோடு) மண்டையோட்டை உபயோகிப்பவர்கள் வாமாசாரமென்னும் தாந்த்ரிகமார்க்கத்தை வழிபடுவோர். நர கபாலத்தின் பாதியைக் கையிலேந்தி அதையே குடிக்கும் பாத்திரமாகவும், உண்ணும் கலமாகவும் வைத்துக்கொள்வார்கள். கழுத்தில் அஸ்திமாலையை (எலும்புமாலை) அணிவர். திருநீறு பூசிய மேனியராய் நெற்றியில் கரிக்கோடு இட்டுக்கொண்டு மயானங்களில் வசிப்பார்கள். தம் இஷ்டதேவதையைத் திருப்தி செய்ய நரபலி தருவார்கள். மது, மாமிசம், மத்ஸ்யம், மைதுனம், முத்திரை இவ்வைந்தையும் வழக்கத்தில் கொண்டு காளியை வழிபடுவார்கள்.

அனுபந்தம் 2

'கபாலகுண்டலா' தோன்றின வரலாறு

பங்கிம் சந்த்ரரின் வாழ்க்கையில் ஏற்பட்ட சில அரிய அநுபவங்களே இந்தக் **கபாலகுண்டலாவை** இயற்ற அவரைத் தூண்டியதாகத் தெரிகிறது. 1838-இல் ஹிஜ்லியைச் சேர்ந்த காந்தியில் (Contai) அவர் ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தார். அவ்வூருக்கு அருகில் தௌலத்பூர், தரியாபூர் என்ற பெயருள்ள இரு கிராமங்கள் குடிவளமற்றுக் காடு முளைத்த இடமாக விளங்கின. தௌலத்பூர் மட்டும் நதிக்கரையை ஒட்டியிருந்தது. ஒரு கரையிலிருந்து பார்த்தால் எதிர்க்கரை புலப்படாதவாறு ஆருனது அவ்விடத்தில் அவ்வளவு அகலம். அவ்விடத்து இயற்கையின் வனப்பே பங்கிமின் கற்பனையில் கபால குண்டலையை உருவாக்கியது. பல யோஜனை தூரம் வரிசையாகத் தென்படும் மணற்குன்றுகள். அங்கே மிகவும் தொன்மையானதும், ஜீர்ணதசையடைந்ததுமான காளியின் கோயில் ஒன்று உண்டு. பங்கிம் அடிக்கடி அதைப் பார்க்கப் போவது வழக்கம். அதன் பயனுகவே **'கபாலகுண்டலா'** உலகத்தவருக்குக் கிடைத்தது.

காந்தியில் இருக்கையில் பங்கிம் சந்த்ரர் காபாலிகன் ஒருவனைச் சந்திக்க நேரிட்டது. அவருடைய தம்பியின் புத்திரர் **சசீச சந்த்ர சட்டோபாத்யாயர்** இந்த விஷயத்தைக் குறித்துப் பின்வருமாறு எழுதியிருக்கிருர் :— "அவர் காந்தியில் இருந்த சமயம் ஒருநாள் நடுநிசி, அவரது வீட்டு வாயிற்கதவை யாரோ ஒருவன் அடிக்கடி தட்டவே, வேலையாட்கள் எழுந்து கதவைத் திறந்தபோது எதிரே ஒரு ஸந்நியாஸி நிற்பதைக் கண்டனர். பயந்துபோய் அவர்கள் 'யாரைத் தேடிக்கொண்டு வந்தீர்கள்?' என்று விசாரித்

க. கு. 14

தனர். 'பாபுவை நான் அவசியம் காணவேண்டும்' என்றார் அந்த ஸங்யாஸி. வேலையாட்கள் சற்றுத் தயங்கி விட்டு, அப்புறம் உள்ளே சென்று பங்கிம் பாபுவை எழுப்பினர். அவர் வெளியே வந்து நெடிய வடிவுடைய ஒரு ஸங்நியாஸி கையில் மண்டையோடு ஏந்திய வண்ணம் நிற்பதைக் கவனித்தார். தலையில் ஜடாபாரம், தாடியும் மீசையும் உடைய விசால முகமண்டலம், கழுத்தில் ருத்தி ராக்ஷ மாலை, இடுப்பில் புலித்தோல், நெற்றியில் கரிக்கோடு, உடலெல்லாம் விபூதி தூளிதம். இவ்வாறான கோலத்தி லிருந்த அவர் ஒரு காபாலிகரென உணர்ந்தார் பங்கிம். தம்மை எதற்காக அழைத்தாரென்று பங்கிம் அவ்வதிசய மனிதரை வினவ, காபாலிகர், 'என்னுடன் வா' என்றார். பங்கிம், 'எங்கே?' என்றதற்கு, 'கடற்கரைக்கு' என்றார் அவர். 'வ்ரமுடியாது போம்' என்று விரட்டிவிட்டார் பங்கிம்.

மறுதினம் அதே நள்ளிரவில் வந்து பங்கிமின் தூக்கத் தைக் கலைத்தார் அவர். மூன்றாவது நாளும் இவ்வாறே நடந்தது. காபாலிகர் வந்த காரியம் பலிக்கவில்லை. கடைசியில் ஓர் இரவு அவர் திப்பத் பாஷையில் செதுக்கிய சாஸனங்களையும், சுவடிகளையும் எடுத்துக்கொண்டு நேரே பங்கிமின் சயன அறையை அடைந்து அவரை எழுப்பி, 'பங்கிம் சந்த்ரா! நான் எவ்வளவோ கஷ்டத்தின்பேரில் உன்னைக் காணவந்தேன். ஆனால் நீ முகம் கொடுக்கவில்லை. போனது போகட்டும். எல்லாம் மஹா மாயையின் உள்ளம் அல்லவா? இதுவே நான் உன்னைக் கடைசி முறையாகக் காணவருவது. இத்தனை தினங்களாகப் பாதுகாத்துவந்த இந்தப் பொக்கிஷத்தை நேராக உன் கையில் தர இங்கு வந்தேன். இந்த அபூர்வமான செல்வத்தைக் காப்பாற்றக் கூடியவன் நீ ஒருவனே! உன் கையில் ஒப்பித்துவிட்டேன்.

நான் புரியும் ஸாதனைகளுக்கு இவை இடையூருக நின்றன. என் கவலையெல்லாம் ஒழிந்தது. நான் வருகிறேன், அப்பா! நீ பெரிய கீர்த்திமாளுகி, அழியாப் பெயர் எடுக்கவேண்டி ஆசீர்வதிக்கிறேன். ஸ~கத்தின் உச்ச சிகரத்தை விரைவில் அடைவாய்!' என்றதுமே அவர் மாயமாய் மறைந்து போனார். மறுநாள் அந்தக் காபாலிகரைத் தேடிப் பிடிக்கப் பங்கிம் எவ்வளவோ பிரயாசைப்பட்டார். ஆனால் அவருடைய தரிசனம் கிடைக்கவே இல்லை. இது நிகழ்ந்த கொஞ்ச காலத்திற்கெல்லாம் அனைவரும் படித்து இன்புறக் **'கபாலகுண்டலா'** வெளியே வந்தாள்.

பங்கிம் சந்த்ரர் காபாலிகரைச் சந்தித்த பிறகு ஒரு சமயம் நாடகாசிரியரான **தீனபந்து மித்ரர்** பங்கிமைக் காண வந்திருந்தார். இரவு வெகுநேரம் நண்பர்கள் இருவரும் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். **'கபாலகுண்டலா'** இன்னும் பிறக்கவில்லை. பங்கிமின் கற்பனைக் கர்ப்பத்துள் வளர்ந்து கொண்டிருந்தாள். அப்போது தீனபந்துவை அவர் வினவியதாவது: 'குழந்தைப் பருவத்திலிருந்து பதினறு வயதுவரை ஒரு பெண் கடற்கரையில் காபாலிகன் ஒருவனுல் வளர்க்கப்பட்டு வருகிருள். அவனைத் தவிர வேறு எந்த ஆடவனுடனும் அவள் பழகியதில்லை. வனத்தில் திரிவதுதான் அவளுடைய வேலை. இந்தப் பெண்ணை ஒருவன் விவாகம் செய்துகொண்டு ஸம்ஸாரம் நடத்துகிருனென்று வைத்துக்கொள். ஸமூகத்தவருடன் பழகுங்கால் அவளுக்குள்ள இயல்பு எவ்வளவு தூரம் மாறிவிடும்? அவளை வளர்த்த காபாலிகனை மறந்துவிடுவாளா?' இதை வினவும்போது அந்த இடத்தில் **ஸஞ்ஜீவ சந்த்ரரும்**, **அக்ஷயகுமாரரும்** இருந்தார்கள். **ஸஞ்ஜீவ சந்த்ரர்** ரஸிகர்; வேடிக்கையான பேர்வழி. 'ஏழை ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டால் அவள் ஒரு திருடியாவாள். காபாலிகனிடத்தில்

தின்பதற்கு ருசிகரமான உணவு இராத குறையால், அவள் நல்ல ஆகாரங்களைத் திருடிப் புசிப்பாள். நகைநட்டுக்களைப் பார்த்தே அறியாததால் அவள் பிறருடைய பொருள் களைக் கவர முயல்வாள்' என்றார். அப்புறம் அவர் தம் குறும்புத்தனமான பேச்சை விட்டுவிட்டு, உண்மை யான அபிப்பிராயத்தை வெளியிட்டார். 'சில நாட்கள் வரை தன்னை வளர்த்த காபாலிகனை மறக்கமாட்டாள். குழந்தை குட்டிகளைப் பெற்றெடுத்ததும் தன் மக்கள் கணவன் இவர்கள்பால் படரும் அன்பினால் ஸம்ஸாரத்திற்கு உகந்தவளாகிவிடுவாள். பழைய வாசனை அறவே அற்றுப் போகும்'' என்றார். பங்கிமின் முகபாவத்திலிருந்து இந்த ஸமாதானம் அவருக்கு ஏற்கவில்லையென்றே பட்டது. தீன பந்து தம் சொந்த அபிப்பிராயத்தை எடுத்துரைக்கவில்லை. இதற்கு இரண்டு வருஷங்கள் கழித்தே இலக்கிய வானில் 'கபாலகுண்டலா' உதயமானாள்.

4100

தேவி சௌதுராணி

பங்கிம் சந்த்ரர் உயர்தரமான நாவல்களுள் ஒன்று. வங்காளியிலிருந்து மொழிபெயர்த்தவர் ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், பி. ஏ. எல்லோராலும் புகழப்படும் நூல்.

—— ரூ. **1—8—0** ——

The Mail :—The Alliance Company have rendered valuable service to the cause of Modern Tamil Literature by their Publications which include collections of Original Tamil Short Stories and a series of Translations of Hindi & Bengali Novels. Bankim's Novels are of absorbing interest, possessing the 'take-it and finish' quality. They are based on facts of history, and the best ideals are inculcated by them.

தினமணி :— * எல்லோருடைய மனத்தையும் கவரும் வண்ணம் வரையப்பட்டிருக்கிறது. இதைப் படிப்பவர் ஒவ்வொருவரும் இதை மொழிபெயர்ப்பு என்று எண்ணமுடியாது. புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியது முதல் முடியும் வரையில், கீழே வைக்க முடியாதபடி அவ்வளவு அழகாக, உணர்ச்சி ததும்ப, செவ்விய நடையில் இதை ஸ்ரீ ராஜகோபாலன் எழுதியிருக்கிறார். தமிழர்கள் இதை விரும்பி வரவேற்பார்களென்பதில் சிறிதேனும் ஐயமில்லை. புத்தகத்தை ஆடவர், பெண் மக்கள், மாணவ மாணவிகள் அனைவரும் அவசியம் படிக்கவேண்டும்.

* * *

தனவணிகன் :— * இது சரித்திர சம்பந்தமான நாவலாய் இருப்பினும், அநேக அரிய கருத்துக்களைத் தன்னிடையே கொண்டிருக்கிறது. * கதை ருசியாயிருக்கிறது. தத்துவம் நிரம்பிய கதைகளில் இது ஒன்று. மொழிபெயர்ப்பு நன்றாயிருக்கிறது.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

கதைக் கோவை

ஓர் ஒப்புயர்வற்ற பிரசுரம்

40 - சிறந்த தமிழ்ச் சிறு கதைகள்

40 - பிரபல எழுத்தாளர்கள் எழுதியவை

:: **504** :: பக்கங்கள்	கிளேஸ் பதிப்பு	ரூ. **3—0—0**
	பேதர் வெயிட் பதிப்பு	ரூ. **3—8—0**

இந்நூலைப்பற்றிய அமுத மொழிகள்

Sunday Times—*The Alliance Company, that enterprising Publishers of Madras, deserve the thanks of all lovers of Tamil for their latest service to the language. Till now, they have been bringing out mostly brilliant translations of works of famed authors like *Bankim Chandra Chatterjee*, *Dr. Sarat Chandra Chatterjee*, *R. C. Dutt*, *Subhas Bose*. *Prem Chand* and others. *A few collections of Short Stories* also stand to their credit. But now in *Kathai Kovai*, they have surpassed themselves. * It is verily a *magnum opus and must find a place in every Tamil Home. Every Story in the volume is a complete success.*

ஹிந்துஸ்தான் :— * சிறப்பான பிரசுரம். இக்கோவையில் நவ ரஸங்களும் ரூபம் பெற்றிருக்கின்றன. 40 - ஆசிரியர்கள், 40-வித மனோபாவங்களைச் சித்தரிக்கின்றதால் இந்தத் தொகுப்பைப் படிப்பதில் சலிப்பு ஏற்படாது, ஏற்படவுமில்லை. கலா ரஸிகர்கள், கதையிலும் கருத்திலும் விருப்பமுள்ளவர்கள் இந்தக் கோவையைக் கட்டாயம் வாங்கிப் படிக்கவேண்டும். புத்தகத்தின் அச்சும், அமைப்பும், தோற்றமும் அல்லயன்ஸ் பிரசுரங்களுக்குச் சிகரம்போல் விளங்குகின்றன.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

பிரசண்ட விகடன் :— * கதைக் கோவையைப் போலவே, புத்தகமும் கருத்தையள்ளும் வகையில் வெகு அழகாகப் பதிக்கப் பட்டிருக்கிறது. *இப்புத்தகம் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்கவேண்டியது அவசியம்.

சக்தி :— தமிழிலக்கிய நவமலர்ச்சியின் கொழுந்து இந்நூல். இந்த நூல் ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்கவேண்டும். இது உபசாரமல்ல, உண்மை.

பாலர் கல்வி :— நவரசங்களையும் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்தும் காணக்கூடிய பல கதைகள் உள்ளன. * இக்காலத்தில் நல்ல தமிழ் நூல்களை அச்சிட்டு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியார் இவ்வளவு அழகான புத்தகத்தை வெளியிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்க தாகும்.

The Free Press :—A Notable Book. No Library of Modern Tamil Literature will be complete, it can be safely affirmed, *without this excellent volume.*

பாரத தேவி:— 40 - பேர்கள் எழுதிய சிறந்த சிறு கதைகளை யெல்லாம் திரட்டித் தமிழருக்கு இப்புத்தகத்தின் மூலம் தந்திருக் கும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் ஊழியம் முதலில் பாராட்ட வேண்டியதாகிறது. * இக்கதைக் கோவையை ஒவ்வோர் தமிழரும் கட்டாயம் படிக்கவேண்டியது. இப்புத்தகத்தைப் படிக்கத் தவறிய வர்கள் தமிழ் இலக்கியத்தில் வளர்ச்சிபெற்று வரும் புதிய வித்தை யைப் பார்த்து இன்புறத் தவறிவிட்டவர்களே யாவார்கள்.

The Indian Express :—All the Stories are good most of them exquisite and some profound. * The book is neatly printed and remarkably well got up.

Sri *T. K. Chidambaranatha Mudaliar, B. A., B. L., Retired Endowment Commissioner* :—*It is really a pleasure to see a book like your கதைக் கோவை. By means of the publication, you have in a way gauged the literary talents of the Tamil Nad. I heartily congratulate you on the publication.

விஜயா

டாக்டர் சரத் சந்த்ர சட்டர்ஜி எழுதிய நாவல்களுள் முதன்மையானது. "இந்திரா", "ரஜனி" என்னும் பங்கிம் சந்த்ரர் நாவல்களை மொழிபெயர்த்த ஸ்ரீ S. குருஸ்வாமி பி. ஏ., தமிழில் மொழிபெயர்த்தது.

—— ரூ. 1—8—0 ——

சிறப்புரைகளிற் சில

ஜோதி :— * வாசிப்பதற்குச் சுவையாயிருக்கிறது. ஸ்ரீ குருஸ்வாமி, இதைச் சுவை குன்றாமல் மொழிபெயர்த்திருக்கிறார்.

கலைமகள் :— * இந்நவீனம் படிப்பதற்கு மிக்க ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. ஒவ்வொரு புத்தகாலயத்திலும் வைப்பதற்கேற்ற நூல்.

The Mail :—The style of the translation is good & expressive and the story is free flowing.

ஜயபாரதி :— * மொழிபெயர்ப்பு நடை சிறப்பா யிருப்பதைக் குறிப்பிடவேண்டும். சரளமான பாஷையில், சொந்தத் தமிழ்க் கதைபோல், 'அந்நிய' சொற்றொடர் இல்லாமல் மொழிபெயர்த்திருப்பது, தமிழ் இலக்கியத்திற்கு ஒரு தொண்டெனக் கூற வேண்டும். புஸ்தகம் அச்சுப்பிழையில்லாமல் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. நல்ல பைண்ட் கட்டடத்திலிருக்கும் இப்புத்தகம் பிரசுராலயத்திற்குப் பெருமை யளிப்பதாகும்.

குமரன் :— * ஆடவரும் பெண்டிரும் படித்து இன்புறலாம். இதுமாதிரி வங்காள மொழியிலுள்ள பல இனிய கதைகளையும், நாவல்களையும் மொழிபெயர்த்துத் தமிழுலகுக்குத் தந்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் தொண்டு பெரிதும் போற்றத்தக்கது.

பாரதமணி :— * ஸ்ரீ குருஸ்வாமியின் மொழிபெயர்ப்பு வாசிப்பதற்கு எளிதாகவும் நல்ல ஓட்டம் கொண்டதாகவும் இருக்கிறது. நல்ல பைண்டில், இவ்வளவு அழகாக. ரூ. 1—8—0 விலைக்கு 300-பக்கங்கள் கொடுத்திருப்பது அல்லயன்ஸ் கம்பெனியாரின் சிறப்பாகும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

ஆனந்தமடம்

வங்காளி மூலத்திலிருந்து

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.,

மிக்க அழகாய் மொழிபெயர்த்தது

ரூ. 1—8—0

மதிப்புரைகளிற் சில

The Hindu :—The translation into Tamil *has been done remarkably well.*

தனவணிகன் :— * *தமிழ் மக்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல்களுள் இது ஒன்று. மொழிபெயர்ப்பு அருமையாய் இருக்கிறது.* **கண்கவர் முறையில் அமைந்த புத்தகம்.**

கலாசேவகி :— * *சொல் அமைப்பு இலகுவாயும், கற்பனை வெகு நேர்த்தியாயும், கதைப்போக்கு விருவிருப்பாயும் இருக்கிறது.*

நவசக்தி :— * *இந்தியாவுக்குச் சுதந்திர உணர்ச்சி ஊட்டியது* **ஆனந்தமடம்.** * *மொழிபெயர்ப்பு நன்றாயிருக்கிறது.*

ஹனுமான் :—இக்கதையின் போக்கே நூதன வசீகரம் படைத்தது. தேசீய ஆவேசத்தை ஊட்டும் இந்த நவீனத்தைப் படிக்கும் போது, ஒரு கதையைப் படிப்பதுபோன்ற உணர்ச்சியே நமக்கு ஏற்படவில்லை. மொழிபெயர்ப்பு என்ற எண்ணமும் நமக்கு உண்டாகவில்லை. எளிய லளிதமான தமிழ் நடை. உயர்ந்த நாவல்; நல்ல மொழிபெயர்ப்பு.

மணிக்கொடி :— *பங்கிம் பாபுவின் மூலத்திலுள்ள* **வேகம் பூராவையும்** *கொண்டுவந்திருக்கிறார்.* **அழகான வர்ணனைகளை நன்றாக மொழிபெயர்த்திருக்கிறார்.**

கலைமகள் :— * *வர்ணனைகள் எல்லாம் தத்ரூபமாகக் கண் முன் வந்து நிற்கின்றன. இயற்கை வர்ணனைகளை ஆனாயாசமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்.* **அரண்யத்தின் காட்சிகள், பஞ்சத்தின் கொடுமை, ஆனந்த மடம், சந்தானர்களின் போர் முதலியவை** *உயர்ந்த சித்திரங்கள்.*

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

ர ஜ னி

ஆசிரியர் : ஸ்ரீ. பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர்

மொழிபெயர்ப்பாளர் : **ஸ்ரீ. எஸ். குருஸ்வாமி, பி. ஏ.**

—— விலே அணு **14** ——

தனவணிகள் :— * உலகில் மனிதர்கள் அனைவரும் எதை விரும்புகின்ருர்கள் ? பணமா ? கீர்த்தியா ? மரியாதையா ? அழகா ? ஆரோக்கியமா ? பலமா ? அறிவா ? கல்வியா ? தர்மமா ? சினேகம், அன்பு, காதல் முதலியவைகளா ? என்கிற பல பிரச்னைகளைக் கிளப்பி, ஆசிரியர் அதற்குத் தகுந்த பதிலளிக்கும் பாகம் இப்புத்தகத்தில் வெகு அருமையாக விருக்கின்றது. இது ஒரு குருட்டுப் பெண்ணின் கதை. ஸ்ரீ பங்கிம் சந்த்ரர் தலைசிறந்த நவீனங்களில் ஒன்றெனின் அது மிகையாது.

“ ஈசுவரனுடைய போக்கு விசித்திரமானது என்று, எனக்கு அந்தச் சமயம் தெரியாது. அவருடைய சம்ஸார சக்கரம், தயை தாக்ஷண்யமின்றி அவர் நியமித்த பாதையில் சுழன்றுகொண்டே இருக்கிறது. ஏழையாய் இருந்தாலும், பணக்காரனு யிருந்தாலும், இல்லாதவனுய் இருந்தாலும் அப்பாதையில் அகப்பட்டுக்கொண்டால் நசுக்கப்படுவான். நான் குருடியா யிருப்பதால் எனக்காக சம்சார சக்கரம் இன்னெரு பாதையில் செல்லாது ” என்ற ரஜனியின் வார்த்தைகளில் ஆசிரியர் தமது கருத்தைப் பலவிடங்களில் திணித்திருக்கிருர்.

இக்கதை நல்ல போக்கில் அமைந்திருக்கிறது. சுருங்கக்கூறின், ஆசிரியர் தமது கலைத்திறனை வெகு அழகாக இக்கதையில் புகுத்தியிருக்கிருர் என்று கூறிவிடலாம். மொழிபெயர்ப்பு நன்றுயிருக்கிறது. **எளிய இனிய நடை வாசகர்களுக்கு இன்பமூட்டும் என்பதில் ஐயமில்லை. அல்லயன்ஸ் கம்பெனியார் புத்தகங்களை அழகாக அமைப்பதில் கைதேர்ந்தவர்கள்.** அதற்கு இப்புத்தகமும் ஓர் உதாரணமாகும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.